பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1 | ஞாயிறு 20-8-'39 | இதழ் 7

பொருள் அடக்கம்

ஸ்ரீ அரவிந்த யோகி	... ...	2
காரியக் கமிட்டியின் தீர்ப்பு	... ...	3
லோக சஞ்சாரம்	... ...	7
ஆளுக்குள்ளே ஆளு; எத்தனை ஆளு!	... ...	10
மது மேக ரோகம்	... ...	14
மனப்பான்மை மாறவில்லை	... ...	17
பரதேசத் தபால்	... ...	19
கலையும் ஒழுக்கமும்	... ...	21
கலைஞான வரலாறு	... ...	28
மன நிழல்	... பிக்ஷு	31
புது உறவு	அ. கி. ஜெயராமன்	33
அகத்தியன்	... ...	37
மாஜி காங்கிரஸ்வாதி	... 'ரஞ்சனன்'	41
ஆசாரம் போச்சே!	... சி. ரா. சே.	44
'பாரத தேவி'யைப் பற்றி	... ...	47
சுந்தரத்தின் சூரத்தனம்	... வரதன்	49
வாழ்க்கை	... கு. ப. ரா.	55
பெரியோர் வாக்கு	... ...	56
பிராயச் சித்தம்	பு. வே. சுப்ரமண்யம்	59
முண்டிப்போ!	... அசுவதி	64
நட்சத்திர பலா பலன்கள்	... ...	67
உணவில் உயர்வு—ஒரு வாதம்	... கரிச்சான்	77
மார்க்கோனி	... வெ. ம.	81
அவன் விரும்பினது	... சீதாபதி	86
சோதனை	... ஆர். சேதுராம்	91
திரை உலகம்	... ...	97
புஸ்தக விமரிசனம்	... ...	100
பட விமரிசனம்	... ...	101
மிமிஷக் கதைகள்	... ...	103

ஸ்ரீ அரவிந்த யோகி

ஸ்ரீ அரவிந்தர்
1872-ம் வருஷம் தோன்றினர்
ஆகஸ்ட் 15-ம் தேதியன்று
- 67 வயது ஆகிறது. -

❋

புதுவையில் பொலிவு கொண்ட ஜோதியைக் காண, காந்திஜி சொன்னதுபோல, உலகத்தின் பல பாகங்களிலிருந்து பக்தர்கள் வருகிறூர்கள்.

❋

பூர்ண யோகத்தின் சக்தி ஓங்குக!

காரியக் கமிட்டியின் தீர்ப்பு

வர்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி, சில தீர்மானங்களைச்செய்திருக்கிறது. தற்போதைய காரியக் கமிட்டியின் பேரில் அநேகருக்கு அவநம்பிக்கையும் பகைமையும் உண்டாயிருக்கின்றன. ஆகவே, அந்தத் தீர்மானங்களை ஆராய்வது கடமையாகும்.

இலங்கை அரசாங்கத்தார் இலங்கையில் வாழும் இந்தியர்களை எப்படியேனும் அப்புறப்படுத்திவிடவேண்டும் என்று கொண்டிருக்கிற எண்ணமும் பிடிவாதமும், எந்த முறையிலும் சேர்த்தி இல்லை என்றும் அவ்வாறு பிடிவாதம் பிடித்தால், அதனால், இலங்கைக்குத்தான் நஷ்டம் உண்டாகும் என்றும் ஒரு தீர்மானம்.

இலங்கை இந்தியர்களைப்பற்றி, நாம் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். சமாதான முறையில், இலங்கை - இந்திய பிரச்னை தீரவேண்டும் என்பது நமது கருத்து. ஆனால், சமாதான வழிக்காக காத்துக் கொண்டிருந்து, இந்தியர்கள், இந்தியாவுக்கு வெளியே எங்கே இருந்தாலும் சரி, அவர்கள் அவமானத்துக்கும் ஈனத்துக்கும்| ஆளாவதாயிருந்தால், சௌஜன்ய முறைக்கு, நாம் ஆதரவு கொடுக்கத் தயாராயில்லை.

இலங்கைக்கு வேலையாட்கள் அனுப்பும் பிரச்னையிலிருந்து, இலங்கை - இந்திய வியாபாரம் வரையில், எல்லாப் பிரச்னைகளிலும் இந்திய அரசாங்கத்தார் சிரத்தையுடன் பிரவேசித்து, இந்தியாவின் வல்லமையை, தெளிவுபடுத்தி, இலங்கைக்கு, நல்ல எண்ணத்தை உண்டாக்க வேண்டும். கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி என்ற பேச்சு, இலங்கையில் இனியும் எழாமல், பார்த்துக் கொள்ள வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில், இந்தியர்களுக்கு "கூலி" என்ற பட்டம் கிடைத்தது போதும். இலங்கையை ஆண்ட இந்தியாவின் குழந்தைகளுக்கு, இலங்கையில், "கூலி" என்ற பெயரை, தோழர் குணசிங்காவைப் போன்றவர்கள் உபயோகப்

படுத்துவதைக் கேட்கும் பொழுது, நமக்கு எல்லையற்ற வருத்தமும் ஆத்திரமும் கலந்து, உண்டாகின்றன.

உலகத்துக்கே, நாகரிகப் பிச்சை போட்ட இந்தியாவுக்கும் அதன் குழந்தைகளுக்கும் "கூலி" என்ற பட்டம் கிடைப்பதற்காகவா, இந்தியாவில் முப்பத்தாறு கோடி மக்கள் உயிர்வாழ வேண்டும்? இந்த அவமானத்தை, எவ்வளவு காலம், நம்மவர்கள் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

'உழக்கிலே கிழக்கு மேற்கு' என்ற விசித்திரத்தைப் போல, இந்தியர்களுள் ஹிந்து முஸ்லீம், பிராமணர்—மற்றவர், முதலாளி—தொழிலாளி, கற்றவர்—கல்லாதார் போன்ற விசித்திரப் பிரிவுகள் இருப்பதைக் காண, நமக்கு மனம் நோகின்றது. உலகத்தில் இந்தியனைக் "கூலி" என்று அழைக்கும் அவமானத்தை அடியோடு மறந்து விட்டு, ஹிந்து என்றும் முஸ்லீம் என்றும் பெருமையோடும் பகைமையோடும் சொல்லிக் கொள்வதைக் காண, நமக்கு மிகவும் வெட்கமாயிருக்கிறது.

ஆகவே, இந்தியர்களுக்குப் பொதுவாக நேர்ந்திருக்கும் அவமானத்தை உணர்ந்து, அதற்கு தகுந்தாற்போல, காரியக் கமிட்டித் தீர்மானம் செய்ததைக் குறித்து, நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தியாவின் சம்மதத்தைப் பெறாமல், இந்தியச் சேனைகள் வெளி நாடுகளுக்கு, சிறிது காலமாக அனுப்பப்பட்டு வருகின்றன. உலகத்திலேயே, எத்தனையோ இடங்களில், ஏராளமான மண், பிரிட்டனுக்குச் சொந்தம். அதைக் காப்பாற்றுவதற்கும், தன் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ளுவதற்கும், பிரிட்டன், மற்ற நாடுகளோடு, எந்த நிமிஷமும் எந்த சாக்கைக்கொண்டும் போருக்குப் போகலாம்.

ஆனால், பிரிட்டன் கலந்து கொள்ளும் போர், பிரிட்டனுடைய போர். அதற்கும் இந்தியாவுக்கும் என்ன சம்பந்தம்? அடிமை இந்தியா, பிரிட்டன், ஏனைய நாடுகளையும் அடிமைத் தனத்தில் வைத்துக்கொள்ளச் செய்யும் முயற்சியிலும், பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமா?

ஒரு மனப்படாத இந்தியாவில், யாரைக் கேட்டு, பிரிட்டன், இந்தியச் சேனையை, வெளி நாடுகளுக்குக் கொண்டு போவது அல்லது கொண்டு போகாமலிருப்பது என்று சிலர் விதண்டாவாதம் செய்யலாம்.

காங்கிரசைக் கேட்டால் போதும். அல்லது காந்திஜியைக் கேட்டால் போதும். இஷ்டமிருந்தால், பிரிட்டன், முஸ்லீம் லீக்கையும் கேட்டுக் கொள்ளலாம். இந்தியப் பொது ஜன அபிப்பிராயத்தை அடக்கி யாளும் இந்த ஸ்தாபனங்களை, பிரிட்டன்

கலந்து கொள்ளாமல், இந்தியச் சேனைகளை வெளி நாடுகளுக்கு அனுப்புவது மிகவும் தவறான காரியம்.

ஆகவே, இந்தத் தவறை, இந்திய அரசாங்கத்தாருக்கு உணர்த்த வேண்டியது அவசியமாகும். தவறு என்பதை உணர்த்துவதற்காக, காரிய கமிட்டி ஒரு யோசனை கூறுகின்றது.

இப்பொழுது சிம்லாவில் கூடப்போகும் இந்திய சட்ட சபையில், காங்கிரசைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பிரசன்னமாயிருக்க வேண்டாம் என்பது காரியக் கமிட்டியின் கட்டளை. இதை, நாம் பூரணத் திருப்தியுடன் ஆதரிக்கிறோம். இதுதான் காந்தி போராடும் முறைக்கு அஸ்திவாரமும் அடையாளமும் ஆகும்.

பிரிட்டனுக்கு ஆறுமாத இறுதிக் கடிதம் அனுப்ப வேண்டுமென்று ஸ்ரீ சுபாஷ் போஸ், துடிதுடித்துச் சொல்லுவதற்கும் காரியக் கமிட்டியின் யோசனைக்கும் என்ன வித்தியாசம்என்றால், காரியக்கமிட்டியின் யோசனை காந்தியின் போராட்ட முறையைத் தழுவியதாகும்.

எந்த விஷயத்தை எடுத்துப் பிரசாரம் செய்தால், ஜனங்களுக்குள் அது மின்சார வேகத்துடன் பரவும் என்பது காந்திஜிக்கு நன்றாகத் தெரியும். ராம ராஜ்யம் என்று ஒன்றைக் கண்டுபிடித்து, அதை ஜனங்களுக்குள் பரப்பி, சுயராஜ்யத்துக்கு விளக்கம் செய்திருக்கும் காந்திக்கு, பொது ஜனங்களின் மனப்போக்கு எப்படியோ பிடிபட்டுப் போயிருக்கிறது.

இந்திய சட்ட சபையைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள், வரப்போகும் கூட்டத்தில் ஆஜராக இல்லாமல் போனால், அதுவே, போராட்டத்துக்கு ஆரம்பமாகப் போனாலும் போகலாம். மலையிலே உற்பத்தியாகும் சிறிய அருவி, பள்ளத்தாக்கில், பெரிய ஆறாக மாறும் விநோதத்தைப் போல, காந்தியின் பணிவான வேண்டுகோள், கடுமையான போராட்டத்துக்கு விதையாக மாறும் விசித்திரத் தன்மை கொண்டதாகும். எனவே, சட்ட சபை (காங்கிரஸ்) அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட தீர்மானத்தை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம்.

இன்னும் ஒரே ஒரு தீர்மானத்தைப் பற்றி, நமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுவோம். ஸ்ரீ சுபாஷ் போஸ், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்களை அலட்சியம் செய்தும் எதிர்த்தும் பிரசாரம் செய்தும், காங்கிரசின் கட்டுப்பாட்டைக் குலைக்கப்பார்த்ததால், அவர் எந்தக் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் நிர்வாகப்பதவியில், மூன்று வருஷ காலம் வரையில் இருக்கக் கூடாது என்று காரியக் கமிட்டி தீர்ப்புச் செய்துவிட்டது.

ஸ்ரீ சுபாஷ் பாபு, வேண்டுமென்றே, காங்கிரசின் கட்டுப்பாட்டைக் குலைக்க எண்ணியிராவிட்டாலும், அவரது செயல்

கள், எறக்குறைய, அந்தப் பலனை உண்டாக்கி விட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்கள் தவறு என்று பிரசாரம் செய்வதற்கும் அவைகளைக் கண்டிக்க, அகில இந்திய நாள் என்று ஒரு நாளைக் குறிப்பிட்டுக் கண்டிப்பதற்கும் ரொம்பவும் வித்தியாசமிருக்கிறது.

காரியக் கமிட்டி காங்கிரஸ் மந்திரிமார்களின் பிடிப்புக்குள் அகப்பட்டுக்கொண்டு, சீர்திருத்த மனப்பான்மையை மேற்கொண்டு, புரட்சி மனப்பான்மையைக் கைவிட்டு விட்டு, பிரிட்டனேடு ராஜி பேசத் துணிந்து விட்டது என்று சுபாஷ் பாபு, பழைய காரியக் கமிட்டியின் பேரில் குற்றப் பத்திரிகை படித்த கதை பழங்கதை.

அதே காரியக் கமிட்டி, மீண்டும் பதவிக்கு வந்தபின், அந்தக் கமிட்டியின் பேரில், சுபாஷ் பாபுவுக்கு, எவ்வாறு நல்லெண்ணம் இருக்கும்? ஆகவே, இப்பொழுது, காரியக்கமிட்டி, தம்பேரில் கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொண்டது பழைய மனஸ்தாபத்தினுல்தான் என்று சுபாஷ் எண்ணிக் கொள்ளலாம்.

நமக்கு, எப்பொழுதுமே, சுபாஷ் பாபுவின் நல்ல எண்ணத்தின்பேரில் சந்தேகம் வந்ததே இல்லை. அவர் தீர்க்க தரிசனமும் சூட்சம புத்தியும் படைத்த தலைவரா என்பதிலேதான் நமக்குச் சந்தேகம். அதுவும், சுபாஷ், காந்திக்கே, துர் எண்ணம் கற்பிக்கும் எல்லைவரைக்கும் போன பின்னர், நமக்கு இன்னும் அதிகமான சந்தேகம்.

காந்திக்கு துர் எண்ணம் கற்பிப்பதிலேயா, சுபாஷ் தமது சிப்பாய்த்தனத்தைக் காண்பிக்க வேண்டும்? இந்தியாவின் விடுதலைக்கு நாயகனுகவும் குருவாகவும் விளங்கும் காந்தியின் பேரில், யாரும் சந்தேகம் கொள்ளலாமா? தன்னலம் கருதாத கர்மவீரனை, குறைத்துப் பேசுதல், யாருக்குமே தகாது. காந்தி விஷயத்தில், சுபாஷ் நடந்துகொண்டது மிகவும் பாபமாகும்.

அந்த பாபத்துக்குத்தான், இந்த நடவடிக்கை, பிராயச்சித்தமாகும். படேலும் புலாபாய் தேசாயும் தவறு செய்திருக்கலாம். அதற்காக, காந்தியை, சுபாஷ் பாபு குறைத்தும் தவருகவும் பேசலாமோ? சுபாஷ் பாபுவின் பேரில் காரியக் கமிட்டி நடவடிக்கை எடுத்துக்கொண்டது சரி. மூன்று வருஷ தண்டனை கடுமை என்பது நமது கருத்து.

சுபாஷ் பாபு, காங்கிரசின் கட்டுப்பாட்டை மனத்தில் கொண்டு, இந்த 'நடவடிக்கையை' ஏற்றுக்கொண்டு, வங்காள காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவியை ராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கிறேம்.

லோக சஞ்சாரம்

மிஞ்சினால்—

ஹைதராபாத்தில் சென்ற எட்டு மாதகாலமாக இடைவிடாமல் மும்முரமாக நடைபெற்று வந்த ஆர்யசத்தியாக்ரகம் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த எட்டு மாதங்களுக்குள் பதினாயிரம் பேர்கள் துணிந்து சிறை சென்ற ஒரு இயக்கத்தை நைஜாம் சர்க்கார் அலக்ஷியமாக கருத முடியவில்லை. அவர்கள் அளித்திருக்கும் புதிய சீர்திருத்தம் திருப்திகரமாக இல்லாதபோதிலும், ஆர்ய சத்யாக்ரகத்திற்கு மூல காரணமான மத உரிமை விஷயத்தில், நைஜாம் சர்க்கார் விட்டிருக்கும் அறிக்கையில் ஓரளவு காணும் சமரச மனப்பான்மைதான், சத்தியாக்ரகத்தை நிறுத்த ஆர்ய லீக்கின் நிர்வாக கமிட்டி முடிவு செய்தற்கு காரணம். பொதுஜன அமைதிக்கு பங்கம் ஏற்படாத சந்தர்ப்பத்தை தவிர, வேறு ஒருகாரணங்களுக்காகவும், இனி மத விஷயங்களில் நைஜாம் சர்க்கார் தலையிடாதென்பதை கிரியாம்சையில் காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

கானமயிலாட...!

சமீபத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் தூதராக இலங்கை சென்று, அங்குள்ள இந்தியர்கள் திருப்பி இந்தியாவுக்கு அனுப்பப்படும் விஷயமாக, இலங்கை சர்க்காருடன் பேசி, பதினாறாயிரக்கணக்கான சிங்களவருக்கும் இந்தியருக்கும் விருப்பு மனப்பான்மையை வளர்க்கும்படி உபதேசித்து வந்தாரல்லவா? அதைப் பார்த்தவுடன் ஜஸ்டிஸ் கட்சிக்கும் நப்பாசை விழுந்துவிட்டது போலிருக்கிறது. அவர்களும் ஒரு தூது கோஷ்டியை இலங்கைக்கு அனுப்பி, இந்தியர்கள் நிலையை ஆராய்ந்து ஒரு அறிக்கை தயாரிக்கப் போகிறார்களாம். அதில் ஜஸ்டிஸ் பிரமுகர்கள் நான்கு பேர்கள் இருப்பார்களாம்.

இது மட்டுமில்லை. இனிமேல் வரப்போகும் தேர்தல்களுக்காக தமிழ் நாட்டில் கக்ஷி சார்பாக பிரசாரம் செய்ய பிரமுகர்கள் அடங்கிய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். பாவம்! காங்கிரஸ் மந்திரிசபையை அப்படியே தூக்கி எறிந்துவிடவேண்டுமென்று எவ்வளவு ஆத்திரமான தீர்மானம் செய்திருக்கிறார்கள்!

போனவாரம் அவர்களுக்குஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது, காங்கிரஸ் தேரின் ஒரு அச்சாணியை

கழற்றுவதற்கு. குண்டூர் ஜில்லாவில் நாஸராவ் பேட்டை பொது தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் தேரின் ஆணியை கழற்றுப் போன இடத்தில், ஆணி இன்னும் இறுகித்தான் போனது.

இப்போது இன்னொரு சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஏதாவது ஒரு ஆரம்பம் செய்தாக வேண்டுமல்லவா? உயிர் இன்னும் இருப்பதாக காட்டிக்கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக தென்னாற்காடு மேல் சபை இடைத் தேர்தலுக்கு துணிந்து கஷி முத்திரையோடு கூடிய ஒரு அபேக்ஷகரை நிறுத்தி விட்டார்கள். இந்த ஸ்தானத்துக்கு ஒரு சுயேட்சைக் கட்சிக்காரரும் சனாதனி ஒருவரும் போட்டி போடுகிறார்கள். பேஷாக போடட்டும்! எதிர்ப்பிலே நீந்தி நீந்தித்தான் காங்கிரஸ் இன்று இவ்வளவு உன்னத நிலைக்கு வந்திருக்கிறது. நாசராவ் பேட்டை முதல் பாடம் கற்பித்தது போதாது. தென்னாற்காடு இரண்டாவது பாடம் கற்பிக்கட்டுமே!

விழுந்தவர்கள் போதும்!

பஞ்ச பாண்டவர்கள் சுவர்க்கத்துக்குப் போன கதை எல்லோருக்கும் தெரியும். இகத்திலே பற்று இருப்பவர்கள் எப்படி சுவர்க்கத்தை அடைய முடியும்? தர்மபுத்திரர் அந்தப் பற்றே இல்லாமல், பின்னல் வரும் சகோதரர்களை திரும்பிபார்க்காமலே நடந்தார். அந்த பற்றற்ற நிலை பீமா, அர்ச்சுன, நகுல, சகாதேவ, திரௌபதியருக்கு ஏற்படவில்லை. திரும்பி பின்னல் பார்த்த மறுக்ஷணம் அதே இடத்தில் கீழே விழுந்து விட்டார்கள். மேலே நடக்க முடியவில்லை.

சுயராஜ்ய லக்ஷியத்தை நோக்கி நடந்துகொண்டிருப்பவர்கள் திரும்பிப் பார்த்ததிலே அடைந்த நஷ்டத்தை, இன்று மூன்று பிரமுகர்கள் விஷயத்தில் நிதர்சனமாகக் கண்டு விட்டோம். ஆத்திரம், அவசரம், பதவி மோகம், சுயநலம் இந்த பைசாச எண்ணங்களுக்கு ஆளாகி உயர்நிலையிலிருந்து வழுக்கி விழுந்திருக்கும் நரிமன், கரே, சுபாஷ், இவர்கள் செய்கை நல்ல எச்சரிக்கை நமக்கு! இதுவே நமக்கு மிகப் பெரிய நஷ்டம். இனிமேலாவது, இந்தமாதிரி வழுக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று பார்த்துக் கொள்ள வேண்டாமா?

சுளகு மாற்றினது!

அதாவது பாலைவானத்திலே நெடுந்தூரம் ஏராளமான மூட்டைகளை சுமந்துகொண்டு செல்லும் ஒட்டகத்துக்கு பாரம் அடிக்கடி குறைவதாக, ஒரு பிரமை உண்டாக்கினல்தான் உற்சாகம் குறையாமல், அலுப்புத் தெரியாமல் போகுமாம். இதற்காக அடிக்கடி பிரயாணத்தை நிறுத்தி, சுளகுகளை மாற்றுவார்கள் என்றும், ஒட்டகம் திருப்தி கொள்ளும் என்றும் கதை உண்டு.

இதேமாதிரித்தான் இருக்கிறது தற்போது ஸர்வதேசச் சங்கத்திற்கு இந்தியா கொடுத்து வரும் பங்குப் பணத்தில் ரூ 20000 இனி குறைக்கப்படும் என்பது. இதைத்தான் சர்வ தேசச் சங்கத்தின் விகிதாசார நிர்ணயக் கமிட்டி அறிக்கை

யில் சிபார்சு செய்திருக்கிறது. இப்போது நாம் கொடுத்து வரும் தொகையான பத்து லக்ஷம் ரூபாயில் இருபதினாயிரம் ரூபாய் குறையுமாம்! என்ன தாராளம்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரே காரணத்திற்காக, வருஷா வருஷம் ஒருவித பிரதிப் பிரயோசனமும் நமக்கு கிடைக்காத நிலையில் பத்து லக்ஷம் ரூபாய் வீணாக ஜலமாகக் கரைந்து போகிறதே. பிரதி பிரயோஜனமும், அவசியமான உறவும் உள்ள எத்தனையோ ஐரோப்பிய தேசங்களே அதை உதறிவிட்டு தன்னிச்சையாக நடந்துகொண்டிருக்கையில், இந்தியா மட்டும் ஏன் இதைக் கட்டியழவேண்டும் என்று பாரம் தாங்காத ஒட்டகத்தைப் போல் நான் படித்துப் படித்துச் சொல்லியும் அது காதில் விழவில்லை! கண்ணைத் துடைக்கவா இந்தக் குறைவு ரூபாய் இருபதினாயிரம்?

போதாத குறைக்கு

திடீரென யுத்தம் எந்த சந்தர்ப்பத்திலும் வந்துவிடலாமாம். இந்தியாவை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உத்தேசித்து அதற்காக கீழக்கோடியில் சிங்கப்பூருக்கும், மேற்கே வடனுக்கு இந்தியாவிலிருந்து இதுவரையில் ஆயிரக்கணக்கான படைகள் நம் அனுமதியின்றி அனுப்பப்பட்டு இருக்கின்றன. இந்தியாவை யுத்தத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமானால் கடற்கரைகளும், எல்லைப் புறமும் இருக்கின்றனவே. அவைகளைப் பலப்படுத்திக் கொண்டால் போதாதா? அவைகளில் அதிக பலம் செலுத்துவதற்குப் பதில், செங்கடல் பக்கத்திலும், பசிபிக் சமுத்திரத்திலும் கொண்டுபோய் ஏகாதிபத்தியத்தின் இடங்களை எல்லாம் ஸ்திரப்படுத்திக் கொள்வது என்பதைத் தவிர, இந்தியப் பாதுகாப்புக்கு என்று படைகள் அனுப்புவதாக சொல்வது அசம்பாவிதமாகும்.

அதனால்தான் காரியக் கமிட்டி இந்தியாவில் எந்தப் பாகத்துக்கு யுத்தத்தால் அபாயம் வரும் என்றாலும், அதை பாதுகாப்பதற்குச் செய்யப்படும் எந்த முயற்சிகளுக்கும் மாகாண காங்கிரஸ் சர்க்கார் ஆதரவு கொடுக்குமே தவிர, ஏகாதிப்த்ய சர்க்காருக்கு உட்பட்ட யுத்த ஏற்பாடுகளுக்காக தற்போதையது போன்ற ஏற்பாடுகள் செய்ய சம்மதிக்க மாட்டோம் என்று கூறி இருக்கிறது.

ஆளுக்குள் ஆளு; எதிரிலே ஆளு!

விநாயகம் சாத்விகமான சுபாவம் கொண்டவன். யாரையும் அவன் எடுத்தெறிந்து பேசினதே கிடையாது. அவன் வாயிலிருந்து கரடுமுரடான வார்த்தைகள் வருவதே அபூர்வம். பிறர் மனசு புண்படும்படியான பேச்சுத் தொனி அவன் குரலில் இருக்கவே செய்யாது. அதோடு கொஞ்சம் இளகிய மனதும் கூட. பிறருக்கு ஒத்தாசை செய்வதற்கு அவன் அநேக சந்தர்ப்பங்களில் தயங்கினதும் இல்லை. 'தங்கமான பிள்ளை இல்லையா அவன்' என்று பேரெடுத்திருந்தான்.

இப்படியெல்லாம் பேரெடுத்தவன் மனதில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், நிலையில், மனதில் ஓடின ஓட்டங்களை எல்லாம் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் ருசிகரமாக இருக்கும்.

பஸ்ஸிலே வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ஒரு பஸ் ஸ்டாண்டிலே வந்து நின்றது பஸ். பஸ் ஸ்டாண்டு விஷயங்கள்தான் தெரியுமே. பிரயாணிகள் ஏறுவதற்கு என்று இருந்த இடம் பிச்சைக்காரர் பிச்சை கேட்பதற்குத்தானே இடமாகிவிட்டது. பஸ்ஸில் ஏறி, இறங்கும் பிரயாணிகள் பஸ் அடியில் நிற்பவர்களை எப்படி அலக்ஷியமாக நினைத்துவிட்டுப் போக முடியும்? கையால் உதவி செய்யும், நினைவு இல்லாதபோதிலும் கண்ணால் பார்ப்பதைத் தவிர்க்க முடியாதல்லவா?

விநாயகம் பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டிருந்த ஜன்னலுக்கு நேரேவந்து கையை நீட்டி, 'சாமி, பிச்சை போடமாட்டிங்களா' என்று கோரமான தொனியில் பிச்சைக்கேட்டான் ஒருவன்.

விநாயகம் திரும்பிப் பார்த்தான். எழுபது வயது கிழவன் அவன். கண் குருடு. ஏழு வயதுக் குழந்தை ஒன்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு தள்ளாடி நடந்து அங்கு வந்து நின்றது. அதோடு மட்டுமா? அந்தக் கிழவனுக்கு ஒரு காது இல்லை. அது இருந்த இடத்தில் ஒரு ஓட்டைதான் இருந்தது.

விநாயகம் முகத்தைச் சுளித்துக்கொண்டான். 'சி! என்ன கண்றாவி ஜென்மங்கள், என்று தனக்குள் முனகிக் கொண்டே முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டான். அடுத்த நிமிஷம் ஜேபியில் கை போட்டான். ஒரு அணா காசை எடுத்து பிச்சை கோரக் குரலில் கேட்ட அந்த குருட்டு உருவத்தின் கையில் அதைப் போட்டு விட்டான்.

குருடன் போனதும், முகத்தை விநாயகம் ஜன்னலில் பதித்துக் கொண்டிருந்தான். 'சாமி' என்று மறுபடியும் ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். 'குழந்தைக்குப் பால் இல்லே சாமி, இரண்டு நாளா!' என்றாள் ஒரு பிச்சைக்காரி. விநாயகம் அவளை உற்றுப் பார்த்தான். குழந்தைக்குப் பால் இல்லே, என்கிறாளே பாவம்! என்று ஜேபியில் கைபோடப் போனவனுக்கு என்ன தோன்றியதோ, ஒன்றும் உடனே எடுக்கவில்லை. கை கொஞ்ச நேரம் அதிலேயே தயங்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்த பிச்சைக்காரி மறுபடியும் கையை அவள் முகத்துக்கு நேராக தூக்கி பிச்சை கேட்டாள்.

விநாயகம் முகம் ஒரு தயக்கம் காட்டினது. அந்தப் பிச்சைக் காரிக்கு பதினெட்டு வயதுதான் இருக்கும். அவள் எவ்வளவு கட்டுமஸ்தாக இருந்தாள்! புடவை கொஞ்சம் கிழிசல்தான்! ஆனால் மார்பில் கட்டியிருந்த அந்த ரவிக்கை! விநாயகம் நினைத்தான். 'அட எவ்வளவு ஆடம்பரமான உடலோடு இருக்கிறாள் இவள்; என்ன புது மாதிரி ரவிக்கை. நாகரீகம்! ஹூம்' இதிலே குழந்தை வேறே? வேலை செய்து ஏதாவது சம்பாதிக்கிறதை விட்டு விட்டு, பிச்சையா, என்பது முதல் நினைப்பு.

கையை வெளியே எடுத்து மடியில் போட்டுக்கொண்டான். விநாயகம் கையில் துட்டு வரவில்லை. பிச்சைக்காரி இன்னும் கொஞ்சம் அதிக சாகசம் காட்டினால் வரும் என்று எதிர்பார்த்து அங்கேயே நின்றாள். கெஞ்சினாள். வயற்றில் கஞ்சி இல்லை என்று கத்தின பிச்சைக்காரனுக்கு ஒரு அணா கொடுத்தபோது ஏற்பட்ட பச்சாத்தாபம், இந்தப் பிச்சைக்காரியிடம் ஏற்படவில்லை விநாயகத் துக்கு. காரணம்?

அவன் நினைத்தான்; 'குழந்தையைப் பார்த்தால் பால் சாப்பிடாத குழந்தையாகத் தோன்றவில்லையே. தாயைப் போலவே இருக்கே,' என்று பிச்சைக்காரி விடவில்லை. நச்சினாள். 'என்ன எழவு' என்று கொண்டே சட்டென்று ஒரு சல்லியை எடுத்து அவள் கையில் போட்டுவிட்டு, 'தொலைந்து போ 'சனியன்' இதற்கு எல்லாம் பிள்ளை குட்டி இல்லை என்று குறை. கழுதைகள்,' என்று முணுமுணுத்துக் கொண்டான் விநாயகம்.

'சாமி' என்று மறுபடியும் குரல் கேட்டது. விநாயகம் திரும்பிப் பார்த்தான். ஒரு குஷ்டரோகி. விநாயகம் மனதில் ஒரு கசப்புத் தட்டியது. முகத்தில் ஒரு வெறுப்புக் காட்டினது அதைப் பார்த்

ததும். கை கால்கள் கூழை பாய்ந்துபோன ஒரு கோர உருவம் தேகம் முழுவதும் ஒரே வெடிப்புகள். 'வேறே வேலையில்லே, நல்ல தொல்லை, 'போ போ,' என்று விநாயகம் மெதுவாக வாய்விட்டுக் கூறி அவனை விரட்டினான்.

முதல் குருடனுக்கு ஒரு அணா கொடுத்த விநாயகம், யுவ பிச்சைக்காரிக்கு ஒரு சல்லி கொடுத்தான். இந்தக் குஷ்டரோகியை விரட்டினான். வேடிக்கை இல்லையா? பிச்சைக்காரர்கள் என்றால் எல்லோரும் ஒரே மாதிரிதானே. அதில் வித்தியாசம் இப்படி அதிகரிப்பானேன்?

அப்போது விநாயகம் மனதில் ஓடின நினைப்பு இதுதான். 'தரித்திரம் பிடித்த பயல்கள், தாறுமாறாக ஒழுக்கம் இல்லாமல் ஆரம்ப நாட்களைக் கடத்தி விடுகிறது. அப்புறம் இப்படி விபரீத வியாதிகளைச் சம்பாதித்துக் கொண்டு தெருத் தெருவாக அலைகிறது. கோரமான உருவங்களோடே! தங்களோடு மட்டும் இல்லாமல் ஊர் முழுதும் வியாதியை பரப்பிக்கொண்டு. இவர்களை எல்லாம் எங்கேயாவது ஒரு காலனியில் கொண்டு போய் அடைக்காமல்! கர்ம காண்டங்கள்!' விநாயகம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். இந்த நினைப்புக்குப் பிறகு அந்த கோர ரூபத்தைப் பார்க்க அவன் விரும்பவில்லை. 'சாமி' என்று மறுபடியும் கத்தினான் ரோகி. அந்தக் குரல் அவன் காதுகளில் விழுந்தால்தானே!

அப்போதுதான் விநாயகம் பார்வை, தள்ளி ரோட்டின் எதிரே உள்ள ஒரு இடத்தில் விழுந்தது. ஐயோ! அதைப் பார்த்ததும் விநாயகம் முகம் எவ்வளவு மாறினது. முதலில் பரிதாபம், அடுத்தது அநுதாபம், பிறகு, கசப்பு கலந்த வெறுப்பாக முறையே பிச்சைக்காரர்களிடம் ஏற்பட்ட அவன் மன மாறுதல் இந்தப் பார்வையிலே எவ்வளவு மாறிவிட்டது!

அழுக்கடைந்த துணியால் உடலை மூடிக்கொண்டு, கோணலாக தரையில் படுத்து, விகாரமாகக் கைகால்களைப் படபடவென்று அடித்து கர்ண கடூரமான சப்தத்துடன் அலற்றிக் கொண்டிருந்தான் ஒருவன். வெளியே கை மட்டும் தகர போகிணியைக் கரகரவெனத் தரையில் தட்டிக்கொண்டிருந்தது.

அதைப் பார்த்த உடனே விநாயகத்துக்கு வந்த ஆத்திரம்! 'சீ! பிச்சை வாங்குகிறதிலே இவ்வளவு விகாரமா? இருக்கிறதைப் பத்து மடங்காக ஆக்கி' போகிற வருகிறவர்களையும் பயங்கரப் படுத்திக் கொண்டு! கண்றாவிக்காகப் பயந்து பிச்சை போட்டு விடுவார்கள் என்று நினைப்பு போலிருக்கிறது! இந்த மாதிரிப் பயல்களுக்குப் பிச்சை போடுகிறதே தப்பு! நடுத்தெருக்களில் இந்த கோரம், கண்றாவிகளை விட்டு வைத்திருக்கிறார்களே போலீஸ்காரர்கள்! பயல்களை நாலறை அறைந்து இழுத்துக்கொண்டு போய்த் தள்ளாமல். ஏதோ கூன், குருடு, செவிடு, இதுகள் பிழைக்க முடியாதது, இதுகளுக்குப்

பிச்சை போடலாம் என்று நினைத்தால், அதிலேயிருந்து பிச்சையே பிழைப்பாக வைத்துக்கொண்டிருக்கிற கூட்டம் வேறேயா! நன்ருக எழுதிவைத்துவிட்டுப் போனர்கள் தர்மம் செய், என்று!'

இப்படி நினைத்துக் கொண்டே விநாயகம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பஸ்ஸிலிருந்து கீழே இறங்கி படியேறவும், வாசல் நடையிலே ஒரு குடுகுடுப்பைக்கார சப்தமும், குரலும் கேட்டது. விநாயகம் வரவும், "அதிர்ஷ்டம் வருகுது, உத்யோகம் கிடைக்குது ஐயாவுக்கு, ஒரு வேஷ்டி கொடுப்பாரு" என்று குடுகுடுப்பையை ஒருதரம் அவன் உருட்டினன்.

விநாயகம் நின்று ஒருதரம் விழித்துப் பார்த்தான் அந்தக் குடுகுடுப்பைக்காரனை. அவன் தோளில் தொங்கிக்கொண்டிருந்த துணிக் குவியல்கள் அவன் கண்களில் விழுந்தன.

'டேய்! பேசாமல் போகிருயா இல்லையா, பிச்சை கிடையாது.'

'ஐயா, ஒரு வேஷ்டி...'

'ஒரு அரிசிகூடக் கிடையாது; நட! ஹும்!'

'ஐயாவுக்கு ஒரு பிள்ளைக் குழந்தை...!

விநாயகம் ஆத்திரத்தோடு முன்னல் எட்டு வைத்தான். 'பேசாமல் போகிருயா, கழுத்தைப் பிடித்துத் தள்ளட்டுமா, போடா வெளியே!'

அவன் கண்களில் உண்டான கோபத்தைப் பார்த்த குடுகுடுப்பைக்காரன், அலக்ஷியமாக, 'ஐயாவுக்குக் கோபம் வருகுது, பொல்லாக் கோபம் வருகுது,' என்று படியிறங்கினன்.

விநாயகம் வீட்டின் உட்புறம் திரும்பி நடந்தான். 'தடிப்பயல்கள்! பிச்சையாம் பிச்சை! உலகமே முட்டாள் என்று நினைப்பு போலிருக்கு. அதிரடி பண்ணியே காலத்தைக் கழிக்கிறது. சீ! பிச்சை போடுவதே தப்பு! சீமையிலே மாதிரி சட்டம் கொண்டு வந்து பிச்சையே எடுக்கக்கூடாது என்றிருக்கிருர்களே, அந்த மாதிரிச் சட்டம் இங்கேயும் கொண்டு வந்தால் உருப்படும். சோம்பேறித்தனத்தை வளர்க்கிற வழக்கம் நல்ல வழக்கம்' என்று கொண்டே உள்ளே போனன்.

குருட்டுக் கிழவனுக்கு ஒரு அணு கொடுத்த விநாயகத்தின் அப்போதைய மன நிலைக்கும், இப்போது அவன் வந்திருக்கும் தீர்மானத்திற்கும் எவ்வளவு வித்யாசம் பாருங்கள்.

அகத்தியன் வைத்தியம்

மது மேக ரோகம் (Diabetes)

சென்ற வாரப் பதிப்பில் ஜீரண மது மேகத்தைப்பற்றி எழுதப் பட்டிருந்ததல்லவா? பின்னும் பூரண மது மேகத்தைப்பற்றிச் சொல்வோம்.

பூரண மது மேகத்தின் குணம்: பூரண மது மேகம் என்பது முன் சொன்ன உபத்திரவங்களைச் சீக்கிரத்தில் உண்டாக்காமல், ரோகியை வெகு நாளைக்கு வைத்திருப்பதால் பூரண மது மேகமெனப் பெயர் பெற்றது.

இது நிற்க, முன் கூறப்பட்டிருந்த பத்தொன்பதுவித நீர் ரோகங்களும் தக்க ஔஷதப் பிரயோக சாந்தியில்லாமல் நெடுநாள் உடம்பில் ஊறிப்பலக்குமாயின், மது மேகத்தைப் போலவே (Diabetes) நீரையும் பெற்று, சரீரத்திற்குத் தேன் நிறத்தையும் கொடுத்து மது மேகமெனப் பெயரையும் பெறும்.

இப் பூரண மது மேகத்திற்கு நாளடைவிலும் முற்கூறிய ஜீரண மதுமேகத்திற்கு அதி சீக்கிரத்திலும் இயற்கையாகவே முன் கூறப்பட்டிருந்த உபத்திரவங்கள் யாவும் உபபலமாக இருப்பது மன்றி, இவ் வியாதியின் முதிர்ச்சியானது நாபியையும், குய்யஸ்தானத்தையும் அண்டி நரம்பையும் எலும்பையும் சூழ்ந்து முதுகின் தண்டெலும்புகளை வரிசையாகப்பற்றி ராஜப்பிளவை (Diabetie Carbuncle) என்னும் கட்டிகளையும் உண்டாக்கும்.

மேலும் இவ்வியாதியின் குணம் சிலருக்கு இரத்த ஓட்ட நரம்புகளையும், சுவாசக் குழாய்களையும் பற்றி திரவ ரூபமாக இருக்கும் இரத்தத்தைக் கட்டியாகச் செய்து இரத்தப் பரவலை திடீரென்று நிறுத்தி ரோகியை நசிக்கச் செய்யும்.

மது மேக ரோகங்களை ஆரம்பத்திலேயே கவனித்து தக்க ஔஷதங்களால் நிவர்த்தி செய்யாவிடில், அந்த நீரினால் மெலிந்த ரோகிகளுக்கு (1) சார்விகை (மடக்குக் கட்டி) (2) கற்சபிகை (ஆமையோடு போல் தடித்தெழுங் கட்டி) (3) ஜாலினி (வலைக்கண் போன்ற கட்டி) (4) வினதை (அதோ முகக்கட்டி) (5) அலசை (பேய்ச் சுரக்காய்க்கட்டி) (6) மசூரிகை (கடலைக் கட்டி) (7) சரஷபிகை (கடுகுக் கட்டி) (8) புத்திரணிக் கட்டி (9) பிதாரிகை (நிலப் பூசணிக் கிழங்கு போன்ற கட்டி) (10) வித்திரதி (குத்தல் உண்டாகும் கட்டி) என பத்துவிதக் கட்டிகளை உண்டாக்கும். இக் கட்டிகளின் பெயருக்குத் தக்கவாறு ரோக லக்ஷணங்களும் உண்டு, அவை யாதெனில்:—

(1) சாரவிகை: (மடக்குக்கட்டி) இது கீல்களிலும், மாமிசஸ்தானங்களிலும் உண்டாகிக்கறுத்து அடி அகன்று மடக்குக் கவிழ்ந்தது போலவே யிருக்கும்.

(2) கற்சபிகை: (ஆமை யோட்டுக்கட்டி) குழிகள் விழுந்தும் மினுமினுத்தும் ஒரு வேளை நோவைத் தருவதும் மற்றொரு வேளை நோவைத் தராததுமாயிருக்கும். ஆமை யோட்டை கவிழ்த்து மூடியது போலிருக்கும்.

(3) ஜாலினி: (வலைக்கண்கட்டி) மொந்தாகாரமாக எழும்பி மரத்தின் வேர்களைப்போல் நரம்புகள் சூழப்படுவதும் தடிப்பான நீர் வடிவதும் சீக்கிரத்தில் பரவுவதும் வலையைப்போல் கண்கள் விழுவதுமாக இருக்கும்.

(4) வினதை: (அதோமுகக்கட்டி) வயிற்றில் அல்லது இடுப்பில் கரிய நிறத்துடன் அதிக பருமனாக எழும்பி அதிக உபத்திரவத்தைத் தந்து ரோகியைக் கொஞ்சமேனும் நிமிர வொட்டாமல் குனியச்செய்யும். (அதோமுகம் = குனியச் செய்வது)

(5) அலசை: (பேய்ச்சுரக்காய்க் கட்டி) முதல் தடவையாக இது சரீரத்தில் எந்த விடத்தில் பிறக்கின்றதோ அவ்விடத்தின் சருமத்தின்மேல் நெருப்பால் சுட்டது போல் எரிச்சலை யுண்டாக்கி கறுப்பு, சிவப்பு நிறங்களையடைந்த கொப்பளங்களாக சரீரமெங்கும் வியாபித்து பார்வைக்குப் பேய்ச் சுரைப்பிஞ்சைப் போலவே இருக்கும்.

(6) சரஷபிகை: (கடுகுக்கட்டி) சரீர முழுவதும் நெருக்கமாக கடுகுப் பிரமாணத்தை யொத்த கொப்புளங்கள் சீக்கிரத்தில் உண்டாகி, உடனே உடைந்து உபத்திரவத்தைத்தரும்.

(7) மசூரிகை: (கடலைக்கட்டி) சிறுகடலையைப்போல் சரீர முழுவதும் கொப்புளங்கள் எழும்பி உபத்திரவத்தைச் செய்யும்.

(8) புத்திரணி: (புத்திராதிகக்கட்டி) வரிசை வரிசையாகக் கிளம்பி பருத்தும் சிறுத்தும் ஒன்றின்பின் ஒன்று பிறந்து கூட்டமாக இருப்பதால் புத்திராதிகக் கட்டியெனப்படும்.

(9) பிதாரிகை: (நிலப்பூஷணிக் கிழங்குக்கட்டி) இது நிலப் பூஷணிக் கிழங்கைப்போல் வட்டமாகத் தடித்து மிகு உபத்திரவத்தை யுண்டாக்கும்.

(10) வித்ரதி: (வித்திராதிக்கட்டி) வித்திரம் என்றால் குத்தல். இரத்தக் கட்டியானது ஆரம்பத்தில் தோல், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, சன்ன நரம்பு, கப நரம்பு இவைகளில் கொஞ்சம் கொஞ்சமாக துர் நீர்களைச் சேர்த்து தடித்து நிலைபெற்று விக்கத்தை எழுப்பிக் குத்தல்களைத் தரும்.

மது மேக ரோகத்தினால் இக்கட்டிகள் உண்டாகும்போது, நோயாளிக்கு இரைப்பு, இருமல், வியர்வை, பிரமை, வயிற்றுப் பொருமல், தேஜசுக் குறைவு, சரீரத்தில் கொஞ்சம் வீக்கம், இவைகளை யுண்டாக்குவதுடன் ஆயுதச் சிகிச்சைகளுக்கும் வசப்படாமல், ஒன்றை ஆபரேஷன் செய்த மறுநாளைக்கே மற்றோரிடத்தில் வீக்கங்கொண்டு, உடனே கட்டியாக மாறி வேதனைகொடுத்து எலும்புகளையும் பற்றுகிறது. இதன் முக்கிய காரணம் மது மேக ரோகத்தில் கொதிப்பேறிய இரத்தம் சீழாக மாறி, அதில் வெகு சீக்கிரத்தில் கிருமிகள் சேருவதே யாகும்.

சிலருக்கு இக்கட்டிகள் உண்டாயிருக்கும்போது சரீர எரிச்சல், அசையக் கூடாமை, அதிக தாகம், மிகுந்த காற்றினாலும் அதிக குளிர்ச்சியான வஸ்துக்களினாலும் இடைவிடாது உபசரித்த போதிலும் சகிக்கக் கூடாத சரீர எரிச்சல், அதிகரித்த நீர் இறங்குதல், தணியாத தாகம், மேன்மேலும் நாக்கு வறளல் முதலிய கொடிய உபத்திரவங்களை இப்பிளவைகள் கொடுக்கின்றன.

மனப்பான்மை மாறவில்லை

மந்திரிப்பதவி ஏற்றபிறகு காங்கிரஸ்காரர்களின் புரட்சி மனப்பான்மை மாறிவிட்டது என்று அசூயை கொண்டவர்கள் சிலர் இடைவிடாமல் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். தீவிர வாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ்காரர்கள்கூட அந்த மாதிரி புகார் செய்கிறார்கள்.

அதற்குக் காரணம் மந்திரிகள் தங்கள் செய்யும் காரியங்களைப் பற்றி வாயைத் திறக்காமல் இருப்பதுதான். காங்கிரஸ்காரர்கள் வெளியே இருந்து சர்க்காரை எதிர்த்துக்கொண்டிருந்தபொழுது, அதிகமாகப் பேச்சு பேசினர்கள்; பதவி வந்த பிறகு பேச்சுக்கு இடமில்லாமல் போய் விட்டது. எல்லாம் செய்கையில் நடக்கிறது.

மேலும், நிர்வாகம் நடத்துவது மேடைப் பிரசங்கம் அல்ல. நிர்வாக விஷயங்களை தினந்தோறும் அந்தந்த சந்தர்ப்பங்களில் பொது ஜனங்களுக்கு வெளியிட்டுக் கொண்டே இருக்க முடியாது. முன்பு வாயால் நடந்த போர் பூராவும் இப்பொழுது செக்ரடேரியட்டில் காகிதத்தில் நடக்கிறது என்று சொல்லலாம்.

காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் கைகளைக் கட்டிக்கொண்டு தங்கள் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டிருக்கவில்லை என்பதற்காக இவ்வளவு தூரம் சொல்லுகிறோம். எப்படி அவர்கள் சும்மா இருக்க முடியும்? பிரச்னைகள் பரிசீலனைக்கு இடைவிடாமல் வந்து கொண்டிருக்கும்பொழுது, வெறும் பொழுது போக்க முடியாது.

பம்பரம் அதிகமாகச் சுற்றும் பொழுது அது தூங்குகிறது என்று சொல்லுகிறோம். அந்த மாதிரி மந்திரிகள் மெய்ம்மறந்து வேலை செய்கிறது அவர்கள் தூங்குவது போலவேதான் நமக்குத் தென்படுகிறது.

மந்திரிகள் பம்பரம் போலத்தான் இருக்கிறார்கள் என்பதற்கு இடையிடையே நமக்கு அத்தாட்சிகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அவர்கள் இயற்றியிருக்கும் சட்டங்களும் விதிகளும் அவர்களுடைய வேலையின் ஒரு அம்சம்தான். பனிக்கட்டியில் சமுத்திரத்திற்கு மேல் தெரிவதைப்போல பல மடங்கு உள்ளே அமுங்கியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அதுபோல மந்திரிகள் செய்த சட்டங்கள் எல்லாம் மேலே தெரியும் பனிக்கட்டி. ஆழத்தில் இன்னும் எவ்வளவோ இருக்கிறது.

நிர்வாகத்திலேயே எவ்வளவு வெற்றிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்கு அதிகமாக வெளியில் தெரியாது. நீலன்சிலை சமாசாரம் பழையது; இப்

பொழுது சமீபத்தில் நடந்ததையே பார்ப்போம்.

அவசரச் சட்டம் இயற்றுவதைப்பற்றி இந்தியா சட்டத்தில் கண்ட விதி சென்னையில் உபயோகிக்கப்பட்டு இருக்கிற வகையை யார் எதிர்பார்த்திருக்க முடியும்? எவ்வளவு சிறந்த புரட்சி மனப்பான்மை யுடன் நமது பிரதம மந்திரி அதை உபயோகித்திருக்கிறார்? சரியான சமயத்தில், நியாயவரம்பு சற்றும் பிசகாமல் அதை அமுலுக்குக் கொண்டு வருவதென்றால், நிர்வாகத்தில் எப்பேர்ப்பட்ட ஜாக்கிரதையுடனும், கவனத்துடனும் 'கண்ணில் திரி போட்டுக் கொண்டு' லட்சியத்தை மறக்காமல் நமது மந்திரிகள் வேலைசெய்து கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரியவில்லையா?

ஐ. எம். எஸ். என்ற இந்திய வைத்திய சர்விஸ் விஷயமாக அசெம்பிளியில் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் பொழுது, மந்திரி டாக்டர் ராஜன் வெளியிட்ட விவரங்களை யெல்லாம் படித்தால், காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவு தூரம் மாகாண சுய ஆட்சி என்பதன் சுய ரூபத்தை 'படித்துப் படித்து' அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியும் மந்திரி சபைகளும் லட்சியத்தை மறக்கவில்லை. அதில்தான் கண்ணாய் இருக்கிறார்கள் என்பதற்கு சமீபத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தின் நடவடிக்கைகளை அத்தாட்சி. தேவையிருந்தால் காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்யவும் தயாராக இருக்கிறார்கள். சந்தர்ப்பம் மட்டும் சரியானதாக ஏற்பட வேண்டும். அதிலிருந்துதான் முதல்தரமான ஒரு நெருக்கடியும் போரும் ஏற்படும்.

புரட்சி மனப்பன்மை இருப்பது மட்டும் பெரிதல்ல; அதைப் பிரயோகிப்பதில்தான் திறமை இருக்கிறது. போர் நடத்த காந்திஜிக்குத் தெரியாமலா சிவக்கிராமத்தில் போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்? போர் நடத்த வேண்டிய சந்தர்ப்பம் வரவில்லை. எப்படி ஆந்திர மாகாணத்தைப் பற்றிய பிரச்னையில் மந்திரிகள் ராஜிநாமாச் செய்ய அசெம்பிளியின் உத்தரவும் பலமும் இருக்க வேண்டும் என்று பிரதம மந்திரி சொன்னாரோ அந்த மாதிரி மறுபடியும் போர் நடத்த நாட்டின் உத்தரவும் பலமும் வேண்டும். அது இப்பொழுது கிடைக்காது என்றே காந்திஜி சும்மா இருக்கிறார். பட்டாசு திரியில் யிருக்கும் நெருப்பு மருந்திடம் போகும் வரையில்தான் தாமதம். போய் விட்டால் பிறகு நொடி கூட தாமதம் இல்லை.

பரதேசத் தபால்

கலாசாலை மாணவர்களுக்கு,

எல்லோரிடமும் போவதைவிட இரண்டு பங்கு அதிகமானபயத்துடனேயே உங்களிடம் வருகிறேன். ஏனெனில், பலரும் கலாசாலை மாணவர்களைப்பற்றி பலவாருகப் பேசி, எழுதியதின் பயனுக, நாங்கள் உங்களைப் பார்க்க வந்தால், நீங்கள் எங்களை முறைத்துப் பார்க்கிறீர்கள். ஓஹோ! தமிழோ? என்று கோபம் கலந்த சிரிப்பு உங்களுக்கு வருகிறது.

'தேசியத்திற்கு மாணவர்கள் எதிரிகள்' என்னும் அவச்சொல் உங்களுக்கு வந்துவிட்டது. இதனுல் உங்களுக்கு அதைச் சொல்லுகிறவர்கள் மீது கோபம் அதிகமாகப் போய்விட்டது. கடைசியில் யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம் என்று நினைத்துப் பார்க்க சமயம் வாய்க்கவில்லை. யோசித்துப் பார்த்தால் இருவருமே தோல்வி யடைந்தவர்களாகி விடுகிறீர்கள்!

மாணவர்கள் நிதான புத்தியுள்ளவர்கள். வயதாக ஆகத்தான் கோபம், குரோதம் எல்லாம் வருகிறது. ஆகையால் உங்களோடு சேர்ந்து நானும் நிதானித்துப் பார்க்கிறேன். உங்களை 'ஒரு வழியில் போகாமல் அடிப்பது இந்த மேடைப் பிரசங்கிகள் தான்' என்று நீங்கள் சொல்லுகிறீர்களா! ரொம்ப சரி! நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

'மாணவர்கள் அரசியல் விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாமா, கூடாதா என்ற கேள்வி அடிக்கடி எழுந்து உங்களைத் தொந்திரவு கொடுக்கிறதாக்கும்! ஓஹோ! சரி. அது நியாயமான சந்தேகந்தானே! அதற்கு ஒரு விதமாக முடிவு கட்டி விடலாம். நாளைக்கு அரசியல் முன்னேற்றத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியவர்கள் நீங்கள். சுயராஜ்யம் வந்தால் அனுபவிக்கப் போகிறவர்கள் நீங்கள். எனவே, அவசரவாதிகளாக இருக்காமல், எது சரி, எது தப்பு என்று ஆராய்ந்து அறிய வேண்டியது முதல் கடமை.

அதில் நீங்கள் கொஞ்சம் நிதானமாக இருந்தால்தான் நல்லது. பெரியவர்கள் அரசியலில் குட்டுப் பட்டவர்கள். ஆகையால் அவர்கள் யோசித்து, சண்டைபோட்டு,

ஒரு முடிவுக்கு வரட்டுமே! அதைப் பின்பற்ற நீங்கள் ஆரம்பிக்கலாம். மேலும் நாட்கள் ஆக ஆக, எது நல்லது கெட்டது என்பதை இறந்த காலம் காட்டிவிடும். ஆகையால் சரியான வழியில் நீங்கள் நிச்சயம் நடக்க முடியும். எனவே, அரசியல் சண்டைகளில் நீங்களும் புகுந்துவிட வேண்டாம். அதை ஜாக்கிரதையாக மாத்திரம் கவனித்துக்கொண்டு வாருங்கள்.

அடுத்த படியாக சுதேசி விஷயம். 'சீமைத் துணிகள் காடு முரடாக இல்லை. வண்ணான் மடிப்பு சீமைத் துணிகளில நிற்பதைப் போல், கதரில் நிற்பதில்லை! ஒரு யானை, குதிரையைப்போல் அவ்வளவு கனமாக இருக்கிறது கதர்—" என்றெல்லாம் நீங்கள் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. புத்திசாலிகள் அது மாதிரி அசட்டுப் பிசட்டென்று பேத்தவும் மாட்டார்கள். ஏனென்றால், எவ்வளவோ பெரிய காரியத்தில் இறங்கப்போகும் நீங்கள், இவ்வளவு சிறிய தியாகம் செய்யக் கூடாதென்றால், அது மிகவும் கேவலம்.

நீங்களெல்லோருமே'கதர்தான் வாங்குவது' என்ற தீர்மானம் செய்து கொள்ளுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். எத்தனை ஏழைகளுக்கு, உணவில்லாமல் தவிப்பவர்களுக்கு, அரை வயிற்றுக்காவது உணவு தேடிக் கொடுக்கிறீர்கள் தெரியுமா!

உணவையும் உடையையும் பற்றிய சந்தேகங்கள் தீர்ந்த பிறகு பேசும் பேச்சுத்தான் பாக்கியாக இருக்கிறது, பேசுவது, து! மொத்தத்தில் பேசுவதில், மேடையிலேறிப் பிரசங்கங்கள் செய்வதில், மாணவர்களுக்கு நிகர் மாணவர்களேதான் சொல்ல வேண்டும். அவ்வளவு நெருப்புப்பொறி பறக்கும் வார்த்தை யழகு! அரசியல் வாதிகளெல்லாம் அப்புறம்தான்! மாணவர்களுடைய பேச்சினால், சில சமயங்களில் பாஷைக்கே ஒரு கௌரவம் உண்டாகி விடுகிறது.

ஆனால் அந்த கௌரவம் எல்லாம் வேறு பாஷைகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது. பாஷை மனப்பிராந்தி, தாய்ப் பாஷை அடைய வேண்டிய பெருமையை அடித்துக் கொண்டு போய்விடுகிறது. ஆங்கிலத்திலோ அல்லது மற்ற பரதேசப் பாஷைகளில் பேசினால்தான், ஒருதனிக் கௌரவம் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ என்னமோ? ஆங்கிலத்திலேயே நினைக்கிறீர்கள், ஆங்கிலத்திலேயே எழுதுகிறீர்கள். இது ஏன்?

மந்திரி ராஜன் தமிழில்தான் பேசுவார்; எழுதுவார். அவர் ஒரு தரம் பேசிக்கொண்டிருக்கையில், "ஆங்கிலத்தில் பேசலாம், எழுதலாம், சண்டைபோடலாம். ஆனால் எல்லாம் ஆங்கிலத்தில் செய்ய நம்மால் முடியுமா? சீமைக்குப் போய் பெரிய பெரிய பரீக்ஷைகள் கொடுத்துவிட்டு வந்த நம் நண்பர்கள்கூட ஆங்கிலத்தில் சற்று அழ முடியாது"— என்று வெகு அழகாகச் சொன்னார். எனவே, நமது தாய்ப்பாஷையில் நமது கவனத்தைக் கொஞ்சம் செலுத்துவோம். கொஞ்சம் தமிழில்தான் பேசிப் பாருங்களேன்!

ஒரு கர்நாடகம்.

கலையும் ஒழுக்கமும்

(வ. ரா.)

பாதுஷா அவுரங்கசீப், டில்லியில் தமது அரண்மனை உப்பரிகையில் நின்றுகொண்டிருந்தார். பாதுஷாவின் பக்கத்தில் வஸீர் அதாவது பிரதம மந்திரி. கீழே ராஜவீதியில், ஏராளமான ஜனத்திரள்.

"எதற்காக கூட்டம்" என்று பாதுஷா வஸீரைக் கேட்டார். "சங்கீத ரஸிகர்கள் யாவரும் சேர்ந்து சங்கீதத்துக்குப் பாடை கட்டி தூக்கிக் கொண்டு போய், அதைக் குழியில் புதைக்கப் போகிறார்கள்" என்று வஸீர் பதில் சொன்னார். "ஆகா! அப்படியானால், அவர்களை ஆழமாகக் குழியை வெட்டி, அதில் சங்கீதத்தைப் புதைக்கச் சொல்லுங்கள். புதைக்கப்பட்ட சங்கீதம் வெளியே வராமல்படிக்கு குழி, ஆழமாக இருக்கட்டும்" என்று பாதுஷா அழுத்தமாகச் சொன்னார்.

குர் ஆனை ஏடுகளில் எழுதி, அதை விற்று, தமது தினசரி வாழ்க்கையை நடத்தி வந்த தவசியைப்போன்ற பாதுஷா அவுரங்கசீப் அவர்களுக்கு, சங்கீதத்தின்பேரில், ஏன் கோபம் உண்டாக வேண்டும்? சங்கீதத்தினாலே, தவமும் ஒழுக்கமும் கெட்டுவிடும் என்பது அவருடைய கருத்தா?

பெரிய இடத்துக் கதைக்குப்போகவேண்டியதில்லை. நான் சிறு பிள்ளையாக இருந்த பொழுது, எனக்கு நாடகத்தில் மிகவும் பிரியம். எப்பொழுதும் நாடகக்காரர்களின் கூட்டத்திலேயே இருப்பதற்கு எனக்கு ஆசை. ஆனால் என் உறவினர்களுக்கு அது பிடிப்பதில்லை.

"நாடகக்காரர்களோடு சேராதே! சேர்ந்தால், வீணாகக் கெட்டுப் போய்விடுவாய். நல்லது ஒன்றும் உனக்குப்படியாது. வேண்டாம். அவர்களோடு சேராதே" என்று அவர்கள் எனக்கு எச்சரிக்கை செய்த வண்ணமாக இருந்தார்கள். இவர்கள் ஏன் இவ்வாறு எச்சரிக்கை செய்யவேண்டும்? பாதுஷாவுக்கு சங்கீதக் கலை பிடிக்கவில்லை; என் உறவினர்களுக்கு நாடகக் கலை பிடிக்கவில்லை.

புராணங்களிலே, வேடிக்கை ஒன்றைக் காணலாம். ஊசி முனையில் நின்று தவம் செய்த முனிவர்களின் கதைகளைக் கேட்டிருப்பீர்கள். உக்ரமான தவம் செய்யும் முனிவர்களின் தவத்தைக் கெடுக்க, தேவேந்திரன் நடனப்

பெண்களை அனுப்புவதுண்டு, என்று நம்மவர்கள் படித்தும் கேட்டும் இருப்பார்கள்.

விசுவாமித்திரன் கடுந்தவம் புரிந்த சமயத்தில், தேவராஜன், தேவதாசியான மேனகையை பூலோகத்துக்கு அனுப்பி, விசுவாமித்திரன் செய்துவந்த தவத்தைக்கெடுக்க முயற்சி செய்தான், என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னொன்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

தவத்திலே ஆழ்ந்து கிடந்த பரமசிவன், சித்தம் திரும்பி, தன்னைக் கவனிக்கமாட்டாரோ என்று அஞ்சி, பார்வதி தேவியார் பரமசிவனுக்கு முன்னே நர்த்தனம் செய்து, அவருடைய தவத்தைக் கலைத்ததாகவும் கதை உண்டு. நர்த்தனக் கலைக்கும் தவத்துக்கும் விரோதமா?

பொதுவாகப் பார்த்தால், கலைகள் யாவுமே, மனிதர்களின் நல்லொழுக்கத்தை வேரோடு கல்லி, அவர்களைக் கெடுத்து விடுகின்றன என்று ஒருவித எண்ணம் இருந்து வருகிறது. சங்கீதம், சித்திரம், சிற்பம், நாடகம், பொதுவாக இலக்கியம் முதலியவைகளால், உலகம் அதாவது மனிதவர்க்கம் கீழ்நோக்கிச் செல்லுகின்றதே யல்லாமல், மேல் நோக்கிச் செல்லவில்லை என்று பிடிவாதமாகப் பலர் எண்ணி வருகிறார்கள்.

ஆனால் கலா ரஸிகர்களோ, வேறு விதமாக அபிப்பிராயப் படுகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிப்போம். "மொட்டு மலர்வதைப் போலவும் செடி மரமாக வளர்வதைப்போலவும் இளதளிர் இலையாக மாறுவதைப் போலவும், காய் கனியாக மாறி ருசிப்பதைப்போலவும் தென்றல் காற்றினால் ஒருவித அனுப்புத்திர்வும், உற்சாகமும் ஏற்படுவதைப் போலவும் கலை என்பது மனித வளர்ச்சியைக் காண்பிக்கிறது.

"கலை என்பதே இயற்கை வளர்ச்சியாகும். இயற்கை வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கும் கலைகளை மறந்து, ஒழுக்கம் ஒழுக்கம் என்று பித்தலாட்டம் செய்தால், அதனால் ஒழுக்கம் விருத்தி யடைவதில்லை. அதனால் சூதும், வஞ்சகமும், ஏமாற்றமும் தான் அதிகரிக்கின்றன.

"ஒழுக்கம் என்பதும் தவம் என்பதும் இயற்கை விதிக்குப் பொருத்தமில்லாத ஒருவித ஹடயோக மார்க்கம். அதனால் பொய்யும் பாசாங்கும் விருத்தி யடையுமே யல்லாமல், மனிதனுக்கு இயல்பாகக் கிடைக்கவேண்டிய இன்பமே கிடைக்காது. உயர்ந்த லட்சியத்தை வாயால் பேசி, வாழ்க்கையில் தடுமாற்றமடைந்து, சீர் குலைந்து போன புத்த சமயத்தைப் பாருங்கள்.

"ஜீவகாருண்யம் என்பது அந்த மதத்தின் அடிப்படையான கொள்கை. அந்தக் கொள்கையைக் கொண்டவர்கள் மாமிசம் சாப்பிடலாமா? ஆனால் நடைமுறையில் நாம் என்ன பார்க்கிறோம்? பௌத்தர்களில் பெரும்பாலோர் மாமிசம் உண்ணுகிறார்கள். ஆகவே இயற்கைக்குச் சிறிதும் பொருந்தாத சில

கட்டுப்பாடுகளை உண்டாக்கிக் கொண்டு, ஒழுக்கம் ஒழுக்கம் என்று பேசி, முடிவில் வெறும் வேஷதாரிகளாக ஆகலாமா" என்று கலா ரஸிகர்கள் சொல்லுகிறார்கள்.

கலா ரஸிகர்கள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது. ஒழுக்கத்தை வற்புறுத்திப் பேசும் உத்தமர்களின் பேச்சிலும் உண்மை இருக்கிறது. ஆனால் ஒழுக்கமும் கலையும் பரஸ்பரம் விரோதமானவை என்ற எண்ணம் பிடிவாதமாக உலகில் இருந்து வருகிறது. ஆகவே, கலாரஸிகர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தை அலட்சியம் செய்து விடுவதா? அல்லது ஒழுக்கம்தான் உயர்ந்தது என்று கொண்டு, கலையைத் தள்ளிவிடுவதா? இந்த தர்ம சங்கட நிலையில், எனக்கு ஒரு சிறு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

இரண்டு பேரும், உத்தேசம் பதினாறு வயதுள்ள மாதுகள். ரூபலாவண்யத்தில் இருவரும் ரதியைப் போன்றவர்கள். பேச்சிலும் வினயத்திலும் ஸரஸ்வதியைப் போன்றவர்கள். எந்த வகையிலும், ஒருவர் மற்றவருக்குச் சளைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இருவருக்குள்ளும் வாக்குவாதம். ஒருவள் சொல்லுகிறாள்; "நான் தான் சரஸி; நான்தான் சிங்காரி; நான்தான் வினயஸ்தி; நான் தான் வாக்விலாஸினி" என்று.

மற்றவளோ, இதே பாடத்தை முழக்கமாகத் திருப்பிப் படித்துவிட்டாள். பஞ்சாயத்து இல்லாமல், தீர்ப்பு அகப்படுமா? அவர்கள் இருவரும், ஒரு பெரியவரிடம் சென்று தங்கள் கட்சிவாதத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். பெரியவர் இரண்டு கட்டழகிகளையும் ஒவ்வொருவராகச் சிறிது நேரம் கவனித்துப் பார்த்தார். கடைசியாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டு, "ஒருத்தரைப் பார்த்தால், அவர் மற்றவரைக் காட்டிலும் எல்லா வகையிலும் உயர்ந்தவர்" என்று தோன்றுகிறது என்ற பதில் சொன்னார். இது தர்ம சங்கடமான நிலைமையை சமாளித்துக் கொள்வதற்காகச் சொன்ன பதில் அல்ல. இது உண்மையான பதில்தான்.

ஆகவே, கலைக்கும் ஒழுக்கத்துக்கும் இடையே ஆதாரமில்லாமல் ஏற்பட்டிருக்கும் விரோதத்துக்குக் காரணம் என்ன? கலையும் ஒழுக்கமும்—இரண்டும் மனித வர்க்கத்துக்கு அவசியமானவை என்ற முடிவுக்கு வருவோமானல், அவைகள் இரண்டையும் எப்படி இசைத்துப் பொருத்துவது?

விஷத்தையும் மருந்தாக உபயோகப்படுத்தலாம் என்று சொல்லுகிறார்கள். இது உண்மைதான். விஷத்தையே மருந்தாக உபயோகப்படுத்தும் சக்தி மனிதனுக்கு இருக்குமாகில், கலையையும் ஒழுக்கத்தையும் விரோதத்தைத் தீர்த்து ஒன்றுபடுத்த முடியாதா?

எந்த விஷயத்தையும் பற்றி யோசித்து பகுத்தறிவை உபயோகப்படுத்தினல், அதற்கு பரி

காரத்தைத் தேடிக்கொள்ள முடியும். யோசிக்காமலே, மூதாதைகளின் வழி என்று சொல்லிவிட்டால், மனிதனுடைய அறிவு துருப்பிடித்துப் போகும் என்று நிச்சயமாகச் சாபம் கொடுத்துவிடலாம். கல்கத்தா நவாப் ஒருவர் செய்தது மாதிரி செய்தால் என்ன செய்கிறது? அது என்ன என்று கேட்கிறீர்களோ, சொல்லுகிறேன்.

அந்திப் பொழுது. கல்கத்தா வீதியில், பழைய நவாப் வமிசத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் 'பேடா' போய்க்கொண்டிருக்கிறார். மிகவும் கம்பீரமான நடை, நிதானமான போக்கு. இவ்வாறு நடந்துகொண்டிருக்கையில், அவரிடம் அவரது வேலையாட்களில் ஒருவன், ஓடிவந்து, "அரண்மனை தீப்பிடித்து எரியுதுங்க" என்றான். "சரி போ" என்றார் நவாப். மறுபடியும் சிறிது நேரத்துக்கெல்லாம், அதே ஆள் வியர்க்க வியர்க்க ஓடிவந்து, "அரண்மனை பாதி போய்விட்டது" என்றான். சரி போ என்றார் நவாப். மூன்றாம் முறையாக, ஆள் வந்தான். "அரண்மனை எரிந்து சாம்பலாகிவிட்டது" என்றான். "அப்படியா? மூன்று மூங்கில் குச்சிகள் போய்விடுகின்றன என்பதற்காக, மூதாதைகளின் நடையை என்னால் விட்டுவிட முடியுமா" என்றார் நவாப்.

முன்னோர்களிடம் பக்தி வேண்டியதுதான். ஆனால் அந்த பக்தியாலே, புத்தி கெட்டுப் போய்விடக்கூடாது. அந்த பக்தியினாலே, புத்தி வளர்ந்தால்தான், பக்தியை வைத்துக்கொள்ளலாம். புத்தியை மழுங்கச் செய்யும் பக்தி முட்டாள்தனமாகும். அதற்கு பக்தி என்று பெயர் அல்ல.

கலையால் உண்மையாகவே ஒழுக்கம் கெடுகின்றதா என்பதைப்பற்றி, நன்றாக யோசிக்க வேண்டும். கலை என்பது என்ன? ஒழுக்கம் என்பது என்ன என்பதைப்பற்றியும் தெளிவாக யோசிக்கவேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் விரும்புவது இன்பம். எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் ஆசைப்படுகிறான். இந்த ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியவைகள் சங்கீதம், சிற்பம், நர்த்தனம், நாடகம் முதலிய கலைகள் என்று ஒரு கட்சியார் சொல்லுகிறார்கள்.

ஆனால் இன்னொரு கட்சியார் என்ன சொல்லுகிறார்கள் என்றால், "எதற்கும் ஆதாரமாயிருப்பது சக்தி; அந்தச் சக்தியைச் சேர்ப்பதுதான் புத்திசாலித்தனம். சக்தியைச் சேர்த்துக் கொள்ளாமல், வெறும் ஆனந்தத்தை அனுபவிக்கப் பார்ப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை வைப்பதற்குச் சமானமாகும். மேலும் இன்பம் என்பதே ஒருவித மயக்க வஸ்துவாகும். போதையை விரும்புவது கூடாது" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

வெறும் மயக்கத்தைக் கொடுக்கும் இன்பத்தை நாடுவது வீணான வேலை என்று யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் அரசனை நம்பி புருஷனைக் கை

விட்ட கதையைப்போல், சக்தியை எதிர்பார்த்து இன்பத்தை இழக்க வேண்டுமா என்று சிலர் ஆத்திரப்படலாம். கலா ரஸிகர்களுக்கும் ஒழுக்கத்தை வற்புறுத்துகிறவர்களுக்கும் உள்ள மாறுபாடான எண்ணம் இதுதான். ஆகவே, நாம் யோசிக்க வேண்டியது என்ன? கலைகளின் மூலமாக உண்மையான சக்தி ஏற்படுமா? ஒழுக்கத்தின் மூலமாக இன்பம் உண்டாகுமா? இவை யிரண்டையும் யோசிக்க வேண்டும்.

சிற்றின்பத்தை வெறுக்கும் சிவபக்தர்கள் கூட என்ன செய்கிறார்கள் தெரியுமா? அர்த்த நாரீசுரனை பரமசிவனைப் போற்றுகின்றார்கள். பார்வதி சமேதரான பரமேசுவரனைத் துதிக்கின்றார்கள். பார்வதி பெண், பரமசிவன் ஆண். பெண் சேர்க்கையை சிற்றின்பம் என்று சொல்லும் பக்தர்கள், பார்வதி, பரமேசுவரன் என்று "ஆண், பெண்ணைப் படைத்து, பாவித்து" கடவுளை ஸ்தோத்திரம் செய்கிறார்கள். ஆகவே, ஆணும் பெண்ணும் சேர்ந்தால் மட்டும் சிற்றின்பம் அல்ல என்பது தெளிவாக வில்லையா?

சக்தி ஸ்வரூபமான ஆணும் பெண்ணும் கூடினால், சிற்றின்பம் பேரின்பமாதல் கூடும் என்று தெரிகிறதல்லவா? வல்லமை இல்லாத பொருள்கள் கூடினால், பூசலும் இன்ப மயக்கமும் ஏற்படும். ஆனால் வல்லமை பொருந்திய உயிர்கள் கூடினால், ஆனந்தம் உண்டாவது நிச்சயம். இதைத்தான் பார்வதி பரமேசுவரன் என்ற அர்த்த நாரீசுர உபமானம் காண்பிக்கிறது.

ஆகவே, இயற்கையின் நுட்பங்களை அறிந்த பெரியார்கள் கலைகளைத் தள்ளுவதில்லை, ஒழுக்கத்தையும் இகழ்வதில்லை. பார்வதி பரமேசுவரனைச் சேர்த்து, எப்படி ஜனங்கள் ஸ்மரணை செய்கிறார்களோ, அதேபோல, கலையையும் ஒழுக்கத்தையும் சேர்த்து, வாழ்க்கையில் பொருத்தி, நடத்திக் காண்பிக்கின்றார்கள். ஆகவே, எத்தகைய கலை வேண்டும்?

முன்னொரு காலத்தில், பிரம்மாவுக்கு ஒரு ஆசை உண்டாயிற்று. என்ன ஆசை? இதுவரையிலும் படைத்த பெண்ணைக் காட்டிலும் வனப்பில் உயர்ந்த பெண்ணைப் படைக்கவேண்டும் என்று அவருக்கு ஆசை. அந்த ஆசை உடனே பூர்த்தியாயிற்று. அந்தப் பெண்ணுக்கு அகல்யை என்று பெயரிட்டார்.

யார், எல்லா உலகங்களையும் முன்றேமுச்சால் நாழிகைக்குள் சுற்றித் தம்மிடம் வந்து, அகல்யையைக் கேட்கிறார்களோ, அந்த புருஷனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதாக பிரம்மா விளம்பரப் படுத்திவிட்டார். தேவேந்திரன் முதல் எல்லா தேவதைகளும் தத்தம் வாகனங்களில், ஏறி, உலகங்களைச் சுற்றிவந்தார்கள்.

ஆனால் கௌதமமுனி என்ற தவ சிரேஷ்டர் தமது ஆத்மஞான மகிமையால், பந்தயத்தில் ஜயித்து, பெண்ணைக் கேட்டார். பிரம்மா அகல்யையை கௌதம முனிக்கு பாணிக்ரகணம் செய்து கொடுத்துவிட்டார்.

அகல்யை கௌதமரோடு வாழ முடியாமல் கல்லாய் சமைந்த கதை உங்களுக்குத் தெரியும். ஸ்ரீராமனுடைய பாத தூளி பட்டு, கல்லாய்ச் சமைந்துகிடந்த அகல்யை உயிர் பெற்று எழுந்தாள். ஒழுக்கத்தில் கௌதம முனியும் சரி, ஸ்ரீராமனும் சரி, நிகரற்றவர்கள் என்று சொல்லலாம்.

அகல்யை என்ற இயற்கை கலை, கௌதம முனியின் நல்லொழுக்கம் என்ற கொடிய தீயால் அழிக்கப்பட்டுப் போய்விட்டது. ஆனால் ஸ்ரீராமனது ஒழுக்கம் என்ற கருணை வெள்ளப் பெருக்கால், அகல்யை என்ற கல் உயிர் பெற்று எழுந்து விட்டது. ஆகவே, எந்த ஒழுக்கத்துக்கும் கலைக்கும் விரோதம், எந்த ஒழுக்கத்துக்கும் கலைக்கும் தீவிர நட்பு என்பதற்கு, மேலே சொன்ன கதையை கொஞ்சம் கிளறிப் பார்க்கலாம்.

தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டு, உலகத்தைப்பற்றி சிந்தனை யில்லாமல், ஆத்ம ஞானம் பெற்று, அதன் மூலமாக ஒழுக்கத்தை நாடும் மனிதனுக்கு கலை பிடிக்காது. அவன் மூலமாக, அவனுடைய நடையின் மூலமாக, கலை நசித்துப் போகும். ஏன்? ஆதரவு இல்லாமையாலே.

உலகத்தைப் பாதுகாக்கும் லட்சியத்தையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தை நாடும் ஸ்ரீராமனைப் போன்ற வீரர்களின் மூலமாக கலை பெருக்கடையும் என்பதில் சந்தேகமில்லை. நல்லொழுக்கத்துக்கு அடிப்படையாக இருக்கும் மனோ பாவத்தில் வித்தியாசங்கள் உண்டு என்பது கௌதமன், ராமன் என்ற இரண்டு பெரியார்களிடமிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

வாழ்க்கை பொய் என்ற ஆத்ம ஞானத்தால் ஏற்படும் நல்லொழுக்கத்தால் கலைகள் யாவும் சாகத்தான் செய்யும். ஆனால் வாழ்க்கை என்பது சக்தி, வாழ்க்கை என்பது ஆனந்தம். வாழ்க்கை என்பது லீலா விநோதங்கள் என்ற ஞானத்தால் ஏற்படும் நல்லொழுக்கம் என்ற பாதுகாப்பு, கலைகளை வளர்த்துக் காக்கும் வேலிகளாக அமையும். சௌரியத்தோடும் சக்தியோடும் அன்போடும் கூடிய நல்லொழுக்கம் என்ற பாத்தியிலே, கலைகள் என்ற பயிர்கள் செழிப்பாகப் பயிராகின்றன.

எல்லாம் பாழ் என்று மனித வர்க்கத்தின் பேரிலும் பொதுவாக ஜீவராசிகளின் பேரிலும் வெறுப்பு ஏற்பட்டதன் காரணமாக உண்டாகும் நல்லொழுக்கம் கலைகள் என்ற பயிரைத் தீய்த்து மாய்த்து விடும்.

இன்பத்தால் மனிதன் பலவீனம் அடையக் கூடாது. பலவீனத்தை விருத்தி செய்யும் இன்பத்துக்கு விதையாக இருக்கும் கலைகள் மனிதவர்க்கத்துக்குத் தேவையில்லை. ஆனால் ஒழுக்கம் என்ற சாக்கிலே, மனிதன் பாசாங்குப் பிண்டமாகி, தனது உண்மையான வல்லமையை இழப்பானாகில், அந்த ஒழுக்கம் மனிதவர்க்கத்துக்கு தேவையில்லை.

உயிர்ப்பசை இல்லாத ஒழுக்கம் இயந்திரத்தின் போக்கைப் போல, சாரமில்லாத சங்கதியாகும். ஞானச்சாந்து இல்லாத கலையால், மனிதன் உயர்வதில்லை. மனிதன் மிருகப் பிராயம் எய்தி, ஆகாரம் நித்திரை போன்றவைகளில் உழன்று, பரிதாப மரணத்துக்கு ஆளாகிறான். ஞானச் சாந்து உள்ள கலையை விருத்தி செய்வதுதான் மனிதனுடைய முயற்சியாக இருக்க வேண்டும். உயிர்ப்பசை கொண்ட ஒழுக்கத்தைக் கண்டுபிடிப்பது தான் மனிதனுடைய முதல் வேலையாக அமையவேண்டும்.

கலைக்கும் ஒழுக்கத்துக்கும் உண்மையான விரோதமே கிடையாது. உண்மையான இல்லற வாழ்க்கையில் புருஷனுக்கும் மனைவிக்கும் விரோதம் இருக்குமா? ஆனல் குடும்பங்கள் பெரும்பான்மையில், பூசல்கள் மலிந்து கிடக்கின்றன என்ற காரணத்தினுல், இல்லறம் பொய்யாகுமா?

இல்லறம் அவசியம். ஆகவே, அதை நடத்தும் வழியைக் கண்டு பிடிக்கவேண்டும். அதைக் கண்டு பிடிக்க முடியாமல், இல்லறமே வேண்டாம் என்று சொல்லுவது முட்டாள்தனமாகும்.

உண்மை என்னவென்ருல், புருஷன் மூலமாக மனைவியும் மனைவியின் மூலமாகப் புருஷனும் ஆநந்தமும் ஆதரவும் வல்லமையும் பெறுவதைப்போல, கலையின் மூலமாக ஒழுக்கம் திடப்பட்டு திட்டப்படுகின்றது. ஒழுக்கம், கலைக்கு ஆதரவு அளித்து அதை விருத்தி செய்கின்றது.

உண்மையான ஜனநாயக ஆட்சி யில்லாத தேசத்திலே, அரசாங்கம் குடிமக்களை விலங்குகளாகக் கருதுகின்றது; குடிமக்கள் அரசாங்கத்தை விரோதமாகப் பாவிக்கின்ருர்கள். ஆனல் உண்மை என்ன? அரசாங்கம் தான் குடிமக்கள்; குடிமக்கள் தான் அரசாங்கம். இதுதான் ஜனநாயக தத்துவத்தின் ரகசியம்.

இதைப்போலவே, கலையும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போல. ராஜாவின் தலையும் பூவும்சேர்ந்து, ரூபாய் என்ற நாணயமாகிறது. இதைப்போலவே வாழ்க்கை என்ற நாணயத்துக்கு, கலையும் ஒழுக்கமும் இரண்டு அங்கங்களாகும்.

கலை யழகு பொருந்தாத ஒழுக்கம் வெறும் அவலட்சணமாகவும் பாசாங்காகவும் இருக்கும். ஒழுக்க வல்லமை வீசாத கலையில், மனிதன் விவேகத்தையும் சக்தியையும் இழந்து, மிருகப் பிராயமாய் உலகத்தில் உலவவேண்டி வரும்.

பலாப்பழத்துக்குள் இனிப்பான சுளை இருக்கிறது; வெளியே முள் நீட்டிக்கொண் டிருக்கிறது. சுளையைக் காக்க முள் தேவை. கலையைக் காக்க ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் முள்ளைப்போல குத்தாமலிருப்பதற்காக, கலை தேவை. முடிவில் இரண்டும் ஒன்றே.

—சென்னை ரேடியோவில் பேசிய பேச்சு.

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திவர, தவத்தன்மையால் தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்பித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். இது இப்படியிருக்க, மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்து, தமது வீட்டுக்கோயிலில் உள்ள விக்ரக வடிவமான உமாதேவியாரின் பாதங்களில் வீழ்ந்து துதித்துப் பிரலாபித்துப் பின்னும் சில புகல்வாராயினர்.

சிவஞான தேசிகரும் அவரது மனைவியாரும், தங்கள் மகனது பிரிவாற்றாமல் சோகமுற்றனர். எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தைவிடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்ததை, தேசிகருக்கும் அவரது மனைவியாருக்கும் எடுத்துச் சொல்ல விருப்பங் கொண்டு, சிலவற்றைச் சொல்லுகின்றார். தவத்திலிருந்த மலை மன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலை மன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொன்னதற்கு பின்னிருந்து இன்று கதை.]

பர்வத ராஜன் புதல்வியான பார்வதி, பரமேசுவரரைக் குறித்துத் தவஞ் செய்துவர, அப்போது சிவபெருமான் சனகாதி நால்

வருக்கும் மனமடங்கும் தவநிலையை உபதேசிக்கத் தொடங்கினர் என்னும் வரையில், சுவாமிநாதன் தாய் தந்தையர்களுக்குச் சொல்லி முடித்துப் பின்னும் காலைச் சொல்வோம் என்று, சிவஞான தேசிகரையும் அவர் மனைவியையும் அழைத்துக்கொண்டு தமது ஆசிரமத்தை யடைந்து மாலைக்கடனை முறைப்படி முடித்தபின், தனது சிஷ்யர்களை யழைத்து இவர்களுக்கு வேண்டுவதைத் தருவீர் எனக் கட்டளையிட்டு, தனது ஆசனத்தில் அமர்ந்து பிரம்மஞான நிலையில் ஆழ்ந்தனர்.

இது இப்படியிருக்க சிவஞான தேசிகரின் புதல்வனை சுவாமிநாதன் வேறொரு முனிவரிடத்தில் உபதேசம் பெறுவதைப் பின்னும் சொல்லுவோம்.

முனிவர், "குழந்தாய்! 'நான்' என்றிருக்கும் நீ யார் என்பதைப்பற்றி முன்தினம் சொன்னேமல்லவா? நன்குணர்ந்தனையோ?" என்றனர்.

சுவாமிநாதன், "முனிபுங்கவ! தாங்கள் சொல்லிவரும் வன்மை பொருந்திய வசனங்கள் சுகடன் மனதிலும் களங்கமற அமையும். ஆதலால் உமதரிய ஞானோபதேசம் யாவும் என் மனதில் பொருந்தின. பின்னும் உபதேசித்தருள்வீர்" என்று வேண்டினன்.

முனிவர், "சுவாமிநாதா! 'நான்' என்னும் மனம் அடங்கி, அறிவுமேலிட ஞானம் பிரகாசித்து ஓங்கி காலாதீத ஞானக்கரையைக் காண்பிக்கும். அக்கரையில் சேர்ந்து பரமானந்த சொரூப தரிசனம் பெறுவதற்கான யோகத்தை அதை அளவாய் அறிந்து நடத்தும் மார்க்கங்களில் பழகுதல் வேண்டும்."

"பின்னும் அச் சொரூப தரிசனம் பெறுவதற்குமுன் சுகதுக்கங்களாகிய இரண்டிலும் சமமாய் நடந்துகொள்ள வேண்டும். ஆசையின் பெருக்காகிய சங்கத்தையும் அறவே விட்டுவிட வேண்டும். எப்பொழுதும் திரண்ட வஸ்துக்களின் சமத்துவமாக பிரதி பிம்பமான இருதயத்தில் சாத்மீக குணத்தையுடையவனுய், காரியங்களைச் செய்து வருதல் வேண்டும். இவ்வகைகளில் பழக, பேரானந்தம் அடையும் வழியில் கொண்டுபோய்விடும்.

பேரானந்தப் பொருள் யாதெனில், திக்குகளும் திசைகளும் இல்லாததும், இருப்பதும் பிறப்புமில்லாமற் பிரகாசிப்பதும் சலனமில்லாததும் ஆதியந்தமில்லாததும் ஏகமாகியதும் அநேகமானதும், இச் சரீரத்தில் இருப்பதும் இல்லாததும், அருள் ஒளியானதும் சர்வ பிராணங்களிலும் நிறைந்ததும் நிறையாததும், மனத்தினுலும் வாக்கினுலும் அளவிடக்கூடாததும், களங்கமற்றதும், காருண்யமுள்ளதும், மூவருக்கும் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) முதன்மையானதும், வெறும் வெளியானதும், விகற்பமற்றதும், இதுயில்லாத மற்ஞேர்

வஸ்துக்கள் இல்லாததுமாகும். "குழந்தாய்! அது என்று காண்பிப்பதற்கு முடியாத இதுதான் பரமானந்த ஜோதி" யென்பதாம்."

"சுவாமிநாதா! பொழுதாயிற்று. மாலைக்கடனை, முடிப்போம். பின்னும் நாளை, சொல்வேன்" என்று முடித்தனர்.

இது நிற்க, சிவஞான தேசிகருக்கும் அவர் மனைவியாருக்கும், சிவபெருமான் ஜனகாதி நால்வருக்கு யோக நிலையைக் காண்பிக்கத் தொடங்கியதிலிருந்து, பின்னும் சொல்லத் தொடங்கினர்.

சிவபெருமான் தம்பாலெய்தி மனமொடுங்க விரும்பிய ஜனகாதி நால்வருக்கும் யோக நிலையைக் காண்பிக்க யோகத் தமர்ந்தனர். அதனால் உலகமானது மாதர் மயக்கற்று படைப்புத்தொழில் தடைப் பட்டது. இதைக் கண்ட தேவர்கள், அஞ்சி, பெருமானின் தவநிலையைக் கலைப்பது எவ்வாறென யோசித்து மன்மதன் உதவியால் கலைக்கக் கூடுமென உணர்ந்து, மதனை இந்திரன் வரவழைத்து ஈசன் தவத்தைக் கலைத்து வருவாயென கட்டளையிட, மதன் தடுத்தும் பலன் தராததால், ரம்பை முதலிய நான்கு நடனமாதர்களுடன் கைலையை அடைந்தனன்.

சிவபெருமானின் தபோ நிலையையும் ஜனகாதி நால்வரும் அதிற்பழக மனமடங்கி நிற்பதையும் கண்டனன். மதன் கண்ணுற்று மனக்கலக்கங்கொண்டு மகிமை பொருந்திய தவநிலையிலிருக்கும் மகாதேவனை தியானித்து நடன மாதர் ஒருபுறமாய் நடிக்கச் செய்து, என் வருமோவென்று ஏங்கியவனாய் முப்புரமெரித்த முதல்வனின் மீது தனதரிய மலர்க்கணைகளை விடுத்தான்.

சில கணைகள் சாம்பலாயின. கடைசியாய், முல்லைக் கணைகளை மதன்விட, அதுவும் ஈசனையடைய, உடன் மன்மதன், நெற்றிக் கண்ணின் தீயால் எரிந்தனன். இதை அறிந்த ரதிதேவி சிவபெருமானை படுத்து தன் கணவனை எழுப்பித்தரவேண்டுமெனப் பிரலாபிக்க, பெருமானார் மனமிரங்கி, "பேதாய் யாம்! இமாசலத்தில் பர்வதன் மகளாய் இருக்கும் பார்வதியை மணம் புரிந்த பின்னர் உன் நாயகனைத் தருவோம்" என்று, பின்னும் சனகாதியர்களுக்கு அனுக்கிரகித்துவிட்டு, இமாசலமெய்தி அன்னையாரின் அருந்தவத்தைக்கண்டு அகமகிழ்ந்து சன்யாச வேடந்தரித்து, பிட்சாந்தேகி! என தேவி தவஞ்செய்யு மிடத்திற்போய் நின்றனர். தேவனின் தொனியானது தேவியின் தவத்தைக் கலைக்க, அச் சன்னியாசியை உற்று நோக்கினர். தேசிகரே! மாலைப்போதாயிற்று, மற்றும் நாளைச் சொல்வோம்" என்று முனிவர் முடித்தனர்.

(தொடரும்)

மன நிழல்

பிக்ஷு

வனப்பு

முருகன் கோயிலில் மயில் ஒன்றிருக்கிறது. நாள் முழுதும் அங்குமிங்கும் அலைந்து திரிந்துவிட்டு, பொழுது சாய்ந்ததும் கோபுரத்து உச்சாணியில் இருக்கும் யாளியின் தலையில் வந்து உட்கார்ந்து விடுகிறது-இரவைக் கழிக்க.

அந்திக் காற்று மயிலின் மீது வீசும்பொழுது, தோகை கடலைபோல் விசித்திர வனப்புடன் புரளுகிறது. அப்பொழுது அது உட்கார்ந்திருக்கும் உல்லாசத்தைப் பார்த்தால் தன் அழகுக்கு உன்னத ஸ்தானமும் கோபுரக் காற்றும் அத்யாவசியம் என்று உணர்ந்திருப்பதுபோல் தோன்றுகிறது. கோபுரத்திலிருந்து கொண்டே இரவு முழுதும் ஜாமத்துக்கு ஜாமம் கூவுகிறது......

ஆமாம். மயில் நினைப்பது மனிதனுக்கும் பொருந்தும். சந்தைக் கூட்டத்திலே வயிற்றைக் கழுவும் வல்லடி வழக்கில் மனிதன் ஈடுபட்டிருந்த போதிலும் உள்ளத்தின் வனப்பு குறையாமல் இருக்கவேண்டுமானால் தனிமையின் கோபுரத்து உச்சியில் சற்று உட்கார்ந்துதான் ஆகவேண்டும். அதோடு நில்லாமல் விழிப்புடனும் இருக்க வேண்டும் —மயில் ஜாமத்தில் கூவுவதைப் போல.......

சவுக்கை தோப்பு

தோப்புகள் அவ்வளவுக்குள்ளும் சவுக்கைத் தோப்புக்குள்ள கவர்ச்சி வேறு ஒன்றுக்குமே கிடையாது. நேரே வானத்தை தொட்டுவிடப் போவது போல் வளர்ந்திருக்கும் அழகு ஒன்றே போதும். போதாக் குறைக்கு கீழே மெத்தென்று படுக்கை விரித்தது போல் சவுக்கை சரகுகளை உதிர்த்து பரப்பிவிடுகிறது.

அந்தப் படுக்கையில் உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டால், ஆஹா, என்ன அற்புதமான இசை இன்பம்! நள்ளிரவின் கடலொலி தோன்றும். நல்ல பாம்புகளின் இடைவிடாத சீறல் தோன்றும். ஓய்ந்து போன காற்றின் மூச்சுக் கேட்கும். இபற்கையின் மோனம் பேசும்.

சவுக்கைத் தோப்பில் இன்னொரு விசேஷமிருக்கிறது. சவுக்கைக் காற்றிலேயே வளருகிறது என்கிறார்கள். ஆனால் இது சவுக்கையின் தனி குணம் என்று நான் நினைக்கவில்லை. மரங்களே காற்றும் வெயிலும் மழையும் பட்டுத்தானே வளர்கின்றன?

அவைதானே அவற்றிற்கு உணவு?

எனக்கு ஒரு எண்ணம் தோன்றுவதுண்டு. மனிதனுடைய வளர்ச்சிப் போக்கில் ஒரு நிலை வரும். அப்பொழுது உண்ண வேண்டுமென்றால் இலையையோ தட்டையோ எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார வேண்டிய அவசியமே இருக்காது. உணவை உத்தேசித்து இவ்வளவு சண்டை சச்சரவுகளும் இருக்காது. மரங்களைப் போல் மனிதனும் தான் வளர்வதற்கு வேண்டிய சத்துப்பொருள்களை நேரே தன்னுடைய சூழ்வினின்றும் இழுத்துக்கொண்டு விடுவான். உலகத்தின் முக்ய பிரச்னை தீர்ந்துவிடும்.......

ஒரு வித்தை

கொஞ்ச நாளாக ஒரு வித்தை பழகி வருகிறேன். அதாவது, பொழுது போகாவிட்டால் திண்ணையில் வந்து உட்கார்ந்துவிட வேண்டியது. தெருவிலே யார் போகிறார் என்று கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது. நடக்கும் மாதிரியில் இருந்தே இன்ன ஆசாமி போகிறார் என்று புள்ளி போட்டுவிட வேண்டும். அப்படி முடிவு செய்த பிறகு முடிவு சரிதானா என்று கண்ணெடுத்துப் பார்க்கலாம்.

இந்தமாதிரி ஆள்களைக் கண்டுபிடிப்பதில் கஷ்டமொன்றுமில்லை. ஊன்றிப் பார்த்தால் ஒவ்வொருவருடைய நடையிலும் ஒரு தனி குணமோ போக்கோ இருக்கத்தான் செய்கிறது.

ஒரு ஆசாமி இருக்கிறார். அவர் நடந்து போகும்பொழுது, பத்தரை மூட்டை மளிகை சாமான் விற்கும் நேரம் வீணாகிவிடுகிறதே என்று நினைத்து குதிகால் தரையில் பாவாமல் பரபரப்புடன் நடந்து போகிறார். அவர் ஒரு வியாபாரி.

ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ளப் போய்க்கொண்டிருக்கிறாள். அவள் குதிகால் தரையில் ஒரு அங்குலமேனும் பள்ளம் செய்யாமல் அடி பெயர்த்து வைக்க மாட்டாள். குடும்பபாரம் தாங்க முடியாமலிருக்கிறது. இருந்தாலும் காததூரத்திலிருந்து தண்ணீர் முதற்கொண்டு மொண்டுவந்து குடும்பக் கடனைத் தொலைக்கவேண்டியிருக்கிறது. என்ன செய்யலாம் என்று சொல்வதுபோல் இருக்கிறது அந்த நடை. அவள் ஒரு ஏழை. அவளுக்கு ஆறு குழந்தைகள். பின்னொரு உல்லாசக்காரி இருக்கிறாள்—நடந்தால் உள்ளங்கால் அழுக்காகிவிடுமே என்று நினைப்பதுபோல் நடந்துகொண்டு.

ஒரு இளைஞன் இருக்கிறான்—காலின்கீழ் வில் இருப்பதுபோல் நடந்துகொண்டு. ஒரு அசடு இருக்கிறது—காலை தேய்த்துத் தேய்த்து நடந்துகொண்டு. இன்னும் எத்தனையோ விசித்திர நடைகள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே ஒரு யுகம் முழுவதையும் கழித்துவிடலாம்.

'சதி - சக்குபாயில்'

"விமோசன"த்தில்

'அதிருஷ்ட'ப் பேர்வழிகள்

‘சத்தியவாணி’யில் குத்துச்சண்டை!

புது உறவு

(அ. கி. ஜெயராமன்.) 18691

1

ஊருக்கு வந்த மறுநாள். எல்லோரையும் பார்த்தாகிவிட்டது. ஆனால் மனதில் ஒரு குறை, அந்த முகத்தைக் காணவேண்டுமென்று உள்ளத்தில் ஒரு ஆவல். அந்தக் குரலைக் கேட்க ஒரு ஆசை, ஒரு ஏக்கம். எனக்கென்னமோ எங்கள் வீடு வெறிச்சென்றிருந்தது.

வெளியே வந்து வாசல் தாழ்வாரத்தில் நின்றேன். வெய்யிலுக்காகப் போட்டிருந்த கீத்து சார்ப்பு அது. கிழக்கே திரும்பிப் பார்த்தேன். காலை சூரியனுடைய பொன்விளிம்பிலிருந்து வரும் வெளிச்சத்தில் எதிர் வீட்டிற்குப் பின் இருக்கும் மரத்தின் இலைகள் பொன்மயமாகத் தோன்றின.

நாலைந்து பெண்கள் காவேரியிலிருந்து இடுப்பில் ஈரப் புடவையுடனும் குடத்துடனும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில், அமிர்தத்தை எடுத்துக்கொண்டு வரும் மோஹினியைப்போல் பளபளவென்று தேய்த்த பித்தளைக் குடத்துடன் வந்துகொண்டிருந்தாள் அவள். எங்கேயோ பார்ப்பதைப்போல் பாவனை செய்து சற்று உற்றுக் கவனித்தேன்.

அவள் தான் என் வாழ்க்கையில் தோன்றிய கானல் நீர். எங்கள் வீட்டைத் தாண்டிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அவள் மாத்திரம் நழுவும் குடத்தை மேலுக்குத் தூக்குவதைப் போல் ஒரு குலுக்குக் குலுக்கி என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

நானும் அவளைப் பார்த்தேன். மாசுமருவற்ற அவள் முகத்தில் புன்னகையின் இளங் கிரணங்கள் ஒரு வினாடி தோன்றி மறைந்தன.

அவள் சென்றுவிட்டாள். பக்கத்தில் கிடந்த பெஞ்சியின்மேல் அமர்ந்து கம்பம் ஒன்றில் சாய்ந்து கொண்டேன். மேற்கே அவள் தன் வீட்டிற்குள் நுழைவது என் கண்களுக்குத் தெரிந்தது. அவள் உள்ளே சென்று மறைந்து விட்டாள்.

ஆனால் என் மனக்கண்முன் னின்று மறைய அவளால் முடியவில்லை. என் ஹிருதயத்தை விட்டு அகல அவளால் முடியவில்லை. எனக்குப் பழைய பால்ய இன்பக் கனவுகள் நினைவிற்கு வந்தன.

2

அப்பொழுது நான் சிறுவன். வயது பதினைந்து பதினொருக்கு மேல் இருக்காது. எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில்தான் அவர்கள் இருந்தார்கள்.

அவள் தாய் தந்தையர்களுக்கு அவள் ஒரே பெண். தினம் எங்

கள் வீட்டிற்கு வருவாள். என் தங்கைக்கும் அவளுக்கும் ரொம்ப சினேகம். பல முறை நாங்கள் வெகுநேரம் விளையாட்டாகப்பேசி இருக்கிறோம். பேசாமலிருந்திருக்கிறோம்.

சண்டை போட்டிருக்கிறோம். பிறகு நாங்களே சமாதானம் செய்து கொண்டு மிருக்கிறோம். அப்பொழுது அவள் சிறு பெண். கலகல வென்று பேசுவாள். வார்த்தைக்கு வார்த்தை கலீரென்று அவள் சிரிப்பதே ஒரு அழகாக இருக்கும். முகத்தில் நல்ல களை. அவள் பார்வையில் ஒரு தனி வசீகரம். சண்டை போட்டுவிட்டு ஏங்கி என்னைப் பார்க்கும்போது என் கோபமெல்லாம் பறந்து விடும். பச்சைப் பாவாடையும் ஊதா சட்டையும் அணிந்து எங்கள் வீட்டில் அவள் விளையாடிய காக்ஷி இன்னும் என் மனதைவிட்டகலவே இல்லை.

அவள் தாய் தந்தையர்களுக்கு என்மேல் ரொம்ப விசுவாசம். அவர்களுக்கு ஆசைதான். எனக்கும் இஷ்டம்தான். ஆனால் எங்களுக்குக் குறுக்கே நின்றது ஏழ்மை!

ஆனால் என் உள்ளத்திற்குள் ஜ்வாலையற்றுப் புகைந்து கொண்டிருந்தது அந்தக்கனல். அவள் என்னுடையவள் என்ற பாவம் என்னை யறியாமலே என் உள்ளத்தில் ஊறிப்போயிருந்தது.

அவள் சாதாரணமாகவே பேசினாள். என் தங்கையுடன் ஆடினாள். பாடினாள். என் பெயரை வைத்து ஆரம்பமான அவள் விவாக விஷயம் கடைசியில் எங்கோ போய் முடிந்தது. அவள் அவனுக்குக் கிடைக்கக் கூடியவளா? அவன் கொடுத்து வைத்தவன்!

கலியாணத்தின்போதும் அவள் எங்களுடன் கலகலவென்று பேசிக்கொண்டு தானிருந்தாள். கல்யாணத்தன்று மத்தியானம் என் தங்கை அவளெதிரிலேயே "அண்ணா, நீ ஏமாந்து போனயே பாத்தியா?" என்றாள்.

எனக்குச் சுரீலென்றது. எங்களுக்கு நடுவில் ஒரு முள் வேலி வந்து விட்டது! அவள் இனி வேறொருவனுக்குச் சொந்தம். எனக்கு இனி அவளிடம் எந்த பாத்தியமோ உரிமையோ கிடையாது.

ஏதோ இருந்தது. அதுவும் போய் விட்டது. இனி அவள் வேறு. நான் வேறு.

3

அந்தச் சிறு பெண் இன்று எவ்வளவு மாறுதலடைந்து விட்டாள்! அவள் ஒரு தாய். தனி வீடு! குடித்தனம்! மாடு கன்று, பெரிய சம்சாரி! ஆனால் நான்? உத்தியோகப் போராட்டத்திற்குத் தயாரான ஒரு பட்டதாரி!

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுத் தலை நிமிர்ந்தேன். அவன் வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்தாலே எனக்கு ஒரு உணர்ச்சி! என் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி! நேரே என்னிடம் தான் வந்தான். நான் வாவென்று சொன்னேனோ இல்லையோ, ஞாபகம் இல்லை.

"சுப்ரமண்யனா? நேற்று சாயந்திரமா வந்தாய்." என்றான்!

“ஆமாம்!” என்றேன்.

“சொன்னாள். காவேரிக்குப் போய்விட்டு வரும்போது பார்த்தாளாம். மத்தியானம் ஆத்துக்கு வாயேன். அவளும் பார்க்க வேண்டுமென்றாள்” என்றான்.

ஆவலும் வேதனையும் என் உள்ளத்தில் எழுந்து போராடின. சரி என்று தலையசைத்தேன். ஏதோ மற்றும் சிலது



பேசிவிட்டு அவன் சென்றான். நானும் எழுந்து ஸ்நானத்திற்குச் சென்றேன்.

4

இரண்டு மணி சுமாருக்குக் கிளம்பிப் போனேன். அவன் இல்லை வீட்டில்.

ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தேன். இடுப்பில் குழந்தையுடன் வலது கையில் ஒரு தட்டில் பக்ஷணத்துடன் வந்தாள் அவள்.

பக்ஷணத்தை என் எதிரில் வைத்தாள். தலை நிமிர்ந்து பார்த்தேன். அதே பால் வடியும் முகம், அதே புன்னகை! அதே பார்வை, ஆனால் அதில் ஒரு சிறு வெட்கம்!

“நேற்று வந்தாய்? காலமே பாத்தேன். எங்களை எல்லாம் மறந்தே போய் விட்டாயே” என்றாள்.

வெகு நாட்களுக்குப் பின் கேட்ட அந்தக் குரல் ஹிருதயத்தில் ஒரு புது இன்பத்தை உண்டாக்கிற்று. என் மனம் என்னவோ குருட்டு யோசனை செய்துகொண்டிருந்தது.

“மறந்து போவானேன். ஊருக்கு வரவில்லை. வந்தால் பார்க்காமல் போவேனா!” என்றேன்.

அவள் முகம் மலர்ந்தது.

"பக்ஷணம் எடுத்துக்கொள். எங்காத்தில் விசேஷமாக ஒன்றுமிருக்காது" என்று சொல்லிக் குழந்தையைக் கீழே விட்டாள்.

யாரோ புதுமனிதனென்று அது என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. அதன் முகத்தைப் பார்த்தேன். தங்கத்தை உருக்கி வார்த்தாற்போல் இருந்தது. அவளுடைய பிரதிபிம்பம்.

குழந்தையை எடுத்துக்கொண்டேன். குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தேன். அவள் புன்சிரிப்புடன் அதே கபடமற்ற பார்வையோடு, என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குழந்தை மெதுவாகத் தத்தித் தன் மழலைச் சொற்களால் "அப்பா" என்றது. என் உள்ளத்தில் ஒரு முள்ளால் குத்துவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. எதனாலோ என் மனம் துடித்தது.

குழந்தை மீண்டும் "அப்பா" என்றது. அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. "ஓ! அசடு! மாமாடா! மாமான்னு சொல்லு" என்று குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்தாள் அவள். என் மனதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

குழந்தை "மாம்மா" என்றது. வாரியணைத்துக் கொண்டேன். குழந்தையைத்தான் நான் தொடலாம், கொஞ்சலாம்,

ஹும்! அதற்குமேல் என்னால் தாங்கமுடியவில்லை. எழுந்து செல்வோமா என்று எண்ணினேன். எழுந்திருந்தேன். ஏக்கத்துடன் கண்ணீர் ததும்பும் முகத்துடன் என்னைப் பார்த்தாள். உணர்வற்றுப் பேசாமல் மறுபடியும் ஊஞ்சலில் அமர்ந்தேன்.

என் கலக்கத்தைக் கண்டு அவளே அவஸ்தைப்பட்டாள்.

"பக்ஷணம் கொஞ்சம் எடுத்துக் கொள்ளேன்!" என்று சொன்னதில் அவள் எவ்வளவு அர்த்தத்தை வைத்தாள்!

வீ
எச்
ஆர்
பெருங்காயம்
உபயோகித்தால்
ஆரோக்கியம்,
சுருசுரு,
திருப்தி.
உண்டு செய்யும்.

நட்சத்திர குணாதிசயங்கள்

(20) பூராடம்.

ஜென்ம நட்சத்திரம் :	பூராடம்.
இதற்கதிபதி:	சந்திரன்.
இஷ்ட தேவதை :	வருணன்.
பகை :	ஆயில்யத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	ஆண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	ஞாயிறு.
திசாதிபன் :	சுக்கிரன்.

குணாதிசயங்கள் :—நெடியவன், குறுகிய நெற்றியை யுடையவன், பரிமளகந்தப் பிரியன், விசனமுள்ளவன், சேவகாதிபன், சிறியதும் சிவந்ததுமான நேத்திர முடையவன், அண்டியவரை ஆதரிப்பவன், நீண்ட கரமுள்ளவன், புயவலிவுடையவன், சுதந்திரப் பிரியமுள்ளவன், பலர் நன்மையைக் குறித்துப் போராடுபவன், தான் எடுத்த காரியத்தைச் செய்தே தீருபவன், வைராக்கியமுள்ளவன், அந்நிய தேசயாத்திரைப் பிரியன், ஊண் உடுத்தலில் பிரியமற்றவன், கீர்த்தியையே விரும்புபவனுமாவன்.

இத்துடன் முதற்பாகத்தில் பிறக்கின் புத்திர தோஷ முள்ளவன், போர்புரியப் பிரியப்படுபவன், தன் பெருமையை விரும்பாதவன், சத்துருக்களை நயமாய் ஜெயிப்பவன், தொழிலில் தலைமை வகிப்பவன், இல்லறசுகம் குறைந்தவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் யோகாப்பியாசப் பிரியன், திடகாத்திர சரீரமுள்ளவன், எவரையும் நம்பாதவன், பூரண

வயதற்றவன், தாய் தந்தையரைப் பிரிந்து வாழ்பவன், எதிலும் வெறுப்புள்ளவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் சுகவான், செல்வமுடையவன், வாலிப வயதில் தாயை இழப்பவன், பெரிய பிணிகளில் சில நாள் உழலுபவன், தெளிவான அறிவுடையவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் பயமற்றவன், முதுகு முதலிய பின் பக்கங்களில்பிணியுள்ளவன், வஞ்சக நெஞ்சமுள்ளவன், பகைவரால் தேக ஊனமடைபவன், பிதுர் சுகமற்றவன், பித்ததேகமுள்ளவன், எப்போதும் ஒன்றைக்குறித்து சஞ்சலப் படுபவனுமாவான்.

(21) உத்திராடம்.

ஜென்ம நட்சத்திரம்:	உத்திராடம்.
இதற்கதிபதி:	செவ்வாய்.
இஷ்ட தேவதை:	விநாயகர்.
பகை:	பூராத்தில் பிறந்தவர்கள்.
உருவம்:	பெண்.
குணம்:	சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம்:	வெள்ளி.
திசாதிபன்:	சூரியன்.

குணாதிசயங்கள் :—பலவான், பரோபகார சிந்தையுள்ளவன், பந்துமித்ர நேசன், நீண்ட நாசியை யுடையவன், சாதுர்யமாய்ப் பேசுபவன், போஜனப்பிரியன், ஜலப்பிரதேச பிரயாணம் செய்பவன், மர்மமாய்க் காரியங்களை முடிப்பவன், தகுதியான மனைவியைப் பெற்று இல்லற தருமம் வழுவாது நடத்துபவன், அரிய மைந்தரைப் பெறுபவன், தாய் தந்தையரின் வார்த்தையைக் கடவாது நடப்பவன், ஆதிமத்தியந்தங்களில் வறுமையால் வருந்துபவன், இடைக்காலங்களில் சுயார்ஜிதமாய் பாக்கியந் தேடுபவனுமாவான்.

பின்னும் முதற்பாகத்திற்பிறக்கின் மெய்யழகன், எதிலும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுபவன், எப்போதும் தருமம் செய்யப் பிரியப்படுபவன், சகல சாஸ்திரங்களையும் அறிபவன், குரு பக்தியுள்ளவன், குடும்ப சுகமற்றவன், தேவாலயப் பணியில் ஈடுபடுபவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் மேலான கருமங்களைச் செய்து முடிப்பவன். காலமறிந்து தருமம் செய்வோன். ஆராய்ந்து காரியம் செய்பவன். சாந்தமற்றவன். சங்கீதப் பிரியனுமாவான்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின் தான் என்னும் அகம்பாவமுள்ள வன், அஞ்சாமற் பேசுபவன். குரூர குணமுள்ளவன். ஸ்தூல தேகி. இடையின்கீழ் பலத்த பின்னமுள்ளவன்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் வீரியமுடையவன். தருமசிந்தனை யுள்ளவன், அநேக காரியங்களைச் செய்பவன். இடைவயதில் வியா பாரத்தால் பெரும்பலனை யடைபவன். சுற்றத்தாரைச் சேர்ந்திரா தவன், இருதயத்தில் பிணியுள்ளவனுமாவான்.

(22) திருவோணம்.

ஜென்ம நட்சத்திரம்:	திருவோணம்.
இதற்கதிபதி:	புதன்.
இஷ்ட தேவதை:	விஷ்ணு.
பகை:	புனர்பூசத்தில் பிறந்தவர்கள்.
உருவம்:	பெண்.
குணம்:	ராசதம்.
சுபப்பலன் தரும் வாரம்:	திங்கள்.
திசாதிபன்:	சந்திரன்.

குணாதிசயங்கள்:—உன்னதமான கல்வி யறிவுள்ளவன், பிடிவாத முள்ளவன், கொஞ்சத்திற் கொஞ்சம் கோபம் வந்து மாறுபவன், தலை சாய்ந்த நடையுடையவன், உள்ளங்கால் உயர்ச்சியைப் பெற்ற வன், உற்சாகமுள்ளவன், தெய்வபக்தியுள்ளவன், வேதாந்தம் பேசு பவன், அந்நிய மணம் செய்பவன், அற்ப புத்திரரைப் பெறுபவன், கடற் பிரயாணம் செய்பவன், விரல்களில் பின்னமுள்ளவன், கெற்பப் பிணி உள்ளவனும் அற்ப நித்திரை யுள்ளவனுமாவான்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் ஸ்தூல தேகி, புத்திர சுகமற்றவன், யோகவான், கலகப் பிரியன், நேத்திரப்பிணி யுள்ளவன், சீதளதேகமுள்ளவன், சில நாள் தரித்திரன், கவலைப்படுபவனு மாவான்.

இரண்டாம் பாகத்திற் பிறக்கின் ஞான நூல் ஆராய்பவன், தாட் சணிய மில்லாதவன், சிநேகமற்றவன், தன் காரியப் பிரியன், எதிர் பாராத கஷ்டங்களை மத்திய வயதில் அடைபவன், பிதுர் பாக்கிய மற்றவன், அனுமத்து வகைகளில் அந்திய வயதில் பெரும் பாக்கியங் களை பெறுபவனுமாவான்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின் எப்போதும் சிறுபிணி யுள்ளவன் திடமற்றவன், தயவில்லாதவன், சற் புத்திரரைப் பெறுபவன்,

பாக்கியவான், தக்கோரால் கீர்த்தி அடைபவன், இரு மனைவியரைப் பெறுபவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் துர்க்காரியங்களில் பொருளை அழிப்பவன், சீலமுடையவன், கீர்த்தியுள்ளவன், நிலபலமுள்ளவன், விசித்திர வாகன சுகமுள்ளவன், ஆடை ஆபரண அலங்காரப் பிரியனுமாவான்.

(23) அவிட்டம்.

ஜென்ம நட்சத்திரம் :	அவிட்டம்.
இதற்கதிபதி :	குரு.
இஷ்ட தேவதை :	இந்திராணி.
பகை :	திருவாதிரையில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	சனி.
திசாதிபன் :	செவ்வாய்.

குணாதிசயங்கள் :—எதற்கும் அஞ்சாதவன், நெறியான தொழில் செய்பவன், தியாகி, நாசி, பல் இவைகள் நீண்டிருப்பவன், சோம்பலான மீதகமுள்ளவன், ஆராய்ந்து காரியம் செய்யாதவன், குறைச் சொல் பொறுக்கமாட்டாதவன், மாமிச ஆகாரப் பிரியன், தாய் தந்தையரைப் பிரிபவன், மனைவிக்கினியன், செல்வம் நிலையாதவன், முன் கோபியுமாவான்.

இத்துடன் முதற்பாகத்தில் பிறக்கின் குணவான், அழகன், உதார குணமுள்ளவன், பிராமணர்களிடமும் பசுக்களிடமும் பிரியமுள்ளவன். தந்திரசாலி, ஸ்தூல தேகியுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் வஞ்சம் தீர்த்துக்கொள்ளுபவன், புத்திமான் சாதுர்யமாய்க் காரியங்களை முடித்துக்கொள்ளுபவன், விடா முயற்சியோனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் குணவழகன், இளைத்த சரீரமுள்ளவன். தன்னடக்க முடையவன். சிவந்த ரூபமுள்ளவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் தனவான், திடகாத்திர சரீரமுள்ளவன், எக்காரியமும் தன்னால் செய்ய முடியுமென்று நினைப்பவன், கையில் மச்சரேகை யுள்ளவன், பிரபுக்களைச் சிநேகித்துக் காரியங்களை முடித்துக்கொள்ளுபவன், நல்ல மங்கையை மணப்பவனும் நற்கதியடைபவனுமாவான்.

மாஜி-காங்கிரஸ்வாதி

"ரஞ்சனன்"

வண்டி ஒரு 'ஜெர்க்' கொடுத்து நின்றதே தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டேன். வண்டியில் ஒருவருமில்லை. இதுவரையில் எந்த திக்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததோ அதற்குநேர் எதிர் திசையில் இப்பொழுது வண்டி போய்க்கொண்டிருந்தது. "யாராவது வேறு ரயிலில்தான் நம்மைக் கொண்டுவந்து போட்டு விட்டார்களோ" என்று சந்தேகப்பட்டு "வண்டியை நிறுத்தக் கைப்பிடியை இழுக்கவும்" என்று போட்டிருக்கும் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தேன்.

சடக்கென்று வண்டி நின்றது. "கார்டு"ம் மற்ற சிப்பந்திகளும் பதறிக்கொண்டு நான் இருந்த இடத்திற்கு ஓடிவந்தனர். நான் என்னுடைய சந்தேகத்தைச் சொன்னதும் அவர்கள் எல்லோருக்கும் ஒரு முகமாய்க் கோபம் வந்தது. சிலர் சிரிக்கவும்சிரித்தனர். "உமக்கு ஞானம் இருக்காங் காணும்!" என்று சீறி விழுந்து விட்டு எல்லோரும் நடையைக் கட்டினார்களே ஒழிய என் சந்தேகம் தீர்ந்தபாடில்லை!

வண்டி மறுபடியும்கிளம்பியது. பின்னால்தான் போயிற்று. எனக்கும் கோபம்! அதோடு பயமும் கூட, நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. 'இது என்ன அநியாயமாக இருக்கிறதே! இதற்கு ஒரு வழியும் கிடையாதா' என்று நினைத்துக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தேன். அங்கே வேறு ஒருவரையுமே காணோம். இருந்த மூன்று விளக்குகளில் இரண்டில் 'பல்பு' கள் இல்லை! அரை குறையான இருட்டும் வெளிச்சமும் சேர்ந்து தாறுமாறான உணர்ச்சிகளைக் கிளறி விட்டுக் கொண்டிருந்தன.

"கொக்... கொக்...."

எங்கிருந்தோ வந்த இருமல் சத்தம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. வண்டியில் என்னமோ ஒருவரையும் காணோம். மனத்தை தைரியப்படுத்திக் கொண்டு ஒரு தடவை எழுந்து வண்டி முழுவதும் நடந்தேன். ஒருவரையும் காணோம். "சை! மனப்பிராந்தி" என்று எண்ணிக் கொண்டு உட்கார்ந்தேன்.

மறுபடியும் ரயில் வண்டி நின்றது. வெளியில் எட்டிப் பார்த்தேன். இப்பொழுது ரயில் பிளாட்பாரத்துக்கு அப்புறம் இருக்கும் இரண்டாவது தண்டவாளத்தின் மேல் நின்றது. எதிரே வருகிற வண்டிக்கு வழி என்பதைத் தெரிந்து கொண்ட உடனே எனக்குத் தாங்க முடியாத சிரிப்பு வந்தது!

இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் தான் தாண்டி இருக்கும். மறுபடியும் 'கொக்...கொக்...'! என்று அதே சளி நிறைந்த இருமல்! எனக்கு மறுபடியும் திகில் பிடித்தது!

இருட்டு. வண்டியில் நான் ஒரே ஒருவன். யாராவது திடீரென்று வந்து என்னைக் கொள்ளையடிக்க முயன்றால் ...... பணம் போனால் போகட்டும், ஆளுக்கே மோசம் வந்துவிட்டால், பிறகு ......? ஓடுகிற ரயிலின் சத்தத்தில் யாராவது கத்தினாலும் காது கேட்காதே.......!

நாழியாக ஆக என்னுடைய கிகிலும் அதிகரித்தது. ஒரு தடவை ஆபத்து அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்து வசவு வாங்கியாய் விட்டது. மறுபடியும் அதைப் பிடித்து இழுத்தால் அந்த கார்டு வந்து கொன்றே விடுவான்! மேலும் அவன் அதை இழுப்பதற்குள் பெஞ்சியடியிலிருக்கும் அந்த ஆள் வந்து...

"அது யார் என்றுதான் பார்ப்போமே" என்று ஒரு அசட்டுத் தைரியம், துணிச்சல். எழுந்து போய் அந்தப் பெஞ்சியருகில் நின்று கொண்டு, 'யாரப்பா அது, அங்கே! ஏய்! பெஞ்சியடியிலே யாரு?' என்று ஒரு அதட்டல் போட்டேன். உள்ளே இருந்தவன் ஒரு ஆள் தான். எழுந்திருந்து வெளியில் வந்தான்.

இரண்டடி பின்னுக்கு வந்தேன். ஏனெனில் பெஞ்சியடியிலிருந்து வந்தவன் என்னைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தான். கருத்த ஆசாமி, இருட்டைப் போலவே. பெஞ்சிமேலே உட்கார்ந்து கொண்டதும் மடியிலிருந்து, பாதி பிடித்த துண்டை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு அதைப் பற்றவைத்தான்.

"எந்த ஊருக்குப் போகிறாய்?" என்ற கேள்வி என்னை யறியாமலே வாயிலிருந்து குளறி கீழே விழுந்தது. அந்தக் கேள்விக்கு அவன் மறுபடியும் சிரித்தான். அந்தக் கோரச் சிரிப்பில் வெள்ளை வெளேரென்ற பற்கள் தான் அந்த பீடியின் நெருப்பு வெளிச்சத்தில் தெரிந்தனவே ஒழிய சத்தம் வரவில்லை.

'இதென்ன பேயா, பிசாசா?' என்ற எண்ணம் என்னைக் குலுக்கி எடுத்தது. 'உன்னைத் தானே! யாரப்பா அது? எந்த ஊருக்குப் போறே!' என்றேன்

'கும்பகோணம்' என்ற பதில் வந்ததைக் கேட்டதும் எனக்கு மறுபடியும் ஒரு தடவை தூக்கி வாரிப்போட்டது. "அட! வேலையற்றவனே, அந்த ஸ்டேஷன் போய் எந்தக் காலம் ஆகிறது. நீ என்னடா பண்ணிக் கொண்டிருந்தாய்?" என்றேன்.

"அங்கேதான் ஏறினேன்" என்ற பதிலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன். என் சந்தேகம் பலத்தது. தலை சுற்றிற்று. "எண்டாப்பா! போக வேண்டிய இடம் உனக்கு ஏதாவது இருக்கா?" என்று கேட்டேன்.

"இங்கேதான்" என்றான் அவன்.

அடுத்த சில நிமிஷங்களுக்குத் தலையைத் தூக்கி அவனைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது. அவனுடைய இருமல் மறுபடியும் என்னை அவன் இருக்கும்

பக்கம் பார்க்கும்படி செய்தது. அவன் எழுந்து நான் இருக்கும் பெஞ்சிக்கு வந்தான். எனக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. அவன் முன்போலவே இளித்துக் கொண்டு என்னைப் பார்த்தான்.

"ஏன் சார்! இந்த இந்தி எதிர்ப்புச் சட்டமாகி விட்டதோ?" என்று அவன் என்னைக் கேட்டான். இந்தி எதிர்ப்பு—சட்டமாவதா? இதென்ன கூத்தாக இருக்கிறது! 'தெரியலியே அப்பா. நான் கிராமாந்திரம். ரொம்ப ஏழை. இப்பவும் பெட்டியிலே காசே இல்லே' என்றேன்.

"நானும் ஒரு காங்கிரஸ்காரனாக இருந்தேன் சார். உண்மையா! பணம் ஒருத்தர் கிட்டப் போய்க் கிடப்பதைவிட நாலுபேர் கிட்டே இருந்தால் சௌகர்யமாக இருக்கும் என்றுதான் என் அபிப்ராயம்" என்றதும் என் அடி வயிற்றில் 'பகீர்' என்றது. பெட்டியில் இருநூறு ரூபாய் சொச்சம் வைத்திருந்தேன்.

"இருக்கிறதை ஏழைகளுக்குக் கொடுக்கணும் சார். நாங்கள் எல்லாமாகச் சேர்ந்து சத்தியாக் கிரகத்துக்குப் போனோம். போலீஸ்காரப் பயலுங்கள் அந்த சின்னத்தம்பியை மாத்திரம் கொண்டுபோனுங்க!" என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

ஓயாமல் சிரித்தான். "ஹி...ஹி...ஹி...நான் கேட்டா அவன் கொடுத்தானு? நல்லா வேணும்! அவன் ஜெயிலே விட்டு வெளியே வரவே இல்லே. எல்லோருக்கும் என்னென்னமோ குடுத்தான். 'எனக்கு அந்தக் குல்லாவைக் குடுடா' என்று தானே கேட்டேன்! குடுத்தானு? ஹி..ஹி..ஹி.. நாலுபேர் சொல்லுவதைக் கேட்பதுதானே ஜனநாயகம், இல்லேயோ—ஹி..ஹி... சொல்லுமே."

என்ன சொல்லுவது என்று எனக்குப் புரியவில்லை. "எந்தக் குல்லா?" என்று கேட்டேன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு.

"மண்டையை உடைத்துவிட மாட்டேனு? மூளையற்ற பயல்!" என்று எழுந்தான். வெலவெலத்துப் போனேன். அவன் மறுபடியும் என்னை ஒரு கேள்வி போட்டு, அவனே அதற்குப் பதிலும் சொன்னுன். "வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க என்ன, ஸார், வழி? எல்லோரும் என்னென்னமோ சொல்லுகிறுர்களே! இமயமலை எவ்வளவு பெரிசு! அதை உடைத்து எறியச் சொல்லட்டுமே ஸார், காங்கிரஸ் மந்திரிகள்" என்றுன்.

நிற்காமல் போய்க்கொண்டிருந்த 'மெயில்' இப்பொழுது ஒரு ஸ்டேஷனில் நின்றது. நல்ல வேளை எனக்கு மூட்டை முடிச்சு ஒன்றும் அதிகமில்லை. பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு அடுத்த வண்டியில் போய் ஏறினதும் என் நண்பர் ஒருவர் அங்கே இருந்தார்.

விஷயத்தை ரகசியமாகவே அவரிடம் சொன்னேன். உடனே அவரும் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, "அட! அவன் பைத்தியக்காரன், ஸார். இந்த வண்டியிலிருந்து அவனை அடித்து விரட்டினேம்" என்றுர்.

ஒருவிதமாக எனக்கு உலக ஸ்மரணை வந்தது.

ஆசாரம் போச்சே!

"என்ன சார்! எதிர் வீட்டு ராமு காப்பி ஓட்டலுக்குக் கூடப் போவதில்லை. அவன் பெரிய மடிசஞ்சி சார்!" என்கிறார் மிஸ்டர் கிருஷ்ணன் ஏளனப் புன்சிரிப்போடு.

பட்டதாரி மிஸ்டர் சுந்தரம் சொல்லுகிறார்; "யார் வீட்டில் சாப்பிட்டால் என்ன சார்? எல்லாம் சுத்தமாயிருந்தால் நான் யார் வீட்டிலும் கூட சாப்பிடத் தயார்" என்றான் கம்பீரத்துடன்.

"இன்னும் பூஜையாகவில்லை, நாங்கள் ஒருவரும் சாப்பிடவில்லை, அதற்குள் வந்து பிச்சை கேட்கிறாயா, போ வெளியே!" என்று அதட்டுகிறார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

நதியில் ஸ்னானம் செய்து திரும்பி வரும் லக்ஷ்மி பாட்டி, "போடா, போடா, தூரப்போடா, எண்டா ஜாதி ஆசாரத்தைக் கெடுக்கரேள்?" என்று கூச்சலிடுகிறாள்.

"வடக்கத்தியானும் வடக்கத்தியான்! கண்ட ஜாதியோடு ஒட்டி உட்கார்ந்துகொண்டு அவன்கூட ரொம்ப ஸ்வாரஸ்யமாய்ப் பேசரான். எப்போ பார்த்தாலும் கோட்டைப் போட்டுக்கொண்டு அலையரான். அவனுக்கு ஆசாரமுந் தெரியாது, எழவுந் தெரியாதுன்னா! சதுர் வேதியாத்தான் இருந்தான் அவன். என்ன பிரயோசனம், ஆசாரமே யில்லையே சுவாமிகளே!" என்கிறார் கோபத்தால் சிவந்த உபாத்தியாயம் உமாமகேசய்யர்.

இவை ஆசாரத்தைப்பற்றி மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயங் களுக்குச் சில உதாரணங்கள். இன்னும் எத்தனையோ இந்த மாதிரி அபிப் பிராயங்கள். ஆனால் இதில் விசேஷம் என்னவென்றால், ஒருவருடைய நோக்கம் மற்றவர்களுடைய நேர்மாறாக இருக்கிறது. ஒன்றோ டொன்று முரண்படுகிறது. ஆளுக்கு ஆள் ஆசாரம் மாறுமா?

ஓட்டலில் காப்பி சாப்பிடாமல் வீட்டில் காப்பி சாப்பிடுவது ஆசாரம் என்று ஒருவர் எண்ணும்போது, மற்றவர் ஓட்டலில் மட்டு மல்ல யார் வீட்டிலுங்கூட, சுத்தமாயிருந்தால் சாப்பிடலாம். அதனால் ஆசாரத்திற்கு ஹானி இல்லை, என்று கருதுகிறார்.

காப்பி கேட்கும் நாவை யடக்காமலும் நாவிற்கு ருசியைத் தூண்டும் மனத்தை யடக்காமலும் இருப்பது ஆசாரமல்ல; சுத்த மானதைச் சாப்பிடலாம், சுத்தமல்லாததைச் சாப்பிடலாம்; யார் வீட் டிலும் சாப்பிடலாம், சாப்பிடாமலிருக்கலாம். இவைகளைப் பொருத்த தல்ல ஆசாரம்.

தன் ஆகாரத்தைப் பிறர் செய்து தரவேண்டும் என எதிர்பார்க்கிறான். தன் கைதான் தனக்கு உதவி என்று எண்ணுவதில்லை. தன்னம்பிக்கை இல்லை. அதைச் செய்யவேண்டிய உழைப்பைக் கண்டு அஞ்சுகிறான்.

சாம்பசிவ சாஸ்திரி கடவுளின் பெயரால் தன் சுய நலத்தை மறைக்கப் பார்க்கும்பொழுது, பாட்டி லக்ஷ்மி ஒரு கூட்டத்தார் ஏதோ எதேச்சையாக மேற்கொண்ட பழக்க வழக்கத்தைக் காரணம் கூறி இனியொருதரம் குளிக்கவேண்டிய சிரமத்தைத் தவிர்க்க முயலுகிறாள்.

பசித்தவனுக்குத்தான் அன்னமிடும்படி எந்த சாஸ்திரமும் கூறுமே தவிர, கடவுளுக்கு அன்னமிடு என்று எந்த அறிவாளியோ ஞானியோ கூறவில்லை. சிருஷ்டியில் ஏழைகள்தானே சாக்ஷாத் தரித்திர நாராயணனின் அவதாரம்? சுயநலத்தை ஆசாரத் திரையில் மறைப்பது ஆசாரத்திற்கே அடுக்காது. மனத் தூய்மையாகிய ஆசாரம் ஆன்மாவைப் பொருத்தது, வெளிப்பகட்டல்ல.

"நான் உயர்ந்த ஜாதிக்காரன், நீங்கள் தூர விலகிப் போங்கள்" எனக் கூறுவது ஜாதி கர்வம். ஆசாரமல்ல.

"அவன் நான்கு வேதங்களையும் படித்துக் கரை கண்டு, ஞான சூரியனாக விளங்கினாலும் எனக்குத் கவலையில்லை. அவன் குறிப்பிட்ட சில பழக்க வழக்கங்களைக் கைப்பிடிக்காவிட்டால் அந்த வடக்கத்தியான் ஆசாரமற்றவன்தான்" என மேடைப் பிரசங்கம் செய்கிறார் உமா மகேசய்யர். இவர் தன்மதிப்பற்ற புரோகிதர். தன் உழைப்பால் வாழ்பவரல்லர். பிறர்பேரில் தன் வாழ்க்கையின் பாரத்தைச் சுமத்தியவர்.

"என்ன வாத்தியார்வாளே! நான் பத்து ரூபாய் கொடுத்துடறேன். எங்கம்மா திவசம் நாளைக்கு வரது. எனக்கு உடம்பு கொஞ்சம் சரியாயில்லை. எப்படியாவது சரிப்படுத்திக்கோங்கோ நீங்க" என்று கலெக்டர் சிவராம் சொன்னால், சிரித்துக்கொண்டு "பரவால்லேன்னு. அதனாலென்னப்போ. அப்படி...இ...இ தான் இருக்கும்" என்று பதில் கூறி, சாஸ்திரத்தை அடுத்துக் கூடி காட்டிக் கொடுக்கும் சூழ்ச்சிக்காரர் இவர். தன் மதிப்பே சிறந்த பூஷணம் என்றும், தன் கையே தனக்கு உதவியென்றும், பாட்டாளி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தால் சாஸ்திரத்தை சரியானபடி அனுஷ்டிக்கச் சொல்லவும் தவறியவர்களை வற்புறுத்தவும் வல்ல புரோகிதர் ஆசாரத்தை இப்படி சந்தியில் விட்டுவிடுவாரா?

மனிதன் உள்ளத் தூய்மையை அடைவதற்கு கையாளும் சாதனங்களின் தொகுதிதான் ஆசாரம். நெருப்பு எப்படி உலகத்திலுள்ள அழுக்கையெல்லாம் எரிக்கும் சக்தியுடையதோ, அதேபோல ஆசாரம் மனிதனுடைய குற்றங்களை யெல்லாம் எரித்துவிடும். அந்த சாதனங்களாவன:—

1. தன்னடக்கம்:—அனுவசியமான ஆசைகளால் புலன்கள் சஞ்சலமடையாதிருத்தல்.

2. சளைக்காத உழைப்பு:—இதன் உயர்வையும் இதனால், ஆத்மாவின்மேல் படும் பிரபாவத்தையும் காந்தியிடமே கேளுங்கள். மனிதனுடைய எண்ணங்களைக் கண்டபடி ஊசலாடவிடாமல் மனதைக் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடியது உழைப்பு ஒன்றுதான்.

3. தியாகம்:—தன் உடலால், அறிவால், பொருளால் சாத்தியமானமட்டும் பிறருக்கு வழங்கல். பாட்டாளி மகனுக்கு இயற்கையாக உண்டாகும் குணம், தியாகம். நம் நாட்டுக் குடியானவர்களைவிட பேர் போன தியாகிகள் உண்டா?

4. தனக்கு நேரும் பல அசௌகரியங்களையும், கொடுமைகளையும் சகித்தல். தியாக மனப்பான்மை யுள்ளவர்களுக்கு அடுத்த படிதானே?

இந்த நான்கு உறுப்புக்களையும் நன்கு உணர்ந்து அதற்கிணங்க ஒருவன் தன் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வானுகில் அவன்தான் ஆசாரமுள்ளவன்.

ஆசாரமுடையவன் மிக எளிய வாழ்க்கையைத்தான் விரும்புவான். தன் ஆசாரத்தைப்பற்றிப் பிறருக்குச் சொல்லவேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படாது. ஏனென்றால், அது அவனுள்ளத்தைப் பற்றியது. வெளிப்பகட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட சின்னமுமல்ல. ஜாதிக்காவது வகுப்புக்காவது ஆசாரம் கிடையாது. தனி மனிதனுக்குத்தான் உண்டு. இது எங்கள் ஜாதி ஆசாரம் எனக் கூறுவது வெறும் புளுகு.

வெள்ளையரின் வரவு இந்தியரின் ஆசாரத்திற்கு சாவு மணி. சுகம், போகம், பொருட்பற்று இவைகளை அடிப்படையாகக் கொண்ட மேல்நாட்டு நாகரீகமானது உழைப்பு, எளிமை, தியாகம் இவற்றை அஸ்திவாரமாகக் கொண்ட நம் ஆசாரத்திற்கு எப்படிப் பொருந்தும்? நீரோடு கலக்குமா எண்ணெய்! இதனால் இன்று நம் நாகரீகமும் அதன் முக்கிய பாகமான நாகரீகமும் மங்கி வருகிறது.

இன்று பிற நாட்டார் நம்மை அவமதிக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் நாம் நம் ஆசாரத்தை மறந்ததுதான். தென் நாட்டில் நடக்கும் மிக வருந்தத்தக்க வகுப்புவாதமும் இதன் விளைவே. இது நம் நாட்டைப் பிடித்திருக்கும் வியாதி ஒவ்வொன்றிற்கும் நாம் பிறரை எதிர்க்கிறோம். இதனால் மனிதன் தன் சுயமரியாதையை —ஐயோ! இந்த வார்த்தையை உபயோகிக்க முடியாதே!—தன் மதிப்பை இழக்கிறான். பிறர் அவனைச் சக்தியற்றவன், அப்பாவி, மூடன் என்றுகூட எண்ணுகிறார்கள்.

‘பாரத தேவி’யைப் பற்றி

ஹிந்து

தமிழ்ப் பத்திரிகை உலகத்துக்கு இந்த புது தேசிய வாரப்பத்திரிகையை வரவேற்கிறோம். தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான வ. ரா. தான் இதன் ஆசிரியர். காந்திஜியின் தத்துவங்களை விளக்கும்பத்திரிகையாக இருக்கும் என்று ஆசிரியர் முதல் இதழில் சொல்லி இருக்கிறார். நமக்கு வந்திருக்கும் முதல் இரண்டு இதழ்களில், ருசிகரமான கட்டுரைகள், இலக்கிய வியாசங்கள், சிறு கதைகள், பட விமர்சனங்கள் எல்லாம் அடங்கி இருக்கின்றன.

‘மதராஸ் மெயில்’

பிரபல எழுத்தாளரான ஸ்ரீ. வ. ரா. வை ஆசிரியராகக் கொண்டு வரும் ‘பாரத தேவி’ என்ற தமிழ் வாரப் பத்திரிகையை வரவேற்கிறோம். அவருடைய பரந்த அநுபவமும், பலதுறைச் சாதுர்யமும் தமிழ் வாரப்பத்திரிகை உலகத்துக்கு புதுவழியைக் காட்டும் என்பது நமக்கு நிச்சயம். கிழவர்களும் குழந்தைகளும் படிப்பதற்கு ருசி காட்டும் விஷயங்கள் இருக்கின்றன. தமிழ் பொது ஜனங்களுக்குப் பெரிதும் உபயோகமாக இருந்து வரும் என்று நம்புகிறோம்.

இந்தியன் எக்ஸ்பிரஸ்

அழகானதாகவும், வெற்றிபெறக் கூடியதாகவும்.செய்யக்கூடிய எல்லா வாரக் கடைசி பத்திரிகைகளுக்கான அம்சங்களும் இதில் இருக்கின்றன. பிரபல எழுத்தாளர்கள் விஷய தானம் செய்திருக்கிறார்கள். எளிய நடையில், ஆழ்ந்து படிக்கவும், பொழுது போக்குக்கும் ஆன விஷயங்கள் இருக்கின்றன. பொதுஜன மனதை இது கட்டாயம் கவரக் கூடியது. பத்திரிகை பார்க்க அழகாக இருக்கிறது. இரண்டணவுக்கு நல்ல பத்திரிகை. முதல் இதழே நல்ல அறிகுறி காட்டுகிறது.

ஈழகேசரி

ஸ்ரீ.வ. ரா. வை தமிழ் நாடு நன்கறியும். லங்கையில்கூட அவர் சில காலம் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்ததை லங்கைத் தமிழரும் மறந்து விடவில்லை.

குமரன்

‘மணிக் கொடி’ வாரப் பதிப்பாக இருந்தகாலத்து அன்னால் எழுதப் பட்ட உரைநடைச் சித்திரங்கள் தமிழர்கள் மறக்க முடியாதவை. ஸ்ரீ. வ. ரா. வின் புதிய முயற்சியை வரவேற்கிறோம். கட்டுரைகள் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஊழியன்

பல பத்திரிகைகளில் இருந்து அநுபவம் பெற்ற வ. ரா. பொறுப்பாசிரியர். காங்கிரஸ் ஆணை வழி நின்று தொண்டாற்றும் அருங் கொள்கையைக் கொண்டது இப்பத்திரிகை என்பது, ‘காங்கிரஸ் கண்டிப்பு’ என்னும் தலையங்கத்தின் மூலம் புலனாகிறது.

ஹநுமான்

மஹாகவி பாரதியாருடன் இருந்து பழகும் பாக்யம் பெற்றவர்

வ. ரா. வாக்கியங்களில் வேகமும் ஜீவனும் புகுத்தும் பேனா வ. ரா. வின் கரத்தில்தான் இருக்கிறது. கோர்வையாகவும், லளிதமாகவும், அழகுடனும் திறம்பட எழுதும் பண்புடையவர். அவர் பேனாவின் திறமை 'பாரத தேவின்' பல பக்கங்களில் பிரகாசிக்கிறது.

ஹிந்துஸ்தான்

ஆசிரியர் வ. ராவை தமிழ் நாடு நன்கு அறியும். அவருடைய ஜீவன் நிறைந்த எழுத்துக்களைத் தாங்கி வெளிவரும் பாரத தேவியில் பல புது அம்சங்கள் நிறைந்திருக்கின்றன, இவ்வளவு லக்ஷியங்களைத் தாங்கி வரும் பாரத தேவிக்கு தமிழர் அன்பும் ஆதரவும் அளிப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

சந்திரோதயம்

தமிழ் எழுத்தாளர் உலகத்தில் இன்று ஸ்ரீ. வ. ரா. இணையற்றவராய் விளங்குகிறார். நூறு பக்கங்களுக்குக் குறையாமல் வெளிவரும் இப்பத்திரிகையில் அரசியல் விஷயங்கள், பல சிறந்த எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள் முதலிய பல அம்சங்கள் காணப்படுகின்றன.

துருவம்

வெளித்தோற்றமும் அமைப்பும் வேறு சில பிரசித்தமான தமிழ் பத்திரிகைகளைப் போலவே இருக்கின்றன. விஷயமும் கிட்டத்தட்ட அப்படித்தான். இதன் நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ. வ. ராவை தமிழகம் நன்கு அறியும். அவர் கவி பாரதியாருடன் இருந்தது முதல் இன்றுவரையில் தமிழ் தொண்டிலேயே ஈடுபட்டவர். தமிழுக்கு அவர் இந்த பாரத தேவி மூலம் பெரும் புதுத்தொண்டு செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

ஆநந்த விகடன்

ஒரு புதிய பத்திரிகை ஆரம்பிப்பதற்கோ, நடத்துவதற்கோ ஒரு மனுஷரிடம் என்ன யோக்யதை இருக்கவேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அந்த யோக்யதை அவரிடம் பூரணமாய் இருப்பது தான் காரணம்.

பத்திரிகையில் எழுதுவதற்கு வ. ரா. விடம் விஷயங்கள் இருக்கின்றன. அந்த விஷயங்களைத் தனித்த முறையில் சொல்லக்கூடிய சக்தியும் அவருக்கு இருக்கிறது.

வ. ராவின் அபிப்பிராயங்களை நாம் ஒப்புக்கொள்கிறோமோ, இல்லையோ, அந்த அபிப்ராயங்கள் அவருடைய சொந்தமானவை என்பதை ஒப்புக்கொண்டேயாகவேண்டும். அந்த அபிப்ராயங்களை ஆர்வத்துடன் சொல்கிறார், அழுத்தமாகச் சொல்கிறார், தனித்த முறையில் சொல்கிறார் என்றும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

இப்படியாக வ. ரா. வின் சக்திகளை நாம் நன்கறிந்திருந்தோம். ஆனால் அந்த சக்திகளை அவர் இது வரையில் பூரணமாய் உபயோகிக்கவில்லை. அவரால் தமிழ் நாடு அடைய வேண்டிய லாபம் முழுவதையும் இன்னும் அடையவில்லை என்ற எண்ணமும் நமக்கு இருந்தது.

பாரத தேவி'யில் வ. ரா. எழுதியது போக பாக்கியுள்ள பக்கங்களில் பழைய எழுத்தாளர்களும், புதிய எழுத்தாளர்களும் பலர் எழுதி இருக்கிறார்கள். இவர்களில் கு. ப. ராஜகோபாலன், சி. சு. செல்லப்பா—இவர்களை முக்கியமாகச் சொல்லவேண்டும். இவர்களுடைய எழுத்தில் உண்மையும், ஜீவசக்தியும், வாழ்க்கை அநுபவமும் நிறைந்திருக்கின்றன. வ. ராவுக்குத் தகுந்த உதவியாளர்கள்தான்; சந்தேகமில்லை.

சுந்தரத்தின் சூரத்தனம்

'வரதன்'

அன்று அமாவாசை. எங்கும் ஒரே இருட்டு. எதிரில் ஒருபாக தூரத்திற்குள் வருபவரைக்கூட இன்னாரென்று அடையாளங் கண்டு கொள்ள முடியாத அவ்வளவு கடுமையான இருள். மணி ஏழரை இருக்கும். தாழ்வாரத்தில் உட்கார்ந்துகொண்டு சுந்தரம் தன் பள்ளிக்கூடப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வயது பதினொன்று. வாசிப்பது முதல் பாரம். சுந்தரம் வகுப்பில் முதல் பையன்தான்.

சுந்தரத்தின் தகப்பனார் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு தினசரிப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தார். திடீரென்று ஆச்சரியம் ததும்பிய குரலில், "அம்பீ சுந்தரம்! கேட்டாயா கதையை! இதோபார். ஒரு செய்தி கிடைத்திருக்கிறது, படிக்கிறேன். உற்றுக்கேள்" என்று சொல்லிவிட்டுத் தகப்பனார் தடதட வென்று வாசிக்கலானார்.

"நேற்று ஒரு பட்டிக்காட்டுப் பையன் ஆட்டுக்குத் தழை பறிக்க ஒரு அலக்கு அரிவாளுடன் காட்டுக்குச் சென்றான். வேண்டிய தழைகளை அறுத்துக்கொண்டு வீடு திரும்புகையில் பக்கத்துப் புதரிலிருந்து ஒரு சிறுத்தை ஓடி வந்து எதிர்த்தது. பையன் தன்னிடமிருந்த அலக்கு அரிவாளால் அதன் தலைப்பக்கத்தில் குத்தித்தள்ளி, தழைக்கட்டை எதிரில் எறிந்துவிட்டு, தைரியம், சமயோசித புத்தி இவைகளைக் கைவிடாமல் பக்கத்தில் உள்ள புளியமரத்தில் ஏறிக்கொண்டான்.

பையன் அம்மரத்திலேயே இரண்டு மணி நேரம் இருக்க நேர்ந்தது. சிறுத்தையும் சென்றபாடில்லை. கடைசியில் அவ்வழியே வந்த வழிப்போக்கர்களுடைய உதவியால் பையன் சிறுத்தையைத் தாக்கிக் கொன்றான். பையனுடைய வீரம் போற்றத்தகுந்தது" என்றிருந்தது.

"சுந்தரம்! நீ இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்றார் தகப்பனார்.

"அவன் ஒரு பையனாய் இருக்க முடியாது. அவன் ஒரு வயதான பலிஷ்டனாய்த்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் என்னைப் போல ஒரு பையன் உன்னைக் காட்டிலும் ரொம்ப பலமுள்ள ஒரு சிறுத்தையோடு எப்படி எதிர்த்துப் போராட முடியும்?" என்றான் சுந்தரம்.

"சுந்தரம், உன் புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தி நீ வார்த்தையாடவில்லை. ஒருவன்

யானையை மிஞ்சிய பலவானைக இருக்கலாம். ஆனால் நெஞ்சில் தைரியம் என்பது மருந்துக்குக் கூட இல்லாத கோழையாய் இருப் பது சாத்தியம். வேறொருவன் பார்வைக்குப் பலஹீனனுயிருக்க லாம்; இருந்தாலும் தன்னிடம் உள்ள தைரியத்தால் எதையும் செய்யும் சாமர்த்தியம் படைத்தவ னுகலாம். கேள், இடறினால் கீழே விழுந்து காயம் அடைந்து விடுவாரோ என்றெல்லாம் நாம் சந்தேகிக்கும் கிழவர்—மகாத்மா காந்தி—தன்னிடம் உள்ள தன் னம்பிக்கைக் களஞ்சியத்தால், தளராத தைரியக் கோட்டை யினுல், உலகம் பிரமிக்கும்படி யான பல தீரச் செயல்களைச் செய்துவிட வில்லையா? வெறும் தேக பலமா காரணம்? மனோ பலம் அல்லவா பெரிது? ஆதலால் வயதோ, சதைப்பலமோ முக்கிய மல்ல, தைரியந்தான் முக்கியம்" என்று தகப்பனுர் சொன்னுர்.

தகப்பனுரின் கூற்றை மறுப் பவன் போல சுந்தரம், "அதெப் படி முடியும் அப்பா! வேண்டிய தைரியம் எனக்கு வந்துவிட்ட தாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது பலமில்லாமற் போனுல் எப்படி நான் என் எதி ரில் வந்து விரட்டும் சிறுத்தையை எதிர்ப்பது?" என்றுன்.

"பலம் என்ற பேச்சைத் தூரத்தள்ளி விடு. உன்னிடம் ஒரு துளி தைரியமாவது உண்டு என்று ரூபிக்க முடியுமா? என் னுடைய ஆபீஸ் அறையில்—நடைபாதை உள்ளே—தன்னந் தனியே இன்றிரவு தூங்கிவிடு; பார்ப்போம்" என்ருர் தகப்பனுர் மிகப் பயங்கரமான பந்தயம்!

சுந்தரம் எப்பொழுதும் தன் தாயின் படுக்கைக்குப் பக்கத்தி லேயே படுத்து வந்த பழக்க முள்ளவன். இந்த ஏற்பாட்டை மீறின எந்த தினத்திலும் அவ னுக்குத் தூக்கம் வந்ததுமில்லை. மன நிம்மதியுடன் பயமின்றிப் படுத்திருந்தவனும் இல்லை. அன்றும் தகப்பனுர் தமாஷுக் காகத்தான் தனியே படுத்துத் தூங்க முடியுமா என்று கேட்ப தாக எண்ணிக்கொண்டான்.

'சரி' என்றும் ஒப்புக்கொண் டான். பேச்சை மாற்றஉத்தேசித் துப் பள்ளிக்கூடத்தில் விளையாட் டைப்பற்றி ஏற்பட்டுள்ள வித விதமான சீர்திருத்தங்களைக் கூற ஆரம்பித்தான்.

தகப்பனுர் குறுக்கிட்டு, "அது சரி, நீ இன்று ஆபீஸ் அறையில் தனியே படுத்துத்தான் ஆக வேண்டும்" என்று மறுபடியும் ஊர்ஜிதப்படுத்தினபோது, சுந் தரம் கவலையுற்றுன். வெறும் பந்தயப் பேச்சிலிருந்து அது முடி வான கட்டளையாக மாறிவிட்ட தைக்கண்டு கலங்கினுன். அவ்வித சந்தர்ப்பங்களில் அப்பாவின் பிடிவாதத்தை அவன் அறிந் துள்ளதுதான் காரணமாகும்.

"இன்றைக்கு வேண்டாம் அப்பா! இன்னொருநாள் இந்தப் பரீக்ஷையைப் பார்க்கலாம்" என்று சுந்தரம் எவ்வளவோ சாகசம் செய்து பார்த்தும் பலிக்க வில்லை. தகப்பனுரின் பிடிவாதமே பலித்தது.

தகப்பனுர் பத்திரிகையில் ஆழ்ந்திருக்கும் சமயம் பார்த்து,

மெதுவாக நகர்ந்து சென்று, தனக்கென நடைபாதையில் (தாழ்வாரத்தில்) விரிக்கப்பட்டிருக்கும் பாயில் திருட்டுத்தனமாய்ப் படுத்துக்கொண்டு காலோடு தலையாய்க் கம்பளியைப் போட்டு மூடிக்கொண்டான். சிறிது நேரத்துக்குள் 'குறட்டை' விடவும் ஆரம்பித்தான்.

சுந்தரம் தூங்குவது போலப் பாவனை செய்வதை, அவன் தகப்பனர் அறியாதவரா? எழுந்திருந்தார். சுந்தரத்தின் படுக்கைக்குச் சென்ருர். அவனைத் தட்டி எழுப்பினர். சுந்தரம் 'அசந்து' தூங்கிக்கொண்டிருப்பவன் போல நடித்தான்.

"உன்னை நான் இன்று இங்கே தூங்கவிடமாட்டேன். எந்நேரமானபோதிலும், நீ ஆபீஸ் அறையில் தான் தனித்துப் படுத்துக் கொள்ளவேண்டும். உன் தைரியத்தைக் காண்பிக்க வேண்டும். எங்கே பார்ப்போம்" என்று ஹிம்சை செய்ய ஆரம்பித்தார்.

சுந்தரத்துக்கு வேறு வழியில்லை. தகப்பனர் அவனது பாயைச் சுருட்டிக்கொண்டு ஆபீசறைக்குச் சென்ருர். சுந்தரமும் தொடர்ந்தான். வழியில் நின்ற தாயைப் பார்த்தான். அந்தப் பார்வையில் என்ன தோன்றிற்று தெரியுமா?

"அம்மா, நீயாவது உன் வோட்டைக் கொடுத்து என்னைக் காக்கக் கூடாதா? என்னைக் கலங்க அடிக்கும் தகப்பனரின் பிடிவாதத்தைப் போக்கடிக்கக் கூடியது உனது அன்பான வார்த்தைகளும், ஆறுதலளிக்கும் பார்வையும் அல்லவா? நீயும் இப்படி என்னைக் கைவிடுதல் தகுமா?" என்றெல்லாம் கெஞ்சுவது போலிருந்தது.

"எதற்காக அவன் ஆபீஸ் அறையில்தான் படுத்துக்கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறீர்கள்? இன்றைக்கு இங்குதான் படுத்துக்கொள்ளட்டுமே" என்று மகனுக்காகப் பரிந்து பேசினள் தாய்.

"பரவாயில்லை; பரீக்ஷைதான் செய்து பார்ப்போம்" என்ருர் சுந்தரத்தின் தகப்பனர். சுந்தரமும் குனிந்த தலை நிமிராமல் கூடச் சென்ருன்.

"அப்பா, காற்றடி காலமாயிற்றே. உன் ஆபீஸ் அறை முழுவதும் கூளமும் குப்பையுமாகத்தான் இருக்கும். தேள் உபத்திரவம் ஜாஸ்தியா யிருக்குமே. அதற்கென்ன செய்கிறது. வெளிச்சத்தை வைத்துக்கொள்ளட்டுமா?" என்ற கடைசி அஸ்திரத்தையும் பிரயோகித்துப் பார்த்தான் சுந்தரம்.

"வெளிச்சம் எதற்கு? வேண்டுமானல் பெஞ்சியின்மேல் படுத்துக்கொள். இருட்டைக் கண்டு கலங்காதிருக்கவே, நான் உன்னை இப்படிப் பழக்குகிறேன்" என்ருர்.

"சரி. கதவை மாத்திரம் திறந்து வைத்திருங்கள்" என்று சுந்தரம் ஈனக் குரலில் சொன்ஞன்.

"அப்படியே செய்கிறேன். ஆனல் கொஞ்ச நேரங் கழித்துத் திருட்டுத்தனமாய் உன் தாயண்டை போய்ப் படுத்துக்கொண்டதாகத் தெரிந்தால், பள்ளிக்கூடப் பையன்கள் எல்லாரும்

கேலி செய்யும்படி ஏற்பாடு செய்வேன்" என்று சொன்னபோது தான் சுந்தரத்தின் துக்கம் எல்லையை மீறியது. ஏன்? சுந்தரம் ரோஷமுள்ளவன்.

காடு கடத்தப்பட்டவன்போல நடுக்கங் கொண்டான் சுந்தரம். துக்கமும், கோபமும் அவனை மாறி மாறித் துன்புறுத்தின. தகப்பனாரின் ஹிம்சையைச் சகிக்க முடியவில்லை. பத்திரிகையின் பேரிலும் 'பாய்ந்து' விழுந்தான். வாலிபனின் வீரச்செயலை ஏன் அவர்கள் பிரசுரித்தார்கள் என்று கடுங்கோபம் கொண்டான்.

இரவு ஆக, ஆக வீட்டில் நிசப்தம் நிறைய ஆரம்பித்தது. சுந்தரத்தின் ஹிருதயமும் அதிகம் துடி துடித்தது. தனது வாழ்க்கையில் கேள்விப்பட்டுள்ள கதைகள் பலவற்றை—பேய், பிசாசு இவைகளைப்பற்றிய கதைகள்—நினைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாடத்தில் அதிகம் மறதி கொள்ளும் பையன்கள் கூட இந்த விஷயத்தில் மறதிக்குச் சீட்டுக் கொடுத்து விடுவார்கள்.

பள்ளிக்கூடம் போகும் பாதையில் உள்ள ஆலமரத்து முனிப் பாய்ச்சலையா சுந்தரம் மறக்க முடியும்? அல்லது தன் கூட்டாளி கோபுவின் தகப்பனார் பேயறைபட்டு அதனால் ரத்த வாந்தி கண்டு இறந்த செய்தியை மறக்கமுடியுமா? இவைகள் எல்லாம் நினைவுக்குவர, சுந்தரத்தின் முகம் பயத்தால் வெளுத்துப் போயிற்று. குடல் நடுக்கம் கண்டது.

சுந்தரம் படுத்திருக்கும் அறைக்கு அடுத்தாற்போல் வாசல் பக்கம் தெருவில் பஞ்சாயத்து வெளிச்சம் அணையும் தறுவாயில் எரிந்து கொண்டிருந்—. ஆகலால் வெளிச்சம் பளிச்சென்று இல்லாமல் சிறிது மங்கலாகவே தென்பட்டது. தெருவில் போகிறவர்களுடைய நிழல் ஆபீஸ் அறையின் சுவரில் இலேசாய் விழும். அதுவும் சுந்தரத்தின் பீதியை அதிகப்படுத்தியது.

ஒலியெல்லாம் அடங்கி யிருந்த அந்த நள்ளிரவில், சுந்தரத்தின் காதுகளில் எவ்வித சிறிய சத்தமும் விழாமல் இருக்குமா? தகப்பனாரின் 'குறட்டை', கடிகாரத்தின் 'டிக், டக்' என்ற சத்தம், சுவர்க் கோழியின் கூக்குரல், மரங்களில் ஏற்படும் 'சலசல' வென்ற சப்தம், எல்லாம் அவனுக்கு வெகு தெளிவாகக் கேட்டன.

மூச்சுவிட முடியாவிட்டாலும் பரவாயில்லை என்று எண்ணிக் கம்பளியால் இறுக மூடிக் கொண்டான். எந்த நிமிஷத்தில் பேய், பிசாசுகள் தன்னை வந்து அமுக்கி விடுமோ என்று அஞ்சின வண்ணம் பொழுதைப் போக்கி வந்தான்.

தூக்கம் வராமற்போனால்,ஒரே இடத்தில் படுக்கை கொள்ளாது. அத்துடன் பயமும் கலந்து கொண்டால் கேட்பானேன். சுந்தரம் அவசரத்தில் எழுந்து படுக்கையைச் சுருட்டினான். பெஞ்சிக்குக் கீழே விரித்துப் படுத்துக் கொண்டான். முன்னதைவிட இந்த இடம் தேவலை என்ற கனவோ என்னவோ?

தூக்கத்தை வருவித்துக் கொள்வதற்காகவே இரு கண்களையும் இறுக்கி மூடிக்கொண்டான். கம்பளியையும் விட்டபாடில்லை. தாய் பக்கத்தில் படுத்திருக்கிறதாக நினைத்துக் கொள்ளவே, சுந்தரம் தன்னை அறியாமலேயே தூங்கவாரம்பித்தான்.

கடைசியாக வெகு சிரமப்பட்டுத் தன் கண்களைத் திறந்தான். அருகில் அம்மா படுத்துக்கொண்டிருக்கிறாளா என்று அரைத் தூக்கத்தில் தடவிப் பார்த்தான். கையில் தென்பட்ட பெஞ்சியின் காலைப் பிடித்துக் கொண்டான். தான் தனியே படுத்திருக்கும்



தூக்கத்தோடு தூர்ச் சொப்பனமும் தொடர்ந்தது. தகப்பனார் பத்திரிகையில் படித்துக் காட்டிய சிறுத்தை சுந்தரத்தைத் துரத்தவாரம்பித்தது. கால் நகங்களால் பூமியைக் கிளறுவதையும், பாய எத்தனிப்பதையும் கனவில் கண்டான். தப்பியோடத் தான் எவ்வளவு முயன்றாலும், அவனது கால்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. சுந்தரம் கண்களைத் திறக்க முயன்றான். முடியவில்லை. என்ன செய்வான் பாவம்!

ஞாபகம் உதிக்கவே, பயத்தின் அடிமையானான்; உடம்பு வியர்க்க ஆரம்பித்தது. 'சலசல' என்ற ஒரு சப்தம் கேட்கவும் சுந்தரத்தின் நடுக்கம் எல்லை மீறி விட்டது; கண்களை அகல விழித்தான்.

ஒரு உருவம் நடப்பது தென்பட்டது. 'வந்தது ஆபத்து!' என்று எண்ணிவிட்டான். சுந்தரம் தனது கடைசிக்காலம் வந்துவிட்டது என்று நினைக்கவே உயிரைத் 'திரணமாய்' மதித்

தான். வாழ்க்கையில் ஒரு வெறுப்பும் சாவில் விருப்பும் உண்டாயின. மகத்தான நம்பிக் கைக் குறைவு. உடம்பில் ஒரு புதிய பலம். மனதிலே ஆழங் காண முடியாத அளவுக்குத் தைரியம்.

அடுத்த நிமிஷம் அசாத்திய நம்பிக்கை. உருவத்தைப் பேயாய் மதித்தான்; ஆதலால் அது தன்னை விழுங்குவது நிச்சயம். தான் ஏன் சும்மா இருத்தல் வேண் டும் என்றெண்ணினன். கொஞ் சங் கொஞ்சமாய் நகரலானன். உருவமும் இவனை நோக்கி வரவே, சுந்தரம், அதன் கால்களை இறுகக் கட்டிக் கொண்டு தன் முழு வலு வையுங்கொண்டு ரம்பம் போன்ற பற்களால் அழுத்தமாய்க் கடித் தான். ரத்தம் பீறிட்டது.

"ஐயோ! ஏதோ தீண்டிவிட் டதே" என்ற இடிமுழக்கம் போன்ற குரல் கேட்டது. தொடர்ந்தாற்போல பெஞ்சியை உருட்டிக்கொண்டு யாரோ விழு கின்ற பேரொலி ஒன்றும் காதில் பட்டது. ஒரு க்ஷணப் பொழு துக்குள் சுந்தரத்தின் தகப்பனு ரும், வீட்டு வேலையாளும் ஒரு 'லைட்' டுடன் உள்ளே நுழை யவே கண்ட காட்சி யென்ன தெரியுமா?

வெகு நாட்களாய் தேடப்பட்ட ஒரு கொள்ளைக்காரன் காலில் ரத் தம் ஆறுய்ப்பெருக ஸ்மரணை யற்று கிடப்பதைக் கண்டார்கள். போலீஸாருக்குத் தகவல் அறி விப்பு, தடபுடல் அவர்களது ஆர்ப் பாட்டங்கள்; குதூகலச் செய்தி பரவுதல், எல்லாம் முறையே நடைபெற்றன.

மறுநாள் சுந்தரத்துக்கு வகுப் பில் வாழ்த்துமாரிதான். பையன் கள் எல்லோரும் சுந்தரத்தி னிடம் மரியாதையும், பயமும் வைக்கலாயினர். உபாத்தி யாயரின் கைகுலுக்கு, போலீ ஸாரின் நன்றி, ஊராரின் நன் மதிப்பு, எல்லாம் ஒருங்கே திரண்டு வந்தன. சுந்தரத்தின் 'உயிருக்கு உலை' வைக்க இருந்த முதல் நாள் இரவைப்பற்றிப் பேசாத ஜனங்களே ஊரில் இல்லை என்றால் அது உண்மை.

வாழ்க்கை

(பிராங்க் டௌன்ஷெண்டு என்ற ஆங்கில
கவியின் மூலத்திலிருந்து)

(கு. ப. ரா.)

வாழ்க்கை ஒரு வெற்றி, ஒரு துடிப்பு
ஒரு காதற்பா, ஒரு இசை
மண்ணின் மாயமோனையில் பிறந்தது.

அரைத் தூக்கத்திலும் அதிசயத்திலும் அது உதிக்கிறது.
விடியற்காலை விடுதலையில் வளர்கிறது —
செயல் செய்யும் தேவையில்
கண்கண்டதற்கு மேல் ஓடுகிறது கனவு,
பாதையெல்லாம் பூவிரிக்கிறது பேரவா —
யௌவனம் மாறுகிற வரை!

பிறகு வருகிறது யோசனை,
கரும வெற்றிகளில் பிறந்த களிப்பு,
உற்பத்தி செய்வதிலிருக்கும் உள்ள நெகிழ்ச்சி,
அரை குறையற்றதின் அழகு,
நிறைவின் நிம்மதி,
மண்ணின் மற்றெல்லா மகிழ்ச்சிகள் —
மாலை வரை!

இருண்டதும்,
மனிதன் மறுபடியும் பிரயாண மாகிறான் தன் வழியே —
அமைதியாக!



மனச்சாட்சி

நம் மனதுக்கு எது தர்க்க ரீதியில் சரியென்று படுகிறதோ அதற்கு ஏற்ற வகையில் நடந்து கொள்வதற்கு நம்மைத் தூண்டும் அந்த ரகசியக்குரல், அந்த சத்குண தத்துவம்தான் மனச்சாட்சி என்பது. அப்படி நடந்து கொள்ளாத எதிரிடை சந்தர்ப்பங்களில் கண்டிப்பதும் அதே மனச்சாட்சிதான். சொல்லப் போனால் சத்குணத்தின் ஜீவ ஊற்றுதான் மனச்சாட்சி.

* * *

சகல செல்வங்களையும் விட விரும்பக் கூடிய பொருள் நல்ல மனச்சாட்சி. தன்னைக் கண்டித்துக்கொள்ள இடம் ஏற்படாத வகையில், தன் தினசரிச் செயல்களைப் படுக்கையில்படுத்துக் கணக்கெடுக்க, கொடுத்து வைத்த ஒருவனுடைய தூக்கம்தான் எவ்வளவு இனிமையாக இருக்கிறது?

* * *

மூடனும், அடிமையும் தான் பணத்தைச் சேகரிப்பார்கள். நான் வேறொரு சொத்தும் சேகரிக்காவிட்டாலும் பரவாயில்லை. தெளிவான மனச்சாட்சியோடு இருந்தேனானால், குறைந்தே போகாத ஒரு சுரங்கமாக இருக்கும் அது.

* * *

அரசர்கள் அரண்மனைகளிலும், ஆலோசனை மந்திரங்களிலும் போயிருக்க வேண்டிய ஜோலிதான் இருக்கிறது மனச்சாட்சிக்கு. அவர்களுக்கு உண்மையாகவும் அது இருக்க வேண்டும்.

எல்லா கோர்ட்டுகளிலும் அதன் கீழ்தான் கொள்கைகளே வகுக்கப்படுகின்றன. தங்கள் மந்திராலோசனை சபைகளுக்கு அதை அவர்கள் தலைவணங்கி விடுகிறார்கள். அதன் குரலையே கவனித்துக் கேட்கிறார்கள். பொய்யன் குரலை அவர்கள் கேட்பதில்லை.

* * *

மனச்சாட்சியே! அரச சபைகளில் உள்ள சிப்பந்திகள் உண்மைபாகவும், நம்பிக்கையாகவும் இருக்கச் சொல்லு. பெரியோர்களை உதாரணங்களாக அவர்களுக்கு எடுத்துக் காட்டு. குள்ள நரிகளுக்கும், ராஜீயவாதி

களுக்கும் கெட்ட மனச்சாட்சியால் அவதிப்பட்டவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லு.

அவர்களுக்கு நீ ஒரு கேடயம் போல் இரு காப்பதற்கு. கஷ்டம் வந்தகாலத்தில் துணிவோடுஇருக்கச்செய் அவர்களை. நல்ல காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போது காட்டு மிருகங்களின் உறுமல்களுக்கு எல்லாம் பயப்படக்கூடாதென்று சொல்லு.

* * *

மனிதனின் சுதந்திரத்துக்கு, தகர்க்க முடியாத இருப்பிடம் மனச்சாட்சிதான்.

* * *

மரணப்படுக்கையில் இருக்கிறான் ஒரு நீசன்; அப்போது அவன் காதிலே விழுகிறது ஒரு குரல், அவன் ஆத்மாவின் ஆழத்திலிருந்து கிளம்பி. அவன் அத்தனை வருஷங்களாகச் செய்திருக்கும் குற்றங்களை எல்லாம் தமுக்கு அடிக்கிறது ஒரு சின்ன அவகாசத்தில். கழுகுகளைப்போல் அவன் காதில் கத்துகின்றன.

அவன் மானங்கெட்ட நினைவுகளையும், செய்கைகளையும் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டுகிறது. அப்போது அவன் ஆத்மா என்ன பாடுபடுகிறது? அவன் கண்கள் நரகவேதனையோடு தணல் வீசுகின்றன. இத்தனையையும் மனச்சாட்சி உண்டாகுகிற அந்தக் கொஞ்சநேரம் போவதும் எவ்வளவுகோரமாக இருக்கிறது.

* * *

இந்த சாதாரண வித்யாசத்தை அறிந்துகொள். அது தெரியாமல் ஆயிரக் கணக்கானவர்கள் அழிந்திருக்கிறார்கள். உன் மனச்சாட்சி சட்டமாகாது. கடவுளும், கார்ணமும் சேர்ந்து சட்டத்தை சிருஷ்டி செய்தார்கள் உனக்குள்ளே மனச்சாட்சியை வைத்தார்கள்.

எதற்காக? தீர்மானம் செய்வதற்கு. உன்னுடைய உணர்ச்சி வேகத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கெல்லாம் வசப்படாமல், ஏற்கனவே இருக்கும் சட்டத்தின் படி உண்மையாக நீ நடந்து கொண்டு தீர்மானம் செய்வதற்கு.

* * *

மதவிஷயங்களில் அபிப்ராயம் கொள்வதற்கும், வெளிக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல், தன் மனச்சாட்சிக்கு தோன்றினபடி கடவுளைத் தொழுவதற்கும் கொடுக்கப்படும் அநுமதியே, உரிமையே மனச்சாட்சி, சுதந்திரம்.

* * *

மனச்சாட்சியை இழந்துவிட்ட ஒருவனிடம், அவன் வைத்துக் கொள்ள லாயக்கான உயர்ந்த வஸ்து எதுவுமே இல்லை.

* * *

மனித ஹிருதயத்திற்குள்ளே இருக்கும் தெய்வீக உத்திரவான மனச்சாட்சி, ஒவ்வொரு நினைப்பு, வார்த்தை, செய்கையையும் பரிசீலனைக்குக் கொண்டுவருகிறது. அவனைத் தூண்டுகிறது அல்லது எச்சரிக்கை செய்கிறது. ஒப்புக் கொள்ளுகிறது அல்லது தடை போடுகிறது. உணர்ச்சி வசத்தாலா, நியாய வசத்தாலா என்று கடிவாளத்தை கையில் பிடிக்கிறது.

மேலிருந்து சுவர்க்கம், உள்ளிருந்து மனச்சாட்சி அவன் காதுகளில் 'பாவம் செய்து விடாதே' என்று ஓதுகிறது.

* * *

எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லக்கூடிய ஓரே நக்ஷத்திரம்தான் இருக்கிறது. அதன் அர்த்தத்தை விளக்கும் சக்தி மனித ஹிருதயத்தில் தான் இருக்கிறது. அதற்கு பெயர்தான் மனச்சாட்சி.

* * *

ஒரு சிறு தூசி விழுவதைக் கூட எப்படிக் கருவிழி உணர்ந்து விடுகிறதோ அதேமாதிரி தான் ஒரு மிருதுவான மனச்சாட்சி கெடுதலை உணர்த்தி விடுகிறது.

* * *

ஒரு மனிதனின் சொந்த மனச்சாட்சிதான் அவனுக்கு பூரணமான ஒரு நியாயசபை. எங்கே யாவது பிசாசைக் கண்டால் பயப்படுவதுபோல், 'அபிப்ராயம்' என்பதற்கு அவன் கவலைப்பட வேண்டியதே இல்லை.

* * *

வேடன் குண்டால் அடிபட்ட மான் புதர், கல், முள் இவைகள் மீதெல்லாம் ஓடி தன் பலத்தைக் குறைத்துக் கொள்கிறதே தவிர, தன் தேகத்திலிருந்து குண்டை வெளியே எடுக்க முடிகிறதில்லை. அதேமாதிரி குழம்பின மனச்சாட்சி கொண்டவர்கள், எங்கெங்கே போனாலும் அந்தக் காயத்தைத் தங்களோடு தான் கொண்டு போகிறார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பொறுமைதான் சிறந்த நிவாரணி.

வேண்டியபடி எல்லாம் நீண்டு கொடுக்கவோ, அல்லது தப்பாக உபயோகப்படுத்தவோ இந்த பூமியில் மனச்சாட்சியைப்போல் வேறு எதுவும் கையாளப்பட்டதில்லை.

* * *

'ஒரு சமயம் நாஸ்திகக் கூட்டமொன்றில் நான் இருந்தேன். நான் அந்தக் கட்சியை எடுத்துக் கொண்டேன். கடவுள், பக்தி இரண்டையும் எதிர்க்கும் பிரமுகனாக அந்தக் கூட்டத்தில் விளங்கினேன். அதற்காக கூட்டத்தில் எல்லோரும் கைதட்டி ஆர்ப்பரித்து என்னைப் பாராட்டினார்கள்.

அவர்கள் அப்படிச் செய்யவும் என் மனதில் பகீர் என்றது!

உடனே நான் எனக்குப் பதில் சொல்லிக்கொண்டேன். 'அட கடவுளே! ஒரு மனிதன் நிமிர்ந்து நடக்கிறான். கடவுள் செய்திருக்கும் அற்புத வேலைகளைக் கண்ணால் பார்க்கிறான். தன் அறிவு, தர்க்கமுறை இவைகளை உபயோகப் படுத்துகிறான்.

மனச்சாட்சியில் உண்டான காயம் தழும்பாகிறதில்லை. காலம் அதைத் தன் இறக்கைகளால் ஆற்றுகிறதில்லை. அறிவாளால் திறந்து வைத்தே இருக்கிறது. இப்படி இருந்தும் இந்த அறிவையும், தர்க்க ரீதியையும் தன்னைச் சிருஷ்டி செய்தவனையே எதிர்ப்பதற்கு உபயோகப் படுத்துவதென்றால்!

பிராயச்சித்தம்

(பு. வே. சுப்ரமண்யம்)

உபகுப்தன் அந்தப் பக்கம் வந்தது அதுதான் முதல்தடவை. அதற்குக் காரணம் தனியாக ஒன்றுமில்லை. 'அது வேசிகள் இருக்கும் தெரு என்று அவன் அந்தப் பக்கம் போவது கிடையாது' என்பதல்ல. யார் அங்கே வசித்தால் அவனுக்கென்ன? அவனுக்கு வேண்டியது ஆகாரம்; வெளி யுலகத்திற்கு அவன் வெறும் பிச்சைக்காரன்—யாரோ ஒரு புத்த பிக்ஷு.

நல்ல இளமை; உலகத்தின் கவலை நிறைந்த கொந்தளிப்பை வென்ற முகம். சாந்தி ததும்பும் கண்கள். அந்த மகா தேஜஸ் வியின் மேலிருந்த காவி வஸ்திரம் கூட அவனிடம் ஒரு பிரகாசத்தை அடைந்தது. கையில் இருந்த பாத்திரத்துடன் வாசவதத்தையின் வாசலில் வந்து நின்றான்.

வாசவதத்தைக்கு மனிதனின் ஆத்ம பலத்தில் நம்பிக்கை இல்லாமலில்லை. ஆனல் பிக்ஷுவின் சௌந்தரியம், உடலழகு, அவளை அடித்துக்கொண்டு வெகு தூரம் போய்விட்டது. க்ஷண நேரத்து நிலைகுலைந்த தட்டுக்கிடல்!

"வா! பிக்ஷு, வா!" என்று உபகுப்தனைக் கனிந்து உள்ளே அழைத்தாள், அந்த மகாசௌந்தரியவதி—வேசி!

வாழ்க்கையில் எந்தக் காலத்திலும் புனிதமான மனுஷ்யத்வத்திற்கும், கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கும் ஒரு சோதனை—நிரந்தரமான அக்கினிப் பரீக்ஷை—நடந்துகொண்டே இருக்கிறது. அதையும் மீறி, வெற்றிபெற்று, தலை நிமிர்ந்து நிற்பவன் மகான்! அவனுடைய வாழ்க்கையில் எல்லாம் ஆனந்தம்; எல்லாம் வெற்றி; எல்லாம் சக்தி ஸ்வரூபம்!

அதனால்தான் உள்ளே போன உபகுப்தன் சிரித்துக்கொண்டே கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

"சாப்பாடு கேட்கவந்த பிக்ஷு" தான் 'கட்டிலின்மேல் உட்கார்,' என்றால் உட்கார்ந்து விடுவானு, தனக்கு இஷ்டமில்லாவிட்டால்" என்பது வாசவதத்தையின் மனதிற்குள் எழுந்த குதர்க்கம்.

அவனுடைய செய்கைகள் எல்லாவற்றிலுமே அவளுக்கொரு விகல்பம் தோன்றியது! மோகனமான புன்னகையோடு, "இப்பொழுது என்ன வேண்டுமென்கிருய்?" என்றாள் அவள்.

"சன்னியாசிக்குப் பிச்சையைத் தவிர வேறென்ன வேண்டும்?" என்றான் உபகுப்தன்.

அவன் முகத்திலும் அதே சிரிப்பு.

அந்தச் சிரிப்பிலிருந்த பரிசுத்தமும், தெய்வீகமும் வாசவதத்தையின் உற்சாகத்தைக் குறைத்தன. அவள் வேண்டியது அதுவல்ல... இருந்தாலும், ஒரு நம்பிக்கை! "அவசரமாகப் போக வேண்டுமோ?" என்றாள்.

இந்த பாணத்திற்குப் பிறகும் உபகுப்தனுக்கு, நிர்மலமான பௌத்த பக்தையின் நடத்தையைத் தவிர, அவளிடத்தில், வேறொன்றும் தெரியவில்லை. பகவானின் மேலுள்ள பிரியம்! வெகு தூரம் நடந்துபோகும் இரண்டு யாத்ரீகர்களைப்போல வென்று அவன் அவளுடைய சினேகத்தை ஏற்றுக்கொண்டான்.

"இல்லை. அவசரமொன்றுமில்லை" என்றான் சாதாரணமாக.

"அப்படியானால் கொஞ்சம் இரு" என்று சொல்லிவிட்டு அவள் ஓடிப்போய், ஒரு நிமிஷத்திற்குள் தன்னுடைய வீணையை எடுத்துக்கொண்டு வந்தாள். அவனை ஏறிட்டுப் பார்க்காமலே, சுருதியைக் கூட்டி, "புத்த பகவானின் பாதங்களை வணங்குகிறேன்" என்ற பாட்டை வீணையுடன் சேர்ந்து பாடினாள்.

அது புத்த சன்னியாசிகள் காலையில் செய்யும் பிரார்த்தனை. எனவே அவள் பாட ஆரம்பித்த உடனேயே உபகுப்தன் கண்களை மூடிக்கொண்டு கரையில்லாத ஆனந்தத்தில் ஆழ்ந்துவிட்டான்.

அது கொஞ்சம் பெரிய பாட்டு. வேண்டுமென்றே, காரியார்த்தமாகவேதான், வாசவதத்தை அந்தப் பாட்டைப் பொறுக்கி எடுத்தாள். அந்த பிக்ஷுவை எவ்வளவு நாழி வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு நேரம் அவனை அங்கே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை அவளுக்கு.

எனவே அர்த்தம்மிகுந்த உருக்கமான அந்தப் பாட்டின் சரணங்களை ராகமாலிகையாக அமைத்துப் பாடிக்கொண்டே போனாள். உபகுப்தன் அதில் லயித்துப் போய், மௌனமாய் உட்கார்ந்திருந்தான்.

எப்பொழுது பாட்டு முடிந்த தென்று அவனுக்குத் தெரியாது. ஆனால் அவன் திடுக்கிட்டு எழுந்திருந்தபோது வாசவதத்தை ஒரு ஜாவளியைப் பாடிக்கொண்டிருந்தாள். கீழ்த்தரமான உணர்ச்சிகள் மிகுந்த பாட்டு! மலைக்கும் மடுவுக்கும் — உள்ள வித்தியாசம்!

எங்கிருந்தோ ஒரு நெருப்புக் காற்று வீசியதுபோல் தோன்றிற்று.

அந்த அஹிம்சா மூர்த்தி எழுந்து நின்றான். அப்பொழுதும் அவன் முகத்தில் ஒரு துளிக் கோபம்கூட இல்லை. சாந்தம்! கண்டு பயப்படும் சாந்தம் —சாந்தத்தில் பயம் பிறக்கக் கூடுமானால்! இரண்டு கைகளையும் குவித்து ஒருதரம் நமஸ்காரம் செய்துவிட்டுத் தன் பாத்திரத்திற்காக சுற்றி ஒருதரம் பார்த்தான். அதைக் கண்டெடுத்துக்கொண்டதும் வாசலைப் பார்க்க நடந்தான்.

வாசவதத்தைக்குப் பயம் தெளிய ஒரு நிமிஷம் பிடித்தது. உலுக்கி விழுந்து எழுந்தாள். வீணையை தூரத் தள்ளிவிட்டு "பிக்ஷு, பிக்ஷு! வா போகாதே—வா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வாசல் புறம் ஓடினாள்.

"அம்மா! போய் வருகிறேன்" என்றான் உபகுப்தன்.

"இரு; சாப்பிடாமல், போகவே கூடாது! எனக்கு சக்தி யிருந்தும் பிக்ஷை இடாமல் உன்னை அனுப்பும்படி நேர்ந்தால், எவ்வளவு தூரம் என் மனது கஷ்டப்படும் — இல்லையா? வா!" என்று அவள் கனிந்து பரிவோடு அழைத்தாள்.

இப்பொழுது அவள் குரல் மாறிவிட்டது. அந்தக் குரலில் முன்னிருந்த பைத்தியக்கார அசட்டுத் தொனி இல்லை. மகா தபஸ்விக்குத் தீமை செய்தவளின் சோகம்தான் பிரதிபலித்தது. துக்கம் நெஞ்சை அடைத்தது. அஹிம்ஸையை உயிர் நாடியாக உடைய அந்த சன்னியாசிக்கு அதைப் பொறுக்க முடியவில்லை. உள்ளே போனான்.

மௌனமாக இலையை எடுத்துப் போட்டு வாசவதத்தை பரிமாறினாள். உபகுப்தனும் பேசாமல் சாப்பிட்டுவிட்டு எழுந்து போகப் புறப்பட்டான்; இரண்டாவது தரமாக வாசவதத்தை, அதிக ஜீவு தொனிக்கும் குரலில், "பிக்ஷு இனிமேல் இந்தப் பக்கம் நீ வரவேமாட்டாயோ?" என்றாள், சிறு குழந்தையைப் போல்.

பிக்ஷு சிரித்துக்கொண்டே சொன்னான். "ஏன் வரமாட்டேன். நிச்சயம் வருவேன். ஆனால் வெகு நாள் கழித்து!"

* * *

அவன், அன்று பௌத்த சங்கத்திற்குப் போய்ச் சேரும்போது வெகு நேரமாகிவிட்டது. பிரார்த்தனைகளில் அவர்களோடு அவன், சேர்ந்துகொள்ள முடியவில்லை. அதனால் ஒன்றுமில்லை. உபகுப்தனிடம் எல்லோருக்கும் ஒரு மரியாதை, பயம், எல்லாம் உண்டு.

இரவு படுத்துக் கொள்ளும் போதும், அவர்களோடு அவன் சேரவில்லை. அவன் மனம் ஏதோ ஒரு விதத்தில் தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருந்தது. பிக்ஷை கேட்கப்போன இடத்தில் நடந்த விஷயங்கள் மறுபடியும் அவன் கண் முன்னால் வந்தன. அவனுடைய மனத்திலேயே கொஞ்சம் தடுமாற்றம் தலை எடுத்திருந்தது.

தன்னுடைய மனதையும், உடம்பையும் பரிசுத்தமாக்கிக் கொள்ள வேண்டிய சமயங்களில் உபகுப்தன் ஒரே வழியைத்தான் உபயோகித்தான். அது உபவாசமிருப்பது. நிலை தவறினவனுக்கு அது எவ்வளவோ தூய்மையைக் கொடுக்கும் என்பது அவன் சித்தாந்தம்.

அன்றுமுதல் ஒரு வாரத்திற்கு ஆகாரமில்லாமலிருப்பது என்ற விரதத்தை அந்த நிமிஷத்தில் அவன் ஏற்றுக்கொண்டான்.

எல்லோருக்கும் ஆச்சரியம், 'இந்தக் கோரமான தண்டனையை ஏன் உபகுப்தன் தனக்குத்தானே ஏற்றுக்கொண்டு, இப்படிக் கஷ்டப்பட வேண்டு'மென்று. ஆனால் உபகுப்தனிடம் போய்க் கேட்பதற்கு எல்லோருக்கும் கொஞ்சம் யோசனை.

"தகுந்த காரணமில்லாமல் ஒன்றும் செய்யமாட்டான். அதை நாமும் கேட்பது தப்பு" என்ற எண்ணத்தோடு எல்லோரும் பேசாமல் இருந்துவிட்டனர். உபகுப்தன் தன்னுடைய தனி ஆச்ரமத்தில் படுத்துக் கொண்டிருந்தான்.

"நிச்சயம் வருவேன். ஆனால் வெகு நாள் கழித்து" என்ற வார்த்தைகள் வாசவதத்தையின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன. அவள் அவனுக்குச் செய்துவிட்ட மிகப் பெரிய தீங்கே அவளால் மறக்க முடியவில்லை.

அவன் போய் ஒரு நாள் இரண்டு, மூன்று, நான்கு நாட்கள் கூட ஆகிவிட்டன. ஆனால் அவளுக்கென்னமோ சாந்தி உண்டாகவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. அவனை மறுபடியும் பார்த்து, அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அவள் நெஞ்சம் உறுத்திற்று. ஆனால் அவன் இருப்பிடம் அவளுக்குத் தெரியாது.

யோசித்துப் பார்த்தாள். "வேறு எங்கே அவன் இருக்க முடியும். பிக்ஷுக்கள் எல்லோரும் பௌத்த சங்கத்தில்தான் இருப்பார்கள். அங்கே போய்க் கேட்டால் உபகுப்தன் இருக்குமிடம், தெரிந்து போகிறது" என்று அவளுக்குத் தோன்றியது.

உடனே அவனைத் தேடிக் கொண்டுபோய்சங்கத்தில்விசாரித்

தாள். உபகுப்தன் இருக்குமிடம் உபவாசவிரதம் எல்லாவற்றையும் அவள் தெரிந்து கொண்டாள். அதோடுகூட அவர்களுக்கெல்லாம் தெரியாத ஒரு விஷயமும் அவளுக்குத் தெரியும். அதுதான் அந்த உபவாசத்தின் காரணம்!

அவன் மிக்க பலஹீனமான ஸ்திதியில் படுத்துக் கொண்டிருந்தான். வாசவதத்தை அவனருகில் போய், "பிக்ஷு! என்னை மன்னித்து விடு. அதைப் பெற்றுக் கொள்ளத்தான் உன்னிடம் வந்திருக்கிறேன். நான் மகா பாபத்தைச் செய்தவள்" என்றாள்.

அவனுடைய முகத்தில் சிரிப்பின் அடையாளம் தெரிந்தது. வாய் திறந்து பேசச் சக்தியில்லாமல், கண்களை ஒரு தடவை மூடித் திறந்தான்—'மன்னித்துவிட்டேன்'-என்பதற் கடையாளமாக.

அப்படியானால், நான் ஏதாவது உனக்குச் செய்ய முடியுமா?" என்று கேட்டாள் வாசவதத்தை.

உபகுப்தன் ஹீனமான ஸ்வரத்தில், "அம்மா! உன் வீணையைக் கொண்டுவந்து, அந்தப் பாட்டை மறுபடியும் எனக்காகப் பாடவேண்டும்!" என்றான்.

வாசவதத்தைக்கு மயிர் கூச்செடுத்தது. "நான் அதிருஷ்டசாலி" என்ற வார்த்தைகள் அவள் உதடுகளில் தடுமாறின.



முண்டிப் போ!

'அசுவதி'

குழந்தைகளின் கூட்டம் ஒன்றுக்கு எதையோ விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முந்தி, நீ முந்தி, என்று எல்லாம் அடித்துக் கொண்டிருக்கின்றன. ஒன்றின்மீது இன்னொன்று பாய்ந்து முன்னுக்குப் போக முண்டிக்கொண்டிருக்கின்றன.

இந்தக் கூட்டத்திற்குள் நுழைந்து கிட்டப் போய் கையை நீட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை அழுது கொண்டிருக்கிறது. அதற்கு முண்டிப் போக சக்தியில்லை.

கோவிலில் தீபாராதனைக்கு, கடவுள் தீபாலங்கார தர்சனத்துக்கு 'ஜே ஜே!' என்று கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. நின்ற இடத்திலிருந்து ஒரு அங்குலம் கூட காலை நகர்த்தவில்லை ஒருவரும்.

ஒருசோனி உருவம், முந்தி நிற்கும் கூட்டத்தைத் தள்ளி விலக்கிக் கொண்டு முன்னேறிப் போய், தேவ தரிசனம் செய்வதற்கு அதற்குச் சக்தி இல்லை.

அவர்கள் எல்லோரும் பார்த்து விட்டுப் போகட்டும், அப்புறம் தரிசனம் செய்து கொள்ளலாமென்று ஒதுங்கி நின்றுகொண்டிருந்தது.

ஒதுங்கி நிற்கும் குழந்தைக்கு அழுகைதான் மிச்சம். விநியோகிக்கப்படும் பொருள் ஆகிப் போய் தட்டைக் கவிழ்த்த பிறகு தான் யாராவது அதைப் பார்ப்பார்கள். பிரயோஜனம்?

ஒதுங்கி நின்ற சோனிக்கும் அப்படித்தான். எல்லோரும் தரிசனம் செய்து போய்விட்ட பிறகு, தீபாராதனையின்போது ஒளி ரூபமாக விளங்கின அந்த ஒளிப்பொருளை அவன் அப்போது கற்பனை செய்துகொண்டு தான் பார்க்க வேண்டும். எதற்காக அவனும் மற்றவர்களைப் போல் அங்கே வந்தானோ அந்த தீபாராதனையைப் பார்க்காத குறை குறைதான்.

* * *

விநியோகப் பொருளை அடைய அந்த குழந்தைக்கும், அந்தச் சோனிக்கு தீபாராதனையைப் பார்க்கவும் உள்ள ஆசைக்கு, ஆத்திரத்துக்கு கொஞ்சம்கூட குறை வில்லை. ஆயினும் ஏன் அவர்கள் தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை?

அந்தக் குழந்தைக்கும் அந்தச் சோனிக்கும் வித்தியாசம் இல்லை. இருவருக்கும் முண்டிப் போக சக்தியில்லை.

சக்தி யென்றால் எது சக்தி? தேக பலமா?

தேகபலம் இல்லை. அங்கே கூடியிருந்த குழந்தைகள் எல்லாமோ, அல்லது பெரியவர்கள் எல்லோருமோ தேக பலத்தில், இந்தக் குழந்தை, சோனி இவர்களைப் போலவேதான்.

ஆனால் இவர்கள் அடையாத வெற்றியை அவர்கள் அடைந்த காரணம், அவர்கள் மனதிலே உள்ள சக்திதான். மனதிலே இயற்கையாக உள்ள தெம்பு, 'நாம் என்ன சளைத்தவனா?' என்ற ஒரு திமிர் எண்ணம், முண்டிப் போகும் சக்தியிலே தூண்டப்பட்டுதான் அவர்கள் ஆசை நிறைவேறுகிறது. இந்த சக்தியை வளர்க்க வேண்டும்.

ஆசையின் நிறைவு இவ்வளவு இருந்தும், அதை நிறைவேற்றுவதற்கான மனச் சக்தியின் நிறைவு இல்லாத நிலைமையில், நிறைவேறாத ஆசையை நினைத்து, குழந்தையைப் போல் கண்ணீர் விடுவதும், சோனியைப்போல் பொறுத்துப் போவதும் மனிதனுக்கு அழகு இல்லை.

* * *

ருசியைக் கண்ட குழந்தைகள் பின்வாங்கும் என்று எதிர்பார்க்க முடியாத மாதிரி, கடவுளை தரிசனம் செய்பவன் அலுத்துப் போய், பின்னால் நிற்கும் சோனிக்கு தயவு காட்டி இடம் விடுவான் என்று எதிர்பார்க்க முடியாது. தணியாத ஆசைதான் அவனுக்கு.

ஆகையால் அவனவன் முண்ட வேண்டும்; அந்த மாதிரி முண்டுவதனால் பிறருக்கு ஏதாவது அசௌகரியம் ஏற்படுத்தி விடுவோமோ, அல்லது வருத்தம் ஏற்பட்டு விடுமோ என்ற நினைவைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்து விட வேண்டும்.

அதில்லாவிட்டால் நாம் இந்த யோசனையில் இருக்கும் போதே பிறர் நம்மீது காயம் உண்டாக்கி விட்டு முன்னுக்குப் போய் விடுவார்கள். அவர்களை விழித்துப் பார்த்துப் பிரயோஜனம் இல்லை. ஏக்கம்தான் மிஞ்சும் நமக்கு.

வாழ்க்கை எப்போதும் தேங்கிக் கிடக்கும் ஜடப் பொருள் அல்ல. தினம் தினம் வளர்ச்சியைக் கண்டு கொண்டிருக்கும் ஜீவப் பொருள். முன்னேற்றம் தான் அதன் நாடி,மூச்சு. முண்டிப் போகும் சக்திக்குத் தக்கபடி நாடி அழுத்தமாக, திடமாகப் பேசுகிறது; சுவாசம் தடுமாற்றம் இல்லாமல் கம்பீரமாக வருகிறது.

* * *

இதிலே இன்னொரு விபரீதம் ஏற்பட்டு விடுகிறது, அநேக சந்தர்ப்பங்களில், நமக்கு முன்னே போய் நின்றுகொண்டிருப்பவர்கள் எல்லாம் தைரியசாலிகள், இந்தச் சக்தி வாய்ந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. சமயமும் சந்தர்ப்பமும், வலிமை, சக்தி இல்லாதவர்களை எல்லாம் முன்னணியில் கொண்டு பெரும்பாலும் நிறுத்தி விடுகிறது.

இந்த பலஹீனர்கள், வழியை அடைத்துக்கொண்டு விடுகிறார்கள். மேலே மேலே போக அவர்களுக்கும் தெரியவில்லை. தைரியமும் இல்லை. பிறர் முன்னுக்குப் போகவும் விடுவதில்லை. இந்த ரீதி

பலஹீனர்கள் தங்கள் சக்தியின் அளவை மதிப்பிட்டுக்கொண்டு சக்தி வாய்ந்தவர்களுக்கு வழி விடுவது இயற்கை யாகும். அது தான் முன்னேற்றத்தின் போக்காகும்.

காலத்தின் போக்கறிந்து போகத் தெரியாமல், வளர்ச்சியைத் தடுத்து நிற்கும் மதிலாக அவர்கள் நிற்க உறுதிகாட்டினால், அதற்கு மேலான உறுதியுடன் அவர்களைப் பிளந்து எறிந்து கொண்டு போவதுதான் முன்னேற்றம்.

* * *

பிளந்து எறிந்துகெண்டு போவது என்றால் எறியும் அகல் விளக்குகளில் போய் முட்டிக் கொண்டு விழ வேண்டுமென்பதில்லை. கீழே கிடக்கும் படிக்கட்டுகளை ஆராயாமல் போய் தடுக்கி விழ வேண்டுமென்பதில்லை. அது முண்டிப்போவதல்ல, முறண்டிப் போவது.

முண்டிப் போவதிலே ஒரு தர்க்க நியாயம் வேண்டும். செய்யும் காரியத்திற்கான சாதனத்தைத் தெளிவான வகையிலே வகுத்துக் கொண்டிருக்க வேண்டும. லக்ஷிய நோக்கு இல்லாமல், குறிப்பு இல்லாமல் முறண்டிப் போவது பிரயோஜனம் இல்லை. அந்த வெறியிலே போய் நின்ற முன்னணியை வெகு நேரம் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியாது.

* * *

நிதானத்தின் பேரில், அடிக்கு அடி உறுதி பார்த்து நிலையில் போய் நிற்பதுதான் முண்டிப் போவதற்கு அழகு. வீம்புக்கு முறண்டிப்போவது சாசுவதப் பலன் அளிக்காது. அது ஆலோசனை இல்லாத நிலையில் பிறந்தது, முறண்டிப்போவதிலே உணர்ச்சிக்குப் பிரதான ஸ்தானம். முண்டிப் போவதிலே உணர்ச்சியோடு கலந்த தர்க்க நியாயத்துக்குத் தான் இடம்.

உணர்ச்சி வசமானவர்களுக்குத் தர்க்க நீதியில் போகிறவர்கள் பதமிடும் வழி நிதானமாகத்தான் தோன்றும். தங்கள் ஆசைக்கு எற்ற திருப்தியைக் கொடுக்காது.

உணர்ச்சி நிரந்தரமாக ஒரே நிலையில் நிற்பதில்லை. க்ஷணத்துக்கு க்ஷணம், சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி மாறிக்கொண்டிருக்கிறது. தர்க்க நீதிக்கு அப்படியில்லை.

முறண்டிப் போக வேண்டும் என்ற ஆத்திரத்திலும் சந்தர்ப்ப நியாயங்களைக் குறிப்புப்படுத்திக் கொண்டுவிட்ட ஒரே நிலைதான் அதற்கு. இதை அடிப்படையாகக் கொண்டதுதான் வாழ்க்கை.

நட்சத்திர பலா பலன்கள்

(1) அசுவனி-மகம்-மூலம்.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும். நூதனகாரியங்கள் ஆரம்பிக்கின் பின் மிக்க வெற்றி தரும். பெரியோரின் பேட்டி காணின் நலந் தரும். இந்நாள் மிக உன்னதமான தென்றறியவும்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

காரியத்தடை, கொடுக்கல் வாங்கலில் கவலே, மேலோர் அல்லது நேசர் வருத்தம், தொழிலில் பிசகெய்தல், நீதி மறைதல், வீண் விரயம், அலேச்சல், ஆயாசம், அதிகாரிகளால் அவஸ்தை, இடர் காயம், ஆதலின் எதிலும் ஜாக்கிரதையாய் இருப்பதோடு நற்பலன் தாத்தக்க காரியமெதுவும் செய்யாதிருப்பதும் நலமாம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

எடுத்த காரியம் ஜெயம். நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடக்கும், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர் கைப்பொருள் தன் கைப்பற்றுதல், அடுத்தவரால் இன்ப மடைதல், பந்துமித்திரர் வரவு, இந்நாள் மிக்க நலமாய் நடக்கும்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

அமைத்து லாபம் பெறுவதற்கான எதுவைச் செய்யின் தக்க பலன் தரும். தொழிலில் மனோ உல்லாசம், கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தம் செய்யின் நலந்தரும், தன் உதவியைப் பெற ஒருவரைக் காணின் ஜெயமுண்டாகும், இந்நாளில் நற்காரியம் எது செய்யினும் வெற்றி தரும்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

கிலேசம், வீண் சிந்தனே, எதிர்பார்த்த அளவு எப்பலனும் கிட்டாது. மேல் அதிகாரிகளால் சிறிது கவலே, பொருள் முடக்கம், மறதி, குடும்பத்தில் சிலுகு, இப்பலன்கள் முற்றும் பாதிக்காது என்றறியவும், பொதுவில் சாதாரணப் பலன் தரும் நாளாம்.

24-8-39 இரவு 4-15 முதல்
25-8-39 காலே 6-42 வரை.

மனமகிழ்ச்சி, இஷ்ட காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தாத்தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர்

கையிற் சிக்கிய பொருளைப் பின்னும் அடைய முயற்சிக்கின் வெற்றி தரும், சரீர சுகம், தொழில் நலம், இந்நாள் மிக உத்தமமாம்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

மனக்கவலை, அலைச்சல், அகால போஜனம், அல்லது வீண் வம்பு, சிப் பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதனமாய் எக்காரிய மெடுக் கினும் விக்கினமுண்டாகும், நூதன தொழில் புரியினும் ஒவ்காது, காரியானு கூலத்திற்காக நேசரையோ அதிகாரிகளையோ சந்திக்கின் பலனுராது, ஆத லால் இந்நாள் ஆராய்ந்து நடக்கின் நலம்.

(2) பரணி-பூரம்-பூராடம்

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும். மறதியால் பிசகு நேருதல், முன் கோபத்தால் பின் வருந்தல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம், அல்லது பொருள் முடக்க முண்டாகும்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்கள் அடைய் எத்தனிக்கின் பலன் தரும், நூதன காரியங்கள் ஆரம்பிக்கின் பின் மிக்க வெற்றி தரும், பெரியோர் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன் னதமானதென் றறியவும்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

காரியத்தடை, கொடுக்கல் வாங்கலில் கவலை, மேலோர் அல்லது நேசர் வருத்தம், தொழிலில் பிசசெய்தல், நீதி மறைதல், வீண் விரயம், அலைச் சல், ஆயாசம், அதிகாரிகளால் அவஸ்தை, இடர்காயம், ஆதலில் முன் ஜாக்கிரதையுடன் இந்நாளைக் கழித்தல் நலம்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடத்தல், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர் கைப்பொருள் தன் கைப்பற்றுதல், அடுத்தவரால் இன்பமடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர் வரவு, இந் நாள் மிக்க நலமாய் நடக்கும்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

அனுமத்து லாபம் பெறுதற்கான எதுவைச் செய்யின் தக்க பலன் தரும், தொழிலில் மனோ உல்லாசம், கொடுக்கல் வாங்கலில் சீர்திருத்தம் செய்யின் நலந்தரும், பொருள் உதவி பெற ஒருவரைக் காணின் பலிதமுண் டாகும், நற்காரியங்கள் எதைச் செய்யினும் வெற்றி தரும்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

கிலேசம், வீண் சிந்தனை, எதிர்பார்த்த அளவில் எப்பலனும் கிட்டாது, மேல் அதிகாரிகளால் கொஞ்சம் கவலை, பொருள் முடக்கம், மறதி, குடும்பத்தில் சிறுகு, இப்பலனைவெனதவும், முற்றும் பாதிக்காதென்றறியவும், இத்தினம் பொதுவாய்ச் சாதாரண பலன் தருமாம்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை

மனோ உல்லாசம், இஷ்ட காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தரத்தக்காதது செய்யினும் ஜெயம், பிறர் கையிற் சிக்கிய பொருளைப் பின்னும் அடைய முயலின் வெற்றி தரும். சரீர சுகம், தொழிலில் நலம், இந்நாள் மிக உத்தமம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

சம சௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வாணிபர்களாயின் வியாபாரத்தால் தக்க லாபம், நூதனமாய் வியாபாரந் தொடங்கினும் பின் பலன் தரும், நற்சேதி யறிதல், நல்லோரிணக்கம், நற்பலன் தரும் நாள், உத்தமம்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும், மறதியாலும், கைப்பிசகாலும் முன் கோபத்தாலும் பின் வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம் அல்லது பொருள் முடக்கம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்களடையி எத்தனிக்கின் பலன் தரும், நூதன காரியங்கள் ஆரம்பிக்கின் பின் மிக்க வெற்றி தரும், பெரியோரின் பேட்டி காணின் நலந்தரும், இன்னாள் மிக உன்னதமான தென்றறியவும்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

காரியத் தடை, கொடுக்கல் வாங்கலில் கவலை, மேலோர் அல்லது நேசர் வருத்தம், தொழிலில் பிசகெய்தல், நீதி மறைதல், வீண் விரயம், அலைச்சல், ஆயாசம், அதிகாரிகளால் அவஸ்தை, இடர்காய முறுதல், ஆதலின் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருப்பதோடு, நற்பலன் தரும் காரியங்களும் செய்யாதிருப்பதும் நலம்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் உற்சாகம், சேதியால் மன மகிழ்ச்சி, பிறர் கைப் பொருள் தன் கைப்பற்றுதல்,

அடுத்தவரால் இன்ப மடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர்வருகை, இந் நாள் மிக்க நலமாய் நடக்கும்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

அனுமத்து லாபம் பெருதற்கான எதுவைச் செய்யின் தக்க பலன் தரும், தொழில் மஞோ உல்லாசம், கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தம் செய்யின் நலந்தரும், தன உதவியைப் பெற ஒருவரைக் குறித்துச் செல்லின் பலிதமுறும், இன்னாளில் நற்காரியங்கள் எதைச் செய்யினும் வெற்றிதரும்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

கிலேசம், வீண் சிந்தனை, எதிர்பார்த்த அளவில் எப்பலனும் கிட்டாது. மேல் அதிகாரிகளால் சிறிது கவலை. பொருள் முடக்கம், மறதி, குடும்பத்தில் பிணக்கு, இப்பலன்களொதுவும் முற்றும் பாதிக்காதென அறியவும், பொதுவில் இத்தினம் சமப்பலன் தரும்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

மனக்கவலை, அலைச்சல், அகால போஜனம் அல்லது வீண் பகை, சிப்பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதன எக்காரியம் எடுக்கினும் விக்கின முண்டாகும், நூதன தொழில் புரியின் ஒவ்வாது. காரியானுகூலத்திற்காக நேசரையோ அதிகாரிகளையோ பேட்டி காணின் பலனுராது. ஆக இந்நாளை அறிந்து நடந்துகொள்வது நலம்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

சம சௌக்கியம், விக்கின மில்லாது தொழில் நடக்கும், வாணிபர்களாயின் வியாபாரத்தால் தக்க லாபம், நூதனமாய் வியாபாரம் தொடரினும் பின் பலிதந்தரும், நற்சேதியறிதல், நல்லோரிணக்கம் முதலிய நற்பலனளிக்கும் நாள், உத்தமம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும், மறதியால் பிசகு நேருதல், முன் கோபத்தால் பின் வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம் அல்லது பொருள் முடக்க முண்டாகும்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும். நூதன காரியங்கள் தொடரின் பின் மிக்க

வெற்றி தரும். பெரியோர் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமான தென்றறியவும்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

காரியத் தடை, கொடுக்கல் வாங்கலில் கவலே, மேலோர் அல்லது நேசர் வருத்தம், தொழிலில் பிசகெய்தல், நீதி மறைதல், வீண் விரயம், அலேச்சல் ஆயாசம், அதிகாரிகளால் அவஸ்தை, இடர்காயம், ஆதலால் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலம்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலே 6-42 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடத்தல், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர் கைப்பொருள் தன்கைப்பற்றுதல் அடுத்தவரால் இன்பமடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர் வரவு, இந்நாள் மிக்க நலமாய் நடக்கும்.

26-8-39 காலே 6-42 முதல்
27-8-39 காலே 9-26 வரை

அனுமத்து லாபம் பெறுவதற்கான எதுவைச் செய்யின் தக்க பலன் தரும், தொழிலில் மனோ உல்லாசம், கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தஞ் செய்யின் நலந்தரும், தன் உதவியைப் பெற ஒருவரைக் குறித்துச் செல்லின் பலிதமுறும். இந்நாளில் நற்காரியங்கள் எது செய்யினும் வெற்றி தரும்.

(5) மிருகசீரம்-சித்திரை-அவிட்டம்.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

மனமகிழ்ச்சி, இஷ்டகாரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தரத்தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர் கைச் சிக்கிய பொருளே அடைய முயலின் வெற்றி தரும், சரீர சுகம், தொழிலில் நலம், இந்நாள் மிக உத்தமமாம்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

மனக்கவலே, அலேச்சல், அகால போஜனம் அல்லது வீண்வம்பு, சிப்பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதன எக்காரியம் எடுக்கினும் விக்கின முண்டாகும், நூதன தொழில் புரியின் ஒவ்வாது, காரியானு கூலத்திற்காக நேசரையோ அதிகாரிகளேயோ சந்திக்கின் பலனுராது, ஆக இந்நாளே அறிந்து நடக்கின் நலம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 மாலே 12-40 வரை.

சம சௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வாணிபர்களாயின் வியாபாரத்தில் தக்க லாபம், நூதனமாய் வியாபாரம் தொடங்கினும்

பின் பலன் தரும். நற்சேதியறிதல், நல்லோரிணக்கம் முதலிய நற்பலன் தரும் நாள் உத்தமம்.

22-8-39 மாலை 12-40 முதல்
23-8-39 பகல் 2-12 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும், மறதியாலும் கைப்பிசகாலும் முன் கோபத்தாலும் பின் வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம் வீண் விரயம் அல்லது பொருள் முடக்கம்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், நூதன காரியங்கள் ஆரம்பிக்கின் பின் மிக்க வெற்றி தரும், பெரியோரின் பேட்டிகாணின் நலந்தரும். இன்னாள் மிக உன்னதமான தென்றறியவும்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

காரியத்தடை, கொடுக்கல் வாங்கலில் கவலை, மேலோர் அல்லது நேசர் மன வருத்தம், தொழிலில் பிசகெய்தல், நீதி மறைதல், வீண் விரயம், அலைச்சல், ஆயாசம், அதிகாரிகளால் அவஸ்தை, இடர்காயம், ஆதலின் எதிலும் முன் ஜாக்கிரதையோடிருத்தல் நலம்.

26-8-39 இரவு 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடத்தல், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர்கைப்பொருள் தன்கைப் பற்றுதல், அடுத்தவரால் இன்பமடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர் வரத்து, இந்நாள் மிக்க நலமாய் நடக்கும்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

கிலேசம், வீண்சிந்தனை, எதிர்பார்த்த அளவில் எப்பலனும் கிட்டாது. மேல் அதிகாரிகளால் சிறிது கவலை, பொருள்முடக்கம், மறதி, குடும்பத்தில் சிணுகு, இப்பலன்கள் எல்லாம் முற்றும் பாதிக்காது, பொதுவில் சமப்பலன் தரும்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

மன மகிழ்ச்சி, இஷ்டகாரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தாத்தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர்கையிற் சிக்கிய பொருளைப் பின்னுமடைய முயலின் வெற்றி தரும், சரீரசுகம், தொழிலில் நலம், இந்நாள் மிக உத்தமமாம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

மனக்கவலை, அலைச்சல், அகால போஜனம் அல்லது வீண்வம்பு, சிப்பந்திகளால் சங்கடம், மனம் நிடுக்கிடல், நூதன எக்காரியமெடுக்கினும் விக்கின முண்டாகும், நூதன தொழில் புரியின் ஓங்காது, காரியானுகூலத்திற்காக நேசரையோ அதிகாரிகளையோ சந்திக்கின் பலனுராது, ஆக இந்நாளை அறிந்து நடக்கின் நலம்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

சம சௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வாணிபர்களாயின் வியாபாரத்தில் தக்க லாபம், நூதனமாய் வியாபாரந் தொடங்கின் பின் பலன் தரும், நற்சேதி யறிதல், நல்லோரிணக்கம் முதலிய நற்பலன்களுண்டாம்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும், மறதியாலும், கைப்பிசகாலும் முன் கோபத்தாலும் பின் வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம், அல்லது பொருள் முடக்க முண்டாகும்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 இரவு 6-42 வரை.

சுகம், சௌக்கியம், சர்வகாரியம் ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், நூதன காரியங்கள் தொடரின் பின் மிக்க வெற்றி தரும், பெரியோரின் பேட்டிகாணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமானது.

26-8-39 பகல் 6-42 முதல்
27-8-39 பகல் 9-26 வரை.

காரியத் தடை, கொடுக்கல் வாங்கலில் கவலை, மேலோர் அல்லது நேசர் மனவருத்தம், தொழிலில் பிசகெய்தல், நீதிமறைதல், வீண் விரயம், அலைச்சல், அதிகாரிகளால் அவஸ்தை, இடர்காயம், ஆதலின் இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையுடன் நடத்தல் நலம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

அனுமத்து லாபம் பெறுதற்கான எதைச் செய்யின் தக்க பலன் தரும், தொழிலில் மனோ உல்லாசம், கொடுக்கல் வாங்கலில் சீர்திருத்தஞ் செய்யின் நலந்தரும், தன உதவியைப்பெற ஒருவரைக் குறித்துச் செல்லின் பலிதமுறும், இந்நாளில் நற்காரியங்கள் எதைச் செய்யினும் வெற்றிதரும்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

கிலேசம், வீண் சிந்தனை, எதிர்பார்த்த அளவில் எப்பலனும் கிட்டாது, மேல் அதிகாரிகளால் சிறிது கவலை, பொருள் முடக்கம், மறதி,

குடும்பத்தில் சிலுகு, இப்பலன்களெல்லாம் முற்றிலும் பாதிக்காது, பொதுவாய் சமப்பலன் தரும் நாளாம்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

மனமகிழ்ச்சி, இஷ்ட காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தரத்தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பின்னும் அடைய எத்தனிக்கின் பலிதமுறும், சரீரசுகம், தொழிலில் நலம், உத்தம நாள்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

மனக்கவலை, அலேச்சல், அகால போஜனம், அல்லது வீண் வம்பு, சிப்பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதன எக்காரிய மெடுக்கினும் விக்கினமுண்டாகும், நூதன தொழில்புரியின் ஒவ்வாது, காரியானுகூலத்திற்காக நேசரையோ அதிகாரிகளையோ பேட்டி காணின் பலனுராது, ஆக இந்நாளையறிந்து நடக்கின் நலம்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை

சமசௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வாணிபர்களாயின் வியாபாரத்தால் தக்க லாபம், நூதனமாய் வியாபாரம் தொடரின் பின் பலன் தரும், நற்சேதியறிதல், நல்லோரிணக்கம் முதலிய நற்பலன் தரும் நாளாம்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

தொழில் சமமாய் நடக்கும், மறதியாலும், கைப்பிசகாலும், முன் கோபத்தாலும் பின் வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம் அல்லது பொருள் முடக்கம்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

சுகம் சௌக்கியம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், நூதன காரியங்கள் செய்யின் பின் மிக்க வெற்றி தரும், பெரியோரின் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமானதாம்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடத்தல், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர் கைப்பொருள் தன் கைப்பற்றுதல், அடுத்தவரால் இன்ப மடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர் வரத்து, இந்நாள் மிக நலமாய் நடக்கும்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை

அனுமத்த லாபம் பெற எத்தனிக்கின் தக்க லாபம் தரும். தொழிலில் உற்சாகம், கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தம் செய்யின் நலந்தரும், தன் உதவியைப் பெற ஒருவரைக் காணச் செல்லின் பலிதமுறும், இந்நாளில் நற்காரியங்கள் எதைச் செய்யினும் வெற்றி தரும்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை

கிலேசம், வீண் சிந்தனை, எதிர்பார்த்த அளவில் ஏற்பலனும் கிட்டாது. மேல் அதிகாரிகளால் சிறிது கவலை, பொருள் முடக்கம், மறதி, குடும்பத்தில் சிறுகு, இப்பலன்களேதவும் முற்றிலும் பாதிக்காது, பொதுவில் இத்தினம் சமபலன் தரும்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

மன மகிழ்ச்சி, இஷ்ட காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நேசர்கள் பேட்டி, பலன் தரத்தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர் கையிற் சிக்கிய பொருளைப் பின்னும் அடைய முயலின் வெற்றி தரும், சரீர சுகம் தொழிலில் நலம்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

மனக்கவலை, அலைச்சல், அகால போஜனம் அல்லது வீண்வம்பு, சிப்பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதன எக்காரியம் எடுக்கினும் விக்கின முண்டாகும், நூதன தொழில்புரியின் ஒவ்வாது, காரியானுகூலத்திற்காக நேசரையோ அல்லது அதிகாரிகளையோ சந்திக்கின் பலனுராது, ஆக இந்நாளை அறிந்து நடப்பது நலம்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

சம சௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வணிகர்களாயின் வியாபாரத்தால் தக்க லாபம், நூதனமாய் . வியாபாரம் ஆரம்பம் செய்யினும் பின் தக்க பலன் தரும், நற்சேதியறிதல், நல்லோரிணக்கம் முதலிய நற்பலன் தரும் நாள், உத்தமம்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

தொழில்கள் சமமாய் நடக்கும், மறதியாலும், கைப்பிசகாலும் முன் கோபத்தாலும் பின்வருந்துதல், இஷ்டர்களால் கலக்கம், வீண் விரயம் அல்லது பொருள் முடக்கம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

19-8-39 இரவு 12-6 முதல்
20-8-39 இரவு 11-34 வரை.

காரியத்தடை, கொடுக்கல் வாங்கலில் கவலை, மேலோர் அல்லது நேசர் வருத்தம், தொழிலில் பிசகெய்தல், கீர்த்தி மறைதல், அலைச்சல் ஆயாசம்

அதிகாரிகளால் அவஸ்தை இடர்காயம், ஆதலின் எதிலும் ஜாக்கிரதையாய் இருப்பது நலம்.

20-8-39 இரவு 11-34 முதல்
21-8-39 இரவு 11-46 வரை.

எடுத்த காரியம் ஜெயம், நல்லோரிணக்கம், தொழில் செம்மையாய் நடத்தல், சேதியால் மனமகிழ்ச்சி, பிறர் கைப்பொருள் தன் கைப்பற்றுதல், அடுத்தவரால் இன்பமடைதல், குடும்ப சந்தோஷம், இஷ்டர் வரத்து, இந்நாள் மிக நலமாய் நடக்கும்.

21-8-39 இரவு 11-46 முதல்
22-8-39 இரவு 12-40 வரை.

அனுமத்து லாபம் பெறுவதற்கான எதைச் செய்யினும் தக்க பலன் தரும், தொழிலில் மனோ உல்லாசம், கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தஞ் செய்யின் நலந்தரும், தன உதவியைப் பெற ஒருவரைப் பேட்டிகாணின் பலிதமுறும்.

22-8-39 இரவு 12-40 முதல்
23-8-39 இரவு 2-12 வரை.

கிலேசம், வீண்சிந்தனை, எதிர்பார்த்த அளவில் எப்பலனும் கிட்டாது, மேல் அதிகாரிகளால் சிறிது கவலை, பொருள் முடக்கம், மறதி, குடும்பத்திற் சிறுகு, இப்பலன்களெதுவும் முற்றும் பாதிக்காதென்றறியவும்.

23-8-39 இரவு 2-12 முதல்
24-8-39 இரவு 4-15 வரை.

மனோமகிழ்ச்சி, இஷ்டகாரிய சித்தி குடும்ப சந்தோஷம், நேசர்கள் பேட்டி. பலன் தரத் தக்க தொழில் எதைச் செய்யினும் ஜெயம், பிறர் கையிற் சிக்கிய பொருளைப் பின்னும் அடைய முயலின் வெற்றி தரும், சரீர சுகம், தொழிலில் நலம்.

24-8-39 இரவு 4-15 முதல்
26-8-39 காலை 6-42 வரை.

மனக் கவலை, அலைச்சல், அகால போஜனம், அல்லது வீண்வம்பு, சிப்பந்திகளால் சங்கடம், மனம் திடுக்கிடல், நூதனமாய் எக்காரிய மெடுக்கினும் விக்கின முண்டாகும், காரியானுகூலத்திற்காக நேசரையோ அல்லது அதிகாரிகளையோ காணின் பலனுராது. ஆக இந்நாளை அறிந்து நடக்கின் நலம்.

26-8-39 காலை 6-42 முதல்
27-8-39 காலை 9-26 வரை.

சம சௌக்கியம், விக்கினமில்லாது தொழில் நடக்கும், வணிபர்களாயின் வியாபாரத்தால் தக்க லாபந்தரும், நூதனமாய் வியாபாரம் தொடங்கின் பின் பலதந்தரும்; நற்சேதி அறிதல், நல்லோரிணக்கம், முதலிய நற்பலன் தரும் நாளாம்.

உணவில் உயர்வு—ஒரு வாதம்

(கரிச்சான்)

பெர்னார்ட்ஷா என்பவர் ஒரு பெரிய ஆங்கில நாடகாசிரியர் என்று பலர் அறிந்திருக்கலாம். அவர் அதைக்காட்டிலும் முக்கியமாக பெரிய வேதாந்தி என்பதை சிலர்தான் அறிந்திருப்பார்கள். அவர் "சாகபக்ஷணி" என்றும் கூட சிலர் அறிந்திருக்கலாம். ஆனால் ஒன்றுமட்டும் தெரிந்திருக்காது. மாமிசத்தை உண்ணக்கூடாதென்றும் சாகங்களைத்தான் மனிதன் உட்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துவது அவருடைய வேதாந்தத்தில் ஒரு அம்சம் என்றுமட்டும் யாரும் ஊகித்திருக்கமாட்டார்கள். அது அவருடைய வெறும் வெறுப்பு விருப்பால் ஏற்பட்ட வேடிக்கை அல்ல.

பெர்னார்ட்ஷா மாமிசத்தையே மண்டும் ஒரு நாட்டின் நடுவில் மாமிச பக்ஷணத்தைக் கண்டிக்கிறார்; சாராயத்தை சாப்பாட்டுச் சரக்காகக் கொள்பவர்களிடையே இருந்து கொண்டு அதைக் குடிக்கக் கூடாதென்கிறார். அவர் மாமிசம் சாப்பிடுவதில்லை, சாராயம் அருந்துவதில்லை என்று சொல்லவேண்டியதில்லை. சிலரைப்போல பிறருக்கு மட்டும் உபதேசம் செய்யும் பேர்வழியும் அல்ல அவர்.

பெர்னார்ட்ஷாவிற்கு ஒரு அபக்கியாதி உண்டு பாவம். அவர் எதைச் சொன்னாலும் ஜனங்கள் அதை உண்மையாக எடுத்துக் கொள்வதில்லை. அவருக்கு மகா கெட்டிக்காரர் என்று பேர்; ஆனால் வெறும் கோமாளி யென்றும் பேர்வாங்கி விட்டார்.

"மாமிசம் தின்பதை நிறுத்தவேண்டும் என்று நான் சொல்வது கேலியல்ல. உண்மையாகச் சொல்லுகிறேன். அது அவசியமாக ஆகவேண்டிய காரியம். மாமிசத்தை நிறுத்திவிட்டு சாகபக்ஷணம் செய்தால்தான் மனிதன் உயரமுடியும். மனிதன் உயர்ந்து மனிதனுக்கு மேலான ஒரு பிரகிருதியாக மாறுவதுதான் மனிதத் தன்மையின் லக்ஷியமே. இல்லாவிட்டால் மனிதன் இருக்கவே வேண்டியதில்லை; அழிந்து போய்விடலாம். அவனுக்கு வேறு ஜோலி கிடையாது. அதிமானுஷ ஜாதியைப்பிறப்பிப்பதற்காகத்தான் மனித ஜாதியே இருப்பது. வாழ்க்கைக்கு வேறு அர்த்தமே கிடையாது" என்று ஷா பாவம் உருக்கமாகத் தன்னால் இயன்ற வேகத்துடன் சொல்லுகிறார்.

"நாங்கள் மாமிசத்தில் திளைக்கிறோமே என்று தானே நீர் இப்படியெல்லாம் கேலி செய்கிறீர்? செய்யும். உமது வசவைப் பார்த்தால் எங்களுக்குச் சிரிப்பாக வருகிறது. உமது எழுத்து ரொம்ப

விறுவிறுப்பாக இருக்கிறது. எங்களை வைதாலும் பாதகமில்லை. நன்ருக எழுதுகிறீர். இதேமாதிரி இன்னும் எழுதும். நாங்கள் படித்துக் களிக்கிறேம்'' என்றுதான் அவருடைய வாசகர்கள் சொல்லுகிருர்கள்.

எப்படி இருக்கும் அவருக்கு?

“முட்டாள்களா! நான் கேலியே செய்யவில்லையே! உள்ளதை உள்ளபடியேதானே சொல்லுகிறேன். சொல்லுகிறதைக் கொஞ்சம் காரமாகச் சொன்னுல்தான் உங்களுக்கு உரைக்கும் என்று சுடச் சுடச் சொன்னுல் அதையும் வாங்கிக்கொண்டு நீங்கள் இப்படி என்னை அவமதிக்கிறீர்களே!” என்று ஷா புலம்புகிருர்.

“மாமிச பக்ஷணத்திற்கும், மனித முன்னேற்றத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நீர் சொன்னுல் அதுகேலி இல்லாமல் வேறென்ன? புரளியா செய்கிறீர்? ஒரு வேளை சாகபக்ஷணத்திற்கும் கிறுக்குத்தனத்திற்கும் வேண்டுமானுல் சம்பந்தம் இருக்கலாம். அப்படிச் சொல்லாமல் நீர் கையாண்டிக்காரர் என்றுதானே சொல்லுகிறேம்'' என்கிருர்கள் வாசகர்கள்.

“உணவுக்கும் வளர்ச்சிக்கும் சம்பந்தமில்லை என்று முதல் முதலாக சரித்திரத்தில் நீங்கள்தான் சொல்ல நான் கேட்கிறேன். நீங்கள் மாமிச பக்ஷணத்தை உடனே நிறுத்தவேண்டு மென்பதற்கு இது ஒரு காரணம் போதாதா? என்ன அநியாயம்! ஐம்பது வருஷங்களாகக் கரடியாகக் கத்துகிறேனே உச்சிமேட்டிலிருந்து! அதற்கெல்லாம் பலன் இதுதான? நீங்கள் என் நாடகங்களை ரசிக்கவில்லை என்று யார் அழுகிருர்கள்? அவற்றிற்கு முகவுரைகள் எழுதியிருக்கிறேனே, அவற்றை நீங்கள் பக்கம் திருப்பியாவது பார்த்ததுண்டா? என் நாடகங்களைக் காட்டிலும் என் முகவுரைகள்தான் முக்கியம் என்று எவ்வளவு தரம் சொன்னுலும் உங்களுக்கேன் ஏறமாட்டேனென்கிறது?” என்று மன்றுடுகிருர் அவர்.

“உமது முகவுரைகள் எல்லாம் ரொம்ப தமாஷாக இருக்கின்றன. வெடுக் வெடுக் கென்று எப்படித்தான் எழுத வருகிறது உமக்கு—”

“அதை யார் கேட்டார்கள்? நான் எழுதுகிறது உங்களுக்குப் புரிய வில்லையா!”

“என்ன புரியவில்லை? பேஷாக இருக்கிறது. தலைகீழாக நிற்கிறீர். மனித சமூகத்தை முதுகில் சாட்டையடி அடிக்கிறீர். ஹோ வென்று சிரிக்கிறேம்'' என்கிருர்கள் வாசகர்கள்.

“அழுங்களேன். வெட்கம் இல்லையா உங்களுக்கு? நாகரிகம் என்ற சேற்றில் பன்றிகள் போல உழலுகிறீர்களே பரம திருப்தியுடன்? உங்கள் அரசியலில் அயோக்கியத்தனம்தான் இருக்கிறது. பொருளாதாரத்தில் பிரட்டும் பிறர் பொருள் ஆசையும்தான் இருக்

கிறது. சாஸ்திர ஆராய்ச்சிகளில் மனிதத் தன்மை இல்லை. உங்கள் கல்வியில் கடவுள் இல்லை. உங்கள் கொடிய ஏற்பாட்டில் ஏழை ஏழையாகிக் கொண்டே போகிறான்; பணக்காரன் பணக்காரனாகிக் கொண்டே இருக்கிறான். உங்கள் நாகரிகமும் அதனுடைய பிதாவாகிய உங்கள் கல்விமுறையும் செல்லாக்காசு பெறாது. மனிதனை உயர்த்த அவை முயற்சிசெய்யவில்லை" என்று ஷா படபடவென்று பேசுகிறார்.

"அதற்காக மாமிசத்தை விட்டுவிட்டால் சரியாகப் போய் விடுமோ, ரொம்ப அழகு, உமது தர்க்கம்!" என்று வாசகர்கள் சிரிக்கிறார்கள்.

"நீங்கள் தின்கிற மிருகத்தின் மூளை உங்களுக்கு வந்து விடக் கூடாது என்றுதான் பதறுகிறேன். காய்கறிகளில் மூளை அம்சம் இல்லாமலாவது இருக்கிறது. அதுமேல்."

"உமது கொள்கைதான் என்ன, கொஞ்சம் சொல்லுமேன் பார்க்கலாம்."

"பல்லாயிரம் தடவை படித்துப் படித்துச் சொல்லி எழுதியிருக்கிறேன். திரும்பவும் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், கேளுங்கள். பரிணாமவாதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? டார்வின் என்றவர் ஆரம்பித்தது?—"

"மனிதன் குரங்கின் சந்ததி என்றது தானே?"

"ஆமாம். அதுதான். குரங்கிலிருந்து ஆதி மனிதன் தோன்றினான். குகை மனிதன். அவனிடமிருந்து நாம் வந்தோம். நம்மிடமிருந்து அதிமானுஷர்கள் தோன்றப் போகிறார்கள்—"

"அதற்கென்ன?"

"நீங்கள் தானே உற்பத்தி செய்யப் போகிறீர்கள் — நீங்கள் தான் பிரசவ வேதனைப்பட்டாக வேண்டும். நீங்கள்தான் அந்தப் பெரிய பிள்ளைகளைப்பெற தயாராக வேண்டும். ஆமாம், நீங்கள் பத்தியம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளை சரியாகக் காலா காலத்தில் அங்கஹீனமில்லாமல் பிறக்கும்."

"என்ன பத்தியம்?"

"மாமிசத்தை நிறுத்த வேண்டும். மனிதனின் உணவுக்கே ஒரு பரிணாமம் உண்டு. குரங்குகள் சாக பக்ஷிணிகளாக இருந்தன. குகை மனிதன் எதனாலோ மாமிசம் சாப்பிட ஆரம்பித்தான். அதனால்தான் பரிணாமம் தாமதப்பட்டுவிட்டது. மறுபடியும் நாம் சாக பக்ஷணம் செய்தால் தான் — "

"குரங்குகளாகப் போய் விட்டால்?"

"மாமிச பக்ஷணத்தில் குதர்க்கம்தான் மிஞ்சும். ஆகாரத்திற்கே ஒரு பரிணாமம் என்றேன். மனிதனின் தன்மை எப்படி உயர்வடைகிறதோ அதே அளவில் அவன் உணவும் உயர்வடைகிறது.

அவன் உணவில் இருக்கிறது உண்மை பூராவும். ஆதி மனிதன் மாமிசம் உண்டான், இப்பொழுதும் உண்கிறான்; ஆனால் உலகத்தின் சில பாகங்களில் பலர் (உதாரணமாக நானும் இந்தியாவில் சிலரும்) மாமிசத்தைக் கைவிட்டு விட்டார்கள். அதி மானுஷன் மாமிசத்தைத் தொடமாட்டான். வெறும் காய் கறிகளையும் கந்த மூலங்களையுந் தான் உண்பான்."

"உணவே இல்லாத ஒரு நிலைகூட உண்டோ?"

"கட்டாயம் உண்டு — உணவில்லாத உத்தமநிலை வரும். அன்று தான் உலகத்திற்குக் கதி மோட்சம். அன்றுதான் உங்கள் பொருளாதார சாஸ்திரம் சரியான சாஸ்திரமாகும். ஏனெனில் பொருளுக்கே அப்பொழுது தேவையில்லை."

பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை என்பது பொய்க்கும் காலம் உண்டோ ஆனால்?

டிராபிகல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: டெல்லி

சேர்மன்: ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ்

ஸ்தாபக டைரக்டர்கள்:
பண்டித மோதிலால் நேரு
டாக்டர் எம். ஏ. அன்ஸாரி
ஸ்ரீஜத் எஸ். ஸ்ரீநிவாச அய்யங்கார்
ஹக்கீம் அஜ்மல்கான்.

வெளியிடப்பட்ட பாலிஸிகள் மூன்று கோடிக்குமேல்.

ஏஜன்ஸிகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

கே. எஸ். ராமமூர்த்தி, எம். ஏ.,
பிராஞ்சு காரியதரிசி,
160, மவுண்ட் ரோடு, சென்னை.



மார்க்கோனி

(வே. ம.)

1895-வசந்த கால மாதங்கள். மார்க்கோனிக்கு இருபது வயது.

மேல் மாடியை விட்டு நந்தவனத்தில் இறங்கி, பரிசோதனைகள் நடத்த ஆரம்பித்தான்.

அநேகம் வாரங்கள், வீட்டில் தூக்கம் ஒய்ந்து, நடமாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னமே, மார்க்கோனி தனது கைவரிசைகளை ஒவ்வொரு தினமும் நடத்தி வருவான்.

பெண் குழந்தைகளுக்கு இடுப்பி விருந்து பாவாடை கட்டுவது போல், மார்க்கோனியின் பங்களாவைச் சுற்றிப் படிக்கட்டுகள் இருந்தன. படிக்கட்டுகளை விட்டிறங்கினால், மா வரிசைக்குள் நுழைய வேண்டியதுதான். மார்க்கோனி வேலை செய்யப் புறப்பட்டதும் படிக்கட்டு வழி அடைபட்டுப் போகும். கம்பிகளைக் கொண்டு பலவிதமாகத் தோரணங்களை அமைத்து விடுவான். “கூக்ளி எல்மோ வழியை அடைத்து விட்டான்” என்ற புகார் வரும் என்பதற்காக வேலை செய்யும் நேரங்களில் இவன் வேலை செய்வதில்லை.

அதிகாலை முகூர்த்தமானது அவனுடைய மனதை நன்கு கவர்ந்தது. பிரகிருதி நம்முடன் நன்கு ஒத்துழைக்கும் நேரம் அது. தனது உபகாரங்களை நமக்கு அள்ளிக் கொடுக்கும் காலம் அது.

இளம் கூக்ளி எல்மோ மண்ணைப் பறித்து, தகடுகளைப் புதைத்திடுவான். மரங்களில் ஏறிக் கம்பிகளை மாட்டுவான். அப்போது பல சாஸ்திரீய நம்பிக்கைகள் மனதில் குவிந்திடும். காலையின் மிருதுவுடன், இவைகளையும் சேர்த்து இன்ப நெசவு நெய்திடுவான் மார்க்கோனி.

“பையனுடைய மண்டையில் ஏதோ புழுக்கள் நுழைந்து கொண்டு விட்டன. அவைகள் குடைந்து தள்ளுகின்றன. சாப்பிட வேண்டும், தூங்க வேண்டும், என்ற நினைப்பு எப்போதாவது அவனுக்கு வருகிறதே, அதுவே ஆச்சரியப் படத்தக்க விஷயம்தான்” என்று தந்தை ஜோஸப் அடிக்கடி அன்புடன் சொல்லி வருவார்.

தோட்டக்காரனுடைய கையாள்களையும், மக்களையும் உதவிக்கெடுத்துக் கொள்வான். தோட்டம்—கோல் மயம்—கம்பிகள் மயமாகி விட்டது. தோட்டத்து மண் தகடு கர்ப்பமாகி விட்டது. பையனின் வேகத்தைத் தடுக்க முடியா தென்பதை தந்தை உணர்ந்து கொண்டார்.

1895-ம் வருஷம் முடிவதற்குள் பங்களாவில் ஆனந்தம் பொங்கிவிட்டது. ஒரு மைல் தூரத்திற்கதிகமாகச் செய்திகள் செல்லும்படி மார்க்கோனி தயார் செய்து விட்டான்.

தனது வீட்டிற்குள் நுழைந்து விட்ட ஆச்சரியத்தின் விவரத்தை தந்தைக்குப் பையன் ஒருநாள் பிரதரிசனம் செய்து காண்பித்தான்.

1896-ஆரம்பத்தில் ஒன்றே முக்கால் மைல் தூரம் செய்திகள் எட்டி விட்டன. தந்தை முழுவதும் ஒத்துழைக்கப் புறப்பட்டு விட்டார். தனது மகனின் அற்புதச் செய்கைகளைக் கண்டு தாய் கர்வம் கொண்

டான். இத்தாலியிலும், தான் பிறந்த அயர்லாந்திலும் இவனுடைய பிரதாபம் கொண்டாடப் படவேண்டும் என்று தாய் விரும்பினாள். பந்துவர்க்கங்களுக்கு அவள் கடிதம் போட்டாள்.

"அவ்வளவு இளம் வயதில் அவ்வளவு பிரமாதமான அதிசயம் யாதொன்றும் கடைபெற மாட்டாது" என்று அவர்கள் அவநம்பிக்கையையே காட்டினார்கள். கடைசியில் அதைப் போக்கிவிட்டு, தாயும் மகனும் 1896-ம் வருஷம் பிப்ரவரி மாதம் லண்டனுக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

தன்னுடைய ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு வசதியாகவுள்ள ஒரு ஹோட்டலில் மார்க்கோனி தங்கினான். அங்கு ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்தன.

இங்கிலாந்து ஜெனரல் போஸ்டாபீஸ் தலைமை இஞ்சினீயர் ஸர். வில்லியம் பிரீஸ் என்பவர் மார்க்கோனிக்கு மிகுந்த உத்ஸாஹத்தைக் கொடுத்தார். கூடிய சீக்கிரத்தில் போஸ்டல் இஞ்சினீயர், மார்க்கோனியின் புதுமைகளைப் பார்ப்பதற்கு தினமும் வசதியும் ஏற்படுத்தித் தருவதாக உறுதி கூறினார்.

ஒவ்வொரு தினமும் அவருடைய தகவலை மார்க்கோனி எதிர்பார்த்த வண்ணமாக இருந்தான். தபால்காரன் கதவைத் தட்டினான். "இன்றைக்கு அழைப்பு வந்திருக்குமோ!" என்ற துடிதுடிப்புத்தான்.

கடைசியாக, காலைத் தபாலில், ஒரு கடிதம் O. H. M. S. (மாட்சிமை தங்கிய மஹாராணி ஸர்வீஸ்) என்ற முத்திரையுடன் வந்தது. ஸர். வில்லியம் பிரீஸினிடமிருந்து வந்தது. மார்க்கோனியின் உறுதியான வாய், இன்னமும் இறுகியது. பட்ட பிரயாசைக்கும், கொண்ட ஆசைக்கும் பரீட்சை காலம் வந்து விட்டது.

அது தவறிவிடுமா? அல்லது, அது சரிவர நடைபெற்றாலும் இந்த கெட்டி மண்டை கொண்ட தந்திரிகளும் பராக்ரமிகளும் அண்டத்தில் சரிபகுதியை ஆண்டு வருபவர்களுமான—இந்த இங்கிலீஷ்காரர்கள் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டு, 'இதிலென்ன புதுமை இருக்கிறது? இங்கெல்லாம் இது தண்ணீர்பட்ட பாடு அல்லவோ! ஊசல் சமாசாரம்' என்று ஏய்த்து விடுவார்களோ?

கூடவோ தந்தையும் இல்லை; அண்ணனும் இல்லை. ஆயினும் சந்தோஷம் நிறைந்து வழிந்தோடியது. உடனே தொப்பியைக் கூட அணிந்து கொள்ளாமல், தந்தியாபீசுக்குப் போய் தந்தைக்கு ஒரு தந்தியடித்தான்.

'ஜயித்துவிடும்' என்பதைப் பற்றி மார்க்கோனிக்கு ஸந்தோஷமே கிடையாது. ஆயினும் அத்யந்த ஆதங்கம் கொண்டான்.

ஜெனரல் போஸ்டாபீஸின் மேல் மெத்தையில் முன் ஏற்பாடுகளையெல்லாம், இரண்டு மூன்று நாள் வெகு ஜாக்கிரதையாகச் செய்து முடித்தான். நியமித்த தினம் வந்து விட்டது.

மகாபக்தியுடன் நடந்து சென்றான். உத்தியோக வர்க்கம் வந்து நிறைந்து விட்டது. பல வருஷங்கள் அனுபவம் நிறைந்த—தலை நரைத்த பெரியவர்கள்—விசேஷ சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்—போஸ்டாபீஸ் நிபுணர்கள்—கூடி இருந்தனர்.

பையனுக்கு நரம்புகளை முறுக்கிப் பிழிந்திடும் வரவேற்பைக் கொடுத்தார்கள்.

கைகுலுக்குகளெல்லாம் முடிந்தன. கோஷ்டி முழுதும் மெத்தைக்குச் சென்றது. பிரீஸ் அன்புடன் தன் கையை பையன் தோளின் மேல் போட்டுக் கட்டிக்கொண்டு போனார்.

“ஆரம்பிக்கலாம், மிஸ்டர் மார்க்கோனி!” என்றார். அந்த கோஷ்டியிடமிருந்து தனது கண்களைச் சுழட்டி, கையாள்கள் பக்கம் மார்க்கோனி திரும்பினான். தனது புறங்கை எவ்வளவு நன்றாகத் தெரியுமோ, அவ்வளவு நன்றாக ‘அந்தக் கோல்’களையும், கம்பிகளையும், அறிவான். கையாள்களுடன் சேர்ந்து கொண்டான். முகூர்த்தம் வந்துவிட்டது. வேலையைத் துவக்கினான்.

சாவியைத் தானே அழுத்தினான். செய்தி கொடுத்தான். ஒரு விநாடி அனைவரும் மூச்சை அடக்கிக் கொண்டனர். பதில் செய்தி வந்தது. மூச்சு விட்டார்கள். பின்பு போஸ்டாபீஸ் குமாஸ்தாக்களைக் கொண்டு ஒரு செய்தி; பதில் வந்தது.

பின்பு அநேகம் செய்திகள். எல்லாம் ஒழுங்காக நடந்துவிட்டது.

பின்பு, நீண்ட நீண்ட விவரிப்புகள், வியாக்கியானங்கள், கருவிகளின் பரிசோதனைகள். சந்தேகம் பறந்து விட்டது. அன்றைய தினம் ஒரு நவயுகத்தின் ஆரம்பம் தான்.

அன்றுதான் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும், கம்பியில்லாத் தந்தியில் அக்கரை கொள்ள ஆரம்பித்தனர்.

மார்க்கோனி, காரியவீரன் என்பதைக் கண்டு கொண்டார்கள்.

இதில் பொது ஜனங்களுக்கு அக்கரை எற்படவில்லை. போஸ்டாபீஸ் நடைமுறையில் மயிர்க் கூச்செடுக்கும்படியான சம்பவம் என்ன இருக்கப்போகிறது—என்று பொது ஜனங்கள் நினைத்திருப்பார்கள்.

பின்பு, “ஸாலிஸ்பரி” மைதானத்தில் சேனுபதிகள், கப்பற்படைத்தலைவர்கள், தபாலபீஸ் இஞ்சினியர்கள்; இவர்களுடைய முன்னிலையில் பரீட்சை நடந்தது. செய்திகள் நான்கு மைல் தூரம், ஆறரை மைல் தூரம், எட்டுமைல் தூரம் தாண்டிச் செல்லும்படி மார்க்கோனி செய்தான்.

இந்தக் காலத்தில், கெம்ப் என்ற கையாளை மார்க்கோனி சம்பாதித்துக் கொண்டான். ஒரு நண்பனுடைய வீட்டில் கம்பியில்லாத் தந்தியை மார்க்கோனி அமைத்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டின் கூரையின்மீது, தானே எறிக் கொண்டு, ஷர்ட்டை தோள்வரைக்கும் மடக்கிக் கொண்டு, மின்சாரக் கம்பிச் சுருள்களை புகைப்போக்கியில் மாட்டிக் கொண்டிருந்தான். ஒரு ஆள் உதவிக்கு வேண்டியிருந்தது. தெருப்பக்கம் பார்த்தான். ஒரு ஆள் தன்னை உற்றுக் கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அந்த ஆள், “நீர் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்?” என்று கேட்டான். அதற்கு மார்க்கோனி “கூரை மீதேறி இங்குவா, விவரமாக உனக்குச் சொல்லுகிறேன்” என்றான்.

மேல் வார்த்தை தர்க்கம் ஒன்றுமில்லை. அந்த ஆள் தண்ணீர் குழாயைப் பிடித்துக் கொண்டு, அதன் வழியாகக் கூரைக்கு வந்துவிட்டான். வெகு சுறுசுறுப்பாக ஒத்துழைத்தான். அடுத்தாற் போல் அந்த ஆள்—கெம்ப்—மார்க்கோனியிடம் வேலைக்கு அமர்ந்து கொண்டான். 1932-ல் அவனுடைய ஆயுள் ஒய்ந்தது. அதுவரைக்கும் மார்க்கோனியின் ஆளாகவே இருந்தான்.

அடுத்தாற்போல் மார்க்கோனி ஜலத்தைத் தாண்டி, செய்திகளை அனுப்புவதற்கு பரீட்சைகள் செய்தான். முதலில் மூன்று மைல் கடந்து சென்றது. பின்னிட்டு நான்கு மைல், பின்னிட்டு ஒன்பது மைல் வரைக்கும் சென்றது.

அப்போது 1896-ல் மஹோன்னத தசையில் இருந்த ஜெர்மன் கேய்ஸர் ஒரு ஆசிரியரை

மார்க்கோனியிடம் அனுப்பித் தகவல்களை அறிந்துவரச் செய்தார்.

மார்க்கோனி பிறந்தது முதல் ஒரு காலத்திலும் ஏழையாக இருக்கவில்லை. பணத்தட்டுக் கிடையாது. தனவந்தர்களிடமாவது பதவியிலிருப்பவர்களிடமாவது பணத்திற்காகப் பல்லைக் கெஞ்சவேண்டிய அவசியம் மார்க்கோனிக்கு ஒரு நாளும் ஏற்படவில்லை. கடுமையான வேலை செய்யத் தயார். புதுமையை விவரித்துக் காட்டத் தயார். வெறும் பேச்சுப் பேசத் தயாரில்லை. வார்த்தையிலோ, செலவுகளிலோ ஊதாரித்தனம் கிடையாது. 1896-ல் தனது 'பேடென்டை' ரிஜிஸ்தர் செய்து கொண்டான். மற்ற 'பேடென்ட்'களையும் அடுத்தடுத்து ரிஜிஸ்டர் செய்தான்.

பணம் நிரம்பக் கிடைத்தது. "இதை வாங்கு, அதை வாங்கு" என்றார்கள் நண்பர்கள். அந்த யோசனைகளில் ஒன்றையும் பொருட்படுத்தாமல், தனக்குத் தேவையான சாமான் ஒன்றுதான்—ஒரு பைசிக்கிள்—அதை வாங்கிக் கொண்டான். அதிலும் விலை உயர்ந்ததை வாங்கிக் கொள்ளவில்லை. எது கெட்டியானதோ, நன்றாக வேலை செய்திடுமோ, அதைத்தான் வாங்கிக் கொண்டான்.

1897-ல் ஜூன் மாதத்தில் இத்தாலிய சர்க்காரிடமிருந்து அழைப்பு வந்தது. யுத்தக் கப்பல்களுடன் கம்பியில்லாச் சம்பாஷணைகளை நடத்திக் காட்டினான். இத்தாலியின் அரசனும், ராணியும் பார்த்தார்கள், அக்கறை கொண்டார்கள், கொண்டாடினார்கள். இத்தாலிக்கு ஒரு பெருமை என்றார்கள். "கடைசியாக எவ்வளவு தூரம் எட்டும்படி செய்திடுவாய்?" என்று ராணி மார்க்கோனியை இன்பமான பேதமையுடன் கேட்டாள். இத்தாலி "பார்லிமெண்டு" சபையோருக்கே ஒரு தடவை பிரதரிசனம் செய்வித்தான்.

இத்தாலி சர்க்காரின் ஒத்தாசையுடன்—ஒரு கம்பியில்லாத் தந்திக் கம்பெனியும் ஸ்தாபிக்கப்பட்டது.

திரும்பவும் மார்க்கோனி இங்கிலாந்து சென்றான். பிரிட்டிஷ் கடற்கரையோரங்களில் எல்லாம் மார்க்கோனி பரீட்சைகளைச் செய்தவண்ணமிருந்தான். மைதானங்களில் நூற்றிருபது அடிக் கம்பங்களை நட்டு, கம்பிகளை மாட்டி, வேலைகளைச் செய்யவே, பொது ஜனங்கள் அக்கறை கொண்டார்கள். மார்க்கோனியுடன் கைகுலுக்க வேண்டும், பேசவேண்டும், விருந்துண்ண வேண்டும், தோழமை கொள்ள வேண்டும்—என்றெல்லாம் அநேகருக்கு ஆவல் உண்டு.

ஆனால் மார்க்கோனிக்கு அதில் எல்லாம் ருசி கிடையாது. தனது தாயினுடைய ஸக்கியம் அவனுக்குப் போதுமானது. காரியத்திற்கு வெளியே வருவான்—மிச்சப் பொழுது முழுதும் தனது வீடுண்டு, தாயுண்டு—என்று காலத்தைக் கழித்தான்.

இத்தாலிய சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாலிபனும் சேனையில் சேர்ந்து சில வருஷங்கள் யுத்தப் பயிற்சி பெற வேண்டும். சொல்ப காலத்திற்காக இருந்தபோதிலும், இந்த ஆராய்ச்சிகளை விட்டுச் செல்வதற்கு மார்க்கோனிக்கு மனம் வரவில்லை. ஒரு இத்தாலி தளபதியும், பிரிட்டிஷ் நிபுணர் லார்டு கெல்வின் என்பவரும் பையனுடைய விசேஷ முயற்சிகள் காரணமாக இவனைச் சட்டத்தின் பிடிப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். யுத்த நிபுணருக்கும், பௌதிக சாஸ்திர நிபுணருக்கும் சட்டத்தின் தோது என்ன தெரியும்? ஒரு வக்கீல் தோது சொல்லிக் கொடுத்தார்.

பையன் இங்கிலாந்திலேயே தனது அலுவலைப் பார்த்து வரட்டும். இங்கிலாந்தில், இத்தாலியப் பிரதிநிதி இருக்கிறாரல்லவா, அவருடைய ஆபீஸில் ஓர் உயர்தர சேவகராகப் பெயருக்கு இவரை நியமித்து விட்டால், எடுத்த காரியத்திற்கு இடைஞ்சலும் இராது—சட்டமும் திருப்தி யடைந்து விடும்—என்று கண்டுபிடித்துக் கொடுத்தார்.

அந்த உத்தியோகத்தின் சம்பளத்திற்கு 'செக்கு'கள் மார்க்கோனிக்கு மாதா மாதம் வந்து கொண்டிருந்தன. அதை அவன அப்போதே ரொக்கமாக்குவதில்லை. சேர்ந்தாற்போல் பணமாக்கி லண்டனிலுள்ள இத்தாலிய ஆஸ்பத்திரிக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டான். ஆனால் நன்கொடையாளர் ஜாப்தாவில் தனது பெயரைப் பிரசுரப்படுத்தக் கூடாதென மறுத்தான்.

வாழ்க்கை முழுதும் இவன் தர்மம் செய்த வகை இவ்விதமேதான். இளகிய இருதயம். வந்தனம் பெறுவதென்றால் இவனுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. தருமங்கள் செய்யும் போதெல்லாம், தனது பெயர் வெளியே வரக்கூடாது என்று யுக்தி செய்து, அந்த ஆசையையும் நிறைவேற்றிக் கொண்டு விடுவான்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ்-பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

உண்மைக் கதை

அவள் விரும்பினது

(சீதாபதி)

'லோனு மாஸி அவனோடு உள்ள சம்பந்தத்தை அறுத்துக் கொண்டு விட்டாள். அதனல் அவனுக்கு வாழ்க்கையில் உள்ள நம்பிக்கையே போய்விட்டது. அது, உயிருக்கே ஆபத்தாகிவிடும் போலிருக்கிறது.'

'அதற்கு நாம் பொறுப்பாளி அல்ல. ஆனல் அவனை இங்கு கொண்டு வந்தால் ஒரு காரியம் செய்யலாம். அவனை மறுபடியும் தன் சொந்த ஊரான புடாபஸ்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யலாம்'.

இந்த சம்பாஷணைக்கு ஒரு மணிநேரத்துக்குப் பிறகு பட முதலாளியின் மேஜைக்கு முன்னல் முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஒருவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். தன்னல் ஆனமட்டும் அடக்கிப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண் டிருந்தது.

தன் சுயதேசத்திலே குத்துச்சண்டை விஷயங்களில் இவன் செய்த விமர்சனத்துக்காக, இவனே இருநூறு தடவைகளுக்குமேல் சண்டை போட்டவன். அது அமெரிக்காவுக்கு, தான் மணக்க இருந்த புது ஹாலிவுட் நடிகை லோனு மாஸியைப் பார்க்க வருவதற்கு முன்.

* * *

இரண்டு வருஷங்களுக்கு முன் புடாபஸ்டிலும், வீயன்னுவிலும் ஜெர்மானிய, ஹங்கேரிய பாஷைகளில் பாட்டுப் பாடி ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள் லோனு மாஸி. அழகானவள்தான்; ஆனல் கொஞ்சம் பெருத்த உடல், அழகான சாரீரம். ஹாலிவுட் படவுலகம் தான் அவள் கனவாக இருந்தது. ஆனல் அது கனவாக நின்று விடும் என்று தான் அவள் அப்போது நினைத்திருந்தாள்.

ஆனல்? அது பலித்துவிட்டது. சந்தர்ப்பமும், அதிர்ஷ்டமும் அவளுக்கு வந்து சேர்ந்தது. இரண்டும் கலந்த உருவத்தில் அவள் முன் தோன்றினன் அவன். அவள் பாட்டைக்கேட்ட முதல் இரவிலேயே சொக்கிப்போய்விட்டான் ஜோல்டன் எகிட். பெண்கள் வசீகரத்திலே மயங்கிப்போகும் சுபாவம் அவனுக்கு. அந்தப் புது நடிகையைப்பற்றி அன்றிரவே புகழுரை எழுதினன்.

அதன் பலன் ? இந்தப் பிரபல விமர்சகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தெரிவித்தாள் லோனு ஹாஜ்மாஸி.

முதல் தடவைதான் அவர்கள் அப்போது சந்தித்தார்கள். தன் மோகத்தின் எதிரொலியை அவள் முகத்திலும் கண்டவுடன் ஜோல்டன் பிரமித்துப் போய்விட்டான். அன்று ஆரம்பித்தது தான். தன் நாக்கையும், பேனவையும் கொண்டு அவளைப் புகழ்ந்து பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டான். ஐரோப்பாவிலேயே சிறந்த நடிகையாக அவளை ஆக்கி விடுவதாக வாக்கும் அவளுக்குக் கொடுத்து விட்டான். 'ஏன், ஹாலிவுட் நக்ஷத்திரம் ஆக்கிவிடுகிறேன்' என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

அந்த வாக்கும் நிறைவேறும் சந்தர்ப்பம் சீக்கிரமே வந்தது. ஒரு பெரிய பட முதலாளி ஊர் சுற்றிப் பார்க்க வந்தவரோடு, எப்படியோ ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

ஜோல்டனும் லோனுவும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தார்கள். 'புது உலகத்தை ஜெயித்துவிடவேண்டும்' என்று இருவரும் சேர்ந்து கங்கணம் கட்டிக்கொண்டார்கள். அந்த வேகத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் ஐரோப்பியக் கனவுகள் எல்லாம் நிறைவேறிவிட்டன. இனி அவர்கள் கண்ணெதிரில் இருப்பது, ஹாலிவுட்டில் குஷால் வாழ்க்கை, டாலர்கள், காதல் விசேஷங்கள் இவைதான்.

ஆனாலும் ஜோல்டன் தன் வேலைகளை முடித்துக்கொண்டு புறப்படத் தயாராவதற்கு முன் லோனு புறப்பட்டுச் செல்ல ஏற்பட்டது. தனியேதான் சென்றாள். இன்னும் இரண்டு மாதங்களில் ஜோல்டன் புறப்பட்டு வருவதாக இருந்தது.

ஹாலிவுட்டுக்குப் புறப்பட்டதும் படக் கம்பெனி பிரதிநிதிகள் லோனுவிடம் கூறினார்கள். 'இதோ பார், இனி லோனு ஹாஜ்மாஸி இல்லை நீ. லோனு மாஸிதான். நீ இன்று முதல் பூரணமாக மாறிவிட வேண்டும். உன் சதையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆமாம், உனக்கு ஏதோ ஒரு காதலன் ஒருவன் இருப்பதாக எல்லாம் கேள்விப்பட்டோமே. அது என்ன அவ்வளவு பிரமாதம் இல்லையே. அதெல்லாம் கூடாது. அதோடு நின்று விட வேண்டும்' என்றார்கள்.

அதைக் கேட்ட லோனு திடுக்கிட்டு விட்டாள். முரண்பட்ட உணர்ச்சி வசமான உள்ளத்தோடு அமெரிக்க கடற்கரையில் வந்து இறங்கினாள்! 'எந்தக் காரணத்தைக்கொண்டும் ஜோல்டனை விட்டுவிட மாட்டேன். ஒப்பந்தம் ரத்தானாலும் சரி' என்று தனக்குள்ளே சத்தியம் செய்து கொண்டாள். அவனிடம் தனக்குள்ள உறுதிக் காதலைக் காட்டிக்கொள்ள அன்றுடம் டெலிபோனில் கூப்பிட்டு, அவனோடு அந்தத் தொலையிலிருந்து பேசினாள்.

அதிலே அவள் சொல்லுவாள்: 'ஜோல்டன், நீ இல்லாமல்,என்ன ஹாலிவுட், அமெரிக்கா வேண்டி இருக்கிறது. எனக்குப் பிடிக்கவே இல்லையே' என்று!

புடாபஸ்டிலே அமெரிக்கா போக பாஸ்போர்ட் வாங்குவதற்கு துடித்துக்கொண்டிருந்தான் ஜோல்டன். இங்கே லோனுவுக்கு ஏற்பட்டது இது.

அவள் முற்றிலும் உருமாறிவிட்டாள். ஜோல்டன் மறுதரம் கண்டதும் அடையாளம் கண்டுகொள்ள முடியுமா, என்று சந்தேகப் படும் அளவுக்கு அவள் அதிக சதை குறைந்து, நல்ல கட்டமைப்புப் பெற்றுவிட்டாள். கூந்தல் அலங்காரமே வேறு ரீதியாகிவிட்டது. உதடுகள் அமைப்பே செயற்கை வசமாகி அழகாக்கப்பட்டது. புது தோரணை ஏற்பட்டு விட்டது அவள் நடையில். தன் சொந்த பாஷையில் ஒரு வார்த்தைகூட பேசக்கூடாதென்று அவளுக்கு உத்தரவு. இங்கிலீஷில் தட்டுத் தடுமாறி வார்த்தைகளை அவள் சேர்த்தால் போதும் முதலாளிகளுக்கு.

நாட்கள் சென்றன. இன்னும் ஜோல்டன் வந்து சேரவில்லை. ஹாலிவுட்டில் புதுமை அத்தனையையும் லோனு ஆச்சரியத்துடன் பார்த்து அநுபவித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பார்வை அநுபவம் எல்லாம் அவளை எங்கே ஓட்டிக்கொண்டிருந்தன?

*　　　*　　　*

ஒருநாள் எகிட் ஹாலிவுட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டான். தன் சொந்தக் காரிலேயே போய் லோனு அவனை ஸ்டேஷனில் கண்டாள்.

அவன் உற்சாகமும், மகிழ்ச்சியும் அவளைப் பார்த்த பார்வையில் விவரிக்க முடியாததாக இருந்தது. அவனால் அடக்க முடியவில்லை.

'லோனு!' என்றுகொண்டே அவள் கையைப் பிடித்துக் கிட்ட நெருங்கினான்.

லோனு திடீரென்று பின்வாங்கினாள். 'ஜோல்டன், ஊஹூம்... இங்கே கூடாது. என்னை எல்லோருக்கும் இங்கே தெரியும். யாராவது பார்த்துக்கொண்டிருப்பார்கள். நான் அவசரமாகப் போகவேண்டும். ஏற்கெனவே நாழிகை...'

போர்ட்டர்களுக்கு அவள் உத்தரவிட்டாள். அவன் அவள் பக்கம் திரும்பினான். 'லோனு! நீ எவ்வளவு மாறிவிட்டாய்?'

அவள் அமெரிக்க தேசத்தவளாகி விட்டாள்! அவனோ இன்னும் ஹங்கேரியனாகவே இருந்தான்.

'லோனு, நாளையே நாம் கல்யாணம் செய்துகொண்டு விடுவோம் என்ன, சம்மதந்தானே?'

'ஹூ ஹூம்! முடியாது. இப்போது நான் அதைப்பற்றி நினைக்கவே கூடாது!'

'நினைக்கவே கூடாதா? பின் எப்போது?' அந்த நாளை எப்படி சொல்ல முடியும் இப்போது. அது வரும்போது பார்த்துக் கொள்வோம்! அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அந்த நாள் வரவேயில்லை.

அவள் எங்கே இருக்கிறுள் என்றே அவனுல் கண்டு பிடிக்க முடியவில்லை. ஸ்டூடியோவில் இருப்பதாகச் சொல்வார்கள். காதலர் படும் அவஸ்தைகளை எல்லாம் பட்டுக்கொண்டு போய் பார்ப்பான். அவள் அங்கு இருக்கமாட்டாள். ஏன், அவள் எங்கும் அகப்படமாட்டாள்—அவனுக்கு.

அவள் அப்படியே அகப்படாமல் போய்விடுவாளா?

அவன் நண்பர்கள் அவனுக்கு யோசனை கூறினர்கள். 'ஜோல்டன் அவளை அப்படியே விட்டுவிடேன்! என்று. அதற்கு அவன் தயாராக இல்லை.

ஒருநாள் கடைசியில் கண்டுபிடித்து விட்டான். அவளுக்கு அவன் ஞாபகமூட்டினுன். 'மாஸி! உன்னை ஹாலிவுட்டிற்குக் கொண்டு வருவதற்கு எவ்வளவு உதவி செய்தேன் உனக்கு? நம் கலியாணம் எப்போதே நிச்சயம் ஆனதே! உனக்கு ஞாபகம் இல்லையா? நீதானே என்னை இங்கு வரும்படி தூண்டிவிட்டவள்!'

இதைச் சொல்லிவிட்டு அவள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை எதிர்பார்த்து நின்றான்.

வார்த்தைகள் வந்தன. மிஸ் மாஸி பேசினாள். 'நான் என்ன செய்வது! இதற்காக நான் வருத்தப்படுகிறேன். நான் இப்போது பூரணமாக மாறிவிட்டேன். அமெரிக்க தேசத்தவளாகி விட்டேன். நம் ஊரில் புடாபஸ்டில் நீ எனக்கு பிரபல ஜோல்டன் எகிடாக இருந்தாய். ஆனால் இங்கு நீ இங்கிலீஷ் பேசும்போது உன் பாஷை உச்சரிப்பைக் கேட்க எனக்குத் திடுக்கிடுகிறது. நீ ஏன் உன் சொந்த ஊருக்கே போய்விடக் கூடாது?'

ஜோல்டன் கல்லாக நின்றான். அவள் தோற்றம் மாறிப் போனதற்கு அன்று அவன் சந்தோஷப்பட்டான். அதோடு அவள் உள்ளமும் மாறிவிட்டது என்பதை இப்போதுதான் அவன் அறிந்தான்.

'லோனா...லோனா...!' அதற்குமேல் அவன் பேசமுடியவில்லை.

அவள் பேசினாள். 'ஒரே வார்த்தை! உன்னைப் பிடித்துக் கொண்டால் என் வேலை போய்விடும். இரண்டில் ஒன்றைத்தான் நான் தேர்ந்தெடுக்க முடியும். சீக்கிரம் சொல்லு. எது உனக்கு விருப்பம் என் எதிர்காலத்தையும் அதிர்ஷ்டத்தையும் நான் விட்டு.........?'

'லோனா! லோனா!' அவ்வளவுதான் அவன் பேசினது.

இரண்டு மணிநேரம் கழித்து ஒரு விமானத்திலே அவன் நியூயார்க்குக்குப் போய்க்கொண்டிருந்தான். விமானம் முறிந்து விழுந்துவிடுமென்று தான் நம்பிக்கொண்டிருந்தான் ஒவ்வொரு விநாடியும்.

ஆனால் விமானம் முறிந்து விழவில்லை. அங்கேபோய் இறங்கவும் அவன் ஊருக்குத் திரும்பிப்போக செலவுக்காக ஆயிரத்தி எண்ணூறு டாலர் செக் ஒன்றும் படக்கம்பெனி முதலாளி கையெழுத்துடன் கிடைத்தது.

சோதனை

(ஆர். சேதுராம்)

மணி ஐந்தரை. சினிமா ஆரம்பமாக இன்னும் அரை மணி இருந்தது. ஒரு ரூபாய் இரண்டணா கொடுத்து டிக்கட் வாங்கி நடைபாதைக் கருகிலிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். கொட்டகை நிரம்பியிருந்தது. நாலாப் பக்கமும் பார்த்தேன். மேல் சீட்டில் அமர்ந்திருந்த மங்கையர்களின் மீது பார்வை சென்றது. உடை, வயது இவற்றை கவனிக்கும்போது மாணவிகள் போல் தோன்றியது. என்னைக் குறித்து அவர்கள் ஏதோ பேசுவதுபோல் இருந்தது.

உலகிலுள்ள ஏழு அற்புதங்களில் நானும் ஒன்றாக இல்லாதிருக்கும்போது என்னைப் பற்றி ஏன் இவர்கள் சம்பாஷித்தனரென்று எனக்கு விளங்கவில்லை. நான் நினைப்பது தவறோ என்று எண்ணினேன். ஆனால் அவர்கள் பேசுவது என்னைப் பற்றியே என்று சந்தேகமில்லாமல் தெரிந்தது. கண்களைக் கண்கள் சந்தித்தன. மரியாதைக் குறைவாகக் கருதுவார்களோவென்று எண்ணிப் பார்வையைத் திருப்பிக் கொண்டேன்.

உள்ளத்தில் சிறிது கர்வம் உண்டாயிற்று. இவ்வளவு ஜனத்திரளில் இரு வாலிப மங்கையரின் பார்வையைக் கவர்வதென்பது பெரிதல்லவா! சட்டையின் காலரைச் சற்று கழுத்தோடு சேர்த்து மேலே தூக்கி விட்டுக் கொண்டேன். கைக்குட்டையை பையிலிருந்து எடுத்து ஒரு முறை முகத்தை நன்றாகத் துடைத்துக்கொண்டேன். பிறகு கடைக் கண்ணால் அவர்களை நோக்கினேன்.

"மணி என்ன ஆகிறது?" என்றாள் ஒருவள்.

நான் திடுக்கிட்டு, "என்னையா கேட்கிறீர்கள்?" என்றேன்.

"ஆம்" என்று பதிலளித்தாள் அவள். நான் உடனே ரிஸ்ட் வாட்சைப்பார்த்து, "ஐந்து நாற்பது" என்றேன்.

"சரியான நேரம்தானே?"

"ரயில்வே டயத்திற்குச் சரியானது."

"படம் எப்பொழுது ஆரம்பம்?"

"ஆறு மணிக்கு."

உடனே அந்தப்பெண் தன் தோழியிடம் பேசத்தொடங்கி விட்டாள். இந்தச் சம்பவத்தை யாராகிலும் கவனித்து விட்டார்களோவென்று நான் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்துக்கொண்டேன். ஜனங்கள் பொறாமையுடன் கவனித்திருக்கலாம். அது எனக்குத் தெரியாது. பாக்கெட்டி

விருந்து சிகரெட் டப்பாவை எடுத்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன்.

"படத்தை யார் டைரக்ட் செய்திருக்கிறது?"

"சீதாராம் ஒரு பெயர் பெற்ற டைரக்டர். அவரது படம் 'நவஜீவ'னைத் தாங்கள் பார்க்க வில்லையா?" என்று ஒரே மூச்சாக அளக்க ஆரம்பித்தேன்.

"இல்லை" என்று அந்தப்பெண் மணி பதிலளித்தாள்.

"அதில் ராதிகா ராணி எவ்வளவு அழகாக நடித்திருக்கிறார்" என்றேன்.

என் தோழி கௌரி மிஸ் மேகர் பித்து பிடித்து அலைகிறாள்."

"ஆமாம்—இல்லை, அவரும் நல்ல....."

"என்ன அவர்கூட நல்ல நடிகையா?"

"நீங்கள் கூறுவது உண்மையே. ராதிகா ராணியின் நடிப்பை 'நவஜீவ'னில் அவசியம் காணவேண்டும்."

"கதை என்ன வென்பதைச் சொல்லுங்கள். 'கௌரி' உன்னால்தான் 'நவஜீவன்' பார்க்க முடியவில்லை. உன்னால் தான். இனி ராதிகா ராணியின் புதிய

"அதில் நடித்திருப்பது ராதிகா ராணியா?" என்று வினவினாள் அம்மங்கை.

"ஆமாம்" என்றேன் நான்.

"தாங்கள் ராதிகா ராணி நடித்த படங்களை அதிகம் விரும்புகிறீர்கள்போலும். நானும் அப்படியே. உண்மையாகவே, அவருக்கு ஈடான நடிகை வேறு ஒருவரும் கிடையாது. ஆனால்

படம் எப்பொழுது வந்தாலும் ரமாதேவியை அங்கு அவசியம் காணலாம் என்பதை நான் தங்களுக்குச் சொல்லிவைக்கிறேன்."

'ரமாதேவி' என்ற பெயர் என் மனதில் பதிந்து விட்டது.

"எங்கே? தாங்கள் கதையைச் சொல்லக் காணோமே. வாருங்கள். இந்தப் பக்கத்து ஸீட்டில் அமருங்கள்......" என்று தன்

பக்கத்து ஸீட்டைக் காண்பித்துக் கொண்டே ரமா கூறினள்.

எனக்கு அச்சமயம் உண்டான மகிழ்ச்சியைப்போல், ஒருவருக்குமே ஏற்பட்டிருக்காது. காச நோயாளியைப் போல் எனக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது. எழுந்து ரமா கூறிய ஸீட்டில் போய் அவளருகில் உட்கார்ந்து கொண்டேன்.

"இப்பொழுது கதையைச் சொல்லுங்கள். நிற்க, நாங்கள் பேச்சிலேயே எங்களது பெயர் களைச் சொல்லி விட்டோம். ஆனல் தாங்களோ தங்கள் திரு நாமத்தை......"

"என் பெயர் கணேஷ்" என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினேன் நான்.

'அதுதான் சரி சபாஷ்! பகவானின் பெயர்களை வைத்துக் கொள்வதுதான் எனக்கு மிகப் பிடித்தம். அதனல் நமது தேசத்திற்கும், நமது ஜாதி மேன்மைக்கும் சற்றுப் பெருமை ஏற்படுகிறது. ஹிந்து வாலிபர்களுக்கு சங்கர், ஹனுமான் முதலிய பெயர்கள் இடவேண்டுமே யன்றி, மனோரஞ்சன் போன்ற பெயர்கள் கூடாது. சரி, மணி என்ன?"

கைக்கடியாரத்தைப் பார்த்து விட்டு, "ஆறு அடிக்கப் பத்து நிமிஷம்" என்றேன் நான்.

"அப்படியாயின் கதையைச் சொல்லுங்கள்."

ரமாவின் உதடுகளில் புன் சிரிப்புத் தோன்றி மறைந்தது.

"தாங்கள் இவ்வளவு ஆர்வமாக......"

"நல்லது. மிஸ்டர் கணேஷ். 'வாக்கு' படத்தில் ராதிகா ராணியும் சூரிய குமாரும் முதல் சந்திப்பிலேயே காதலிக்கத் தொடங்குகின்றனர். கண்டதும் காதலைத் தாங்கள் நம்புகிறீர்களா?"

எனக்கு வியர்க்கலாயிற்று. இரண்டொரு முறை தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு "என், நிச்சயமாக நம்புகிறேன்" என்றேன்.

"கேட்டாயா, கௌரி? மிஸ்டர் கணேஷ் கண்டதும் காதலை நம்புகிறார். ஆனல், மிஸ்டர் கணேஷ், எனது தோழி இதை நம்புகிறதில்லை. உண்மையாகவே தாங்கள் நவீனமாக இருக்கின்றீர். நான் தங்களிடம் பேச ஆரம்பித்ததைக் கண்டு தாங்கள் எங்கு திடுக்கிடுகிறீர்களோ வென்று நினைத்து மிகவும் பயந்தேன். ஒருயுவனும் யுவதியும் சம்பாஷிப்பதில் திடுக்கிடக்கூடிய விஷயம் என்ன? ஆனல் நான் ஓரிருவருடன் சம்பாஷித்திருக்கிறேன். பயத்தால் அவர்களுடைய கை கால்கள் நடுங்குவதைக் கண்டிருக்கிறேன். அடடா, என்ன? உங்களுடைய சிகரெட் கீழே விழுந்துவிட்டதே மிஸ்டர் கணேஷ்!"

சிகரட்டை எடுத்து முகத்தில் வியர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே, அந்தக் காரணமற்ற பயத்தில் நடுங்கும் வாலிபர்களுக்காக இரக்கம் தெரிவிக்கும் முறையில் சிரிக்க முயற்சித்தேன்.

ரமா என்னை நோக்கி, "எனது வார்த்தைகளால் பயந்து விட்டீர்களோ?"

"இல்லை, இல்லை."

"தங்களுக்கு ஒரு வேளை என் தோழியைப் போன்ற

ஊமைப் பெண்கள் தான் பிடித்த மாக்கும்.''

நான் பெரிய ஆபத்தில் மாட்டிக் கொண்டேன். "...பாருங்கள் ...விஷயம்..." என்று எவ்விதமோ பதில் சொல்ல எண்ணினேன். மத்தியில் ரமா பேச்சில் குறுக்கிட்டு, "தெரிந்து கொண்டேன். சம்பாஷணையும் சம்பாஷிப்பவர்களுந்தான் உங்களுக்குப் பிடித்தம். உங்களுடைய வார்த்தையை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன்.''

நெஞ்சில் ஸ்டீம் எஞ்சின் வேலை செய்வது போன்றும், ஆயிரக்கணக்கான கடிகாரங்கள் சேர்ந்தாற்போல் டிக், டிக் என்று அடிப்பது போலவும் எனக்குத் தோன்றியது. எனினும், கம்பீரமாகவே, "உண்மையாகவே சொல்கிறீர்களா, ரமா தேவி?'' என்றேன்.

"...உண்மை...''

உடனே நானூற்றி நாற்பது வோல்ட் கரண்ட் தலையிலிருந்து கால் வழியாகப் பூமியில் இறங்கிவிட்டது போல் தோன்றியது. "ஆரஞ்சு கிரஷ் வரவழைக்கட்டுமா?'' என்றேன்.

"வேண்டாம்.''

"கௌரி தேவி, உங்களுக்கு?''

"வேண்டாம், வந்தனம்'' என்று ஒரு சிறிய பதில் கிடைத்தது.

"அவருக்கு...கொ-ஞ்-ச-ம் சங்கோஜந்தான்'' என்று சொல்லிக்கொண்டே சிரித்தோம்.

"நீங்கள் சொன்னது வாஸ்தவந்தான்.''

படம் ஆரம்பமாயிற்று. முக்கிய படம் காண்பிப்பதற்கு முன் ரமா, "போவதற்கு முன்பு நான் தங்களுக்கு ஒரு வெகுமதி கொடுக்க விரும்புகிறேன். அங்கீகரிக்க வேண்டும். முடியாது என்பதை யெல்லாம் கேட்கமாட்டேன்.''

"உங்களுடைய வெகுமதியை நான் வாழ்நாள் முழுவதும் சிரமேல் தாங்கிக் காப்பாற்றுவேன்.''

"எனக்கும் அந்த நம்பிக்கை உண்டு'' என்று சற்றுச் சிரிப்புடன் சொன்னாள் ரமா. படம் ஆரம்பமாகி, இருள் நிறைந்ததும் ஒரு கேட்மன் டார்ச் லைட்டால் வழியைக் காண்பித்துக் கொண்டு, ஒரு வயோதிகக் கனவானை அழைத்துக் கொண்டு வந்தான்.

"சார், டிக்கட்.''

சிறிது ஆச்சரியத்துடன் ரமாவின் பக்கம் நோக்கினேன். அவள் கவனம் படம் பார்ப்பதிலேயே லயித்து இருந்தது. கொட்டகையில் இடி விழுந்தால் கூட கவனிக்கமாட்டாள் போல் தோன்றியது.

"சார், டிக்கட்டைக் காட்டுங்கள்.'' இப்பொழுது டிக்கட்டைக் காண்பிக்காவிடில் மானம் தப்புவது கடினமாகி விடும்போலிருந்தது. பாக்கெட்டிலிருந்து டிக்கட்டை எடுத்துக் கேட்மேனிடம் கொடுத்தேன்.

கேட்மன் அதைப் பார்த்து விட்டு, "முன் ஸீட்டிற்கு வாருங்கள்'' என்றான்.

திரும்பிவந்து முன் உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தேன். கோபத்தாலும் அவமானத்தாலும் வியர்வை உண்டாயிற்று. உடனே அவ் வயோதிகக் கனவான் அவளது நெருங்கிய உறவினராக்

இருக்கலாமென்றும், ஒரு அறிமுகமில்லாத மனிதன் சமீபம் உட்கார விரும்பவில்லை போலும் என்று எண்ணினேன்.

திரையில் ஒவ்வொரு பாகமாகப் படம் காட்டப்பட்டு வந்தது. ஆனால் என் மனத்திரையில் வேறு படம் எழுந்த வண்ணம் இருந்தது.

நான் அவர்களது வீட்டு மேஜைமுன் உட்கார்ந்திருக்கிறேன். டீ கப்பில் டீயை வார்த்துக்கொண்டே ரமா, "எவ்வளவு ஸ்பூன் சர்க்கரை போடட்டும்?" என்று கேட்கிறாள். அவள் பக்கம் பார்த்துக் கொண்டே நான் "தேவையில்லை" என்கிறேன். இந்தப் பார்டியில் எனது கையிலிருந்த க்ரஷ் கிளாஸ் கீழே விழுந்து தூளாகிறது.

இதற்குள் தியேட்டர் விளக்குகள் பிரகாசித்தன. ஸினிமா காட்சி முடிந்தது. அனைவரும் சேர்ந்தாற்போல் ஸீட்டைவிட்டு எழுந்து நின்றனர்.

அவர்களுக்குப் பின் நானும் வெளியே நடந்தேன். வயோதிகர் சற்று முன் செல்வதைக்கண்டு நல்ல தருணத்தைக் கைவிடாமல், ரமாவிடம் "அவர் தங்களுக்கு என்ன வேண்டும்?" என்றேன்.

"யார்?"

"அதான். என் ஆசனத்தில் வந்து உட்கார்ந்திருந்தாரே அந்த வயோதிகர்தான்."

"எனக்கு எந்த புருஷனுடனும் அறிமுகம் கிடையாது. அவர் ஆகாஷனுகவும் இருக்கலாம் அல்லது ஹெயிலி ஸெலாஸியாகவும் இருக்கலாம். ஆனால் தாங்கள்...'

என்னைத் தூக்கி வாரிப்போட்டது. "இதென்ன ரமாதேவி, நான்—நான்தான் கணேஷ்" என்றேன்.

சற்றுப்—பிரமித்து, ரமா! "கணேஷ் தாங்கள் கவலைகொள்ள வேண்டாம். ஒரு இந்திய வாலிபனைக் காதல் வலையில் சிக்கவைக்க எவ்வளவு நேரம் பிடிக்குமென்று எனக்கும் எனது தோழிக்கும் பந்தயம் நடந்தது. அவள் முப்பது நிமிஷம் என்றாள். நான் பதினைந்து நிமிஷங்கள் என்றேன். ஆனால் நான் ஐந்து நிமிஷத்திற்குள் என்று பந்தயம் வைத்திருந்தால்கூட ஜெயித்திருப்பேன் என்று தெரிந்து விட்டது. நல்லது. நமஸ்காரம்" என்று சொல்லிப் போய்க்கொண்டே, ரமா திரும்பிப் பார்த்து, "ஒரு விஷயம் கூறிவிடுகிறேன். கவிதை எழுதும் வீண் முயற்சியை விட்டு விடுங்கள். ஏனெனில், என் பெயரும் ரமா அல்ல; எனது தோழியின் பெயரும் கௌரியல்ல' என்றாள்.

ஒரு மோட்டார் வந்து ஸினிமா கொட்டகையின் வாயிலில் நின்றது. இருவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். நான் ஏதோ சொல்ல முயல்வதற்குள் மோட்டார் நகர்ந்து விட்டது. மோட்டாரின் வேகத்தால் எழுப்பப்பட்ட தூசி அலையானது எனது ஸில்க் சட்டையில் நன்றாகப் பதிந்துவிட்டது. அதுதான் காதல் "பரிசு" போலிருக்கிறது?

(ஹிந்திக் கதையின்
மொழிபெயர்ப்பு.)

போட்டி!

விஸிடர் :—நீ என்ன குற்றம் செய்தாய்?

கைதி :—ஸர்க்காரோடு போட்டிங்க.

விஸிடர் :—போட்டியா?

கைதி :—ஆமாங்க நாணயம் செய்யற போட்டி போட்டேங்க அதுக்கு வந்து......

திரை உலகம்

சவிதா தேவி, மோதிலால், அவர்கள் சொந்தக் கம்பெனியான, சுதாமா பிக்சர்ஸாரின், "உன் இஷ்டம்போல்" என்ற படத்தை ஸர்வோத்தம் பாதாமி டைரக்ட் செய்துவிட்டார். இதில் சவிதாவுடன் மோதிலால் மஸார்கான், குர்ஷித் முதலியவர்களும் நடிக்கின்றனர். இவர்களுடைய அடுத்த படத்திற்கான ஏற்பாடுகளை பாதாமி செய்து வருகிருர்.

* * *

மினர்வாவின் "புகார்" என்ற படம் எடிட்டிங் அறையில் இருக்கிறது. ஷோராப் மோடி, சந்திரமோகன், நஸீம் முதலியவர்கள் நடிக்கின்றனர். சீக்கிரம் திரைக்கு வந்துவிடும். இவர்களுடைய அடுத்த படமான "உயில்" என்ற படத்தைத் தயாரிக்க டைரக்டர் கே. எம். முல்தானி ஏற்பாடு செய்து வருகிருர்.

* * *

சாந்தாராமின் "வாழ்வதற்கே உயிர்" என்ற படம் சீக்கிரம் முடிந்து திரைக்கு வந்துவிடுமாம். சாகு மோடக், சாந்தா ஹுப்ளி கார், ராம் மராத்தே நன்ருக நடித்திருக்கிருர்கள். அவர்களுடைய புராணப் படமான "பக்த தியானேச்வரை"ப் படேலே, தாம்லே, இருவரும் அநேகமாக முடித்துவிட்டார்களாம்.

* * *

ஹன்ஸ் பிக்சர்ஸாரின், 'உல்லாசத்தைத்தேடி' என்ற படத்தை பி. வி. அல்டேகர் டைரக்ட் செய்கிருர். சிறந்த நடிகரான பாபுராவ் பண்டேர்கரும், உஷாதேவி முதலியோரும் நடிக்கின்றனர். இந்தக் கதையை எழுதியவர் பிரசித்தி பெற்ற மஹா ராஷ்ட்ர ஆசிரியர் வி. எஸ். காண்டேகர்.

* * *

பங்கிம் சந்திரரின் நாவலான, கபால குண்டலாவை டைரக்டர் பஹானி மஜூம்தார், அநேகமாக முடித்துவிட்டார். இதில் லீலா தேசாய், கமலேஷ் குமாரி, ஜகதீஷ், நஜ்மல் உசேன் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

டைரக்டர் நிதின்போஸ், 'துஷ்மன்' என்ற படத்தை வங்காளியில் "ஜீவன் மரண்" என்று பெயர் வைத்து எடுக்கிருர். அதே பழைய நடிகர்கள்தான் நடிப்பார்கள்.

பிலிம் கார்ப்பரேஷன் கம்பெனியார், டைரக்டர் கேதார் சர்மா வின் டைரக்ஷனின் கீழ் அடுத்த படத்தை எடுப்பார்களாம். அமர் ஜோதியில் புகழ் பெற்ற நந்தரேகா அதில் நடிப்பார்.

* * *

லாகர் பிலிம் கம்பெனியாரின் 'வாழ்க்கைத் துணை' என்ற படத்தில் சுரேந்திரா, மாயா, அனுராதா, புதோ அத்வானி, முதலிய வர்கள் நடிக்கின்றார்கள். டைரக்டர் நந்தலால் சீக்கிரம் படத்தை முடித்து விடுவாராம்.

* * *

ஸ்ரீமதி ஸாதனா போஸின் கணவரான மது போஸ் ஒரு நடனப் படத்தை ஹிந்தி—வங்காளி ஆகிய இரண்டு பாஷைகளில் எடுத்து வருகிறார். இதில் ஸாதனா போஸ், வங்காளக் குயில் பத்மா தேவி, தீரஜ பட்டாசார் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

* * *

'கள்ளங்கபடற்ற ஹிருதயம்' என்ற படம் பம்பாய் பிலிம் சிடியில் தயாராகி வருகிறது. இதில், மாயா, பிரேம் அதீப், அருண், புதோ அத்வானி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

சென்னை நேஷனல் மூவிடோன் ஸ்டூடியோவிற்கு யோகம் வந்துவிட்டது. மயூரா பிலிம்ஸார் அதை எடுத்து வேலை செய்யப் போகிறார்கள். முதலில் ஒரு புராணப் படமும், பிறகு அல்லாவு தீனும் எடுக்கப்படுமாம். இரண்டிற்கும் டைரக்டர் ஸ்ரீயோகிதான்.

* * *

ராயல் டாக்கியின் கூட்டுறவில் தயாராகும் சந்திரப் பிரபா சினிடோன் கம்பெனியாரின் 'சகுந்தலை'க்கு இன்னும் துஷ்யந்தன் கிடைக்கவில்லை. யாராவது புதிய அமெட்ச்யூராகத் தேடுவதாகக் கேள்வி.

* * *

"பக்த புண்டரீகன்" என்ற வேல் பிக்சர்ஸாரின் படம், "பாண்டுரங்கன் ஜே ஜே விட்டல்" என்று புதுப் பெயருடன் வெளி வரப்போகிறது. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியும் சிவபாக்கியமும் இதில் நடிக்கின்றனர்.

* * *

டைரக்டர் முருக தாஸா பாஞ்சாலி சுயம்வரம் என்ற ஒரு புராணக் கதையை சமீபத்தில் டைரக்ட் செய்யப் போவதாக ஒரு வதந்தி உலாவுகிறது.

* * *

பம்பாய் வாடியா மூவிடோனில் தயாராகும் 'பாரத கேசரி' என்ற படத்தில் மாதிரிமங்கலம் நடேசய்யர், லக்ஷ்மணன், பேபி

ருக்மணி முதலியவர்கள் நடிக்கிறார்கள். சீக்கிரம் திரைக்கு வந்துவிடும்.

* * *

சேலம் மோஹினி பிக்சர்ஸாரின் 'கவி காளமேகம்' அடையாறு பிராக்ஜோதி ஸ்டுடியோவில் படப்பிடிப்பு வேலை ஆரம்பமாகிவிட்டது. டைரக்டர் டங்கன் தன் வேலையை ஆரம்பித்துவிட்டார்.

* * *

கிருஷ்ணா பிக்சர்ஸாரின் 'அபலை' முடிந்துவிட்டது. சீக்கிரம் திரைக்கு வந்துவிடும்.

* * *

கோவை பிரிமியர் சினிடோனில் தயாராகும் 'வாமனவதார'த்தில் ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் புகழ்பெற்ற—வசுந்தரா தேவி நடிக்கிறாராம். டைரக்டர் பிரேம் சேத்னு டைரக்ட் செய்வார்.

* * *

மன்மத விஜயத்தை டைரக்ட் செய்து முடித்துவிட்டார் ஸ்ரீ பட்டுவய்யர். பிரபல அமட்ச்யூர் நடிகர், ஸ்ரீ சுப்ரமண்யம், அரங்கநாயகி முதலியவர்கள் நடித்திருக்கின்றனர். சீக்கிரம் திரைக்கு வந்துவிடும்.

* * *

யூனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் வினியோக உரிமைகள் பூராவும் ஸ்ரீ வாசன் ஏற்றுக்கொண்டு விட்டதால், இனி ஸ்ரீ சுப்ரமண்யம், இதர வேலைகளில்லாமல் படம் பிடிப்பு வேலையில் ஈடுபடுவாராம். பத்திரிகைத் தொழிலில் அநுபவம் வாய்ந்த ஸ்ரீ வாசனின் சினிமாப் பிரவேசம் தமிழ் சினிமா உலகிற்கும் நன்மை என்று கருதப்படுகிறது.

* * *

பிரேமா பிலிம்ஸாரின் "மாத்ரு பூமி" எடிட்டிங் அறையில் இருக்கிறது. சீக்கிரம் திரைக்கு வந்துவிடும். இதில் சந்தானம் எ. கே. ராஜலக்ஷ்மி இருவரும் நடித்திருக்கிறார்கள். வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோவில் இதற்காக சில அபூர்வ சீன் ஜோடனைகள் எல்லாம் செய்தார்களாம்.

* * *

அசந்தாஸின் 'மணிமேகலை' சீக்கிரம் ஒரே காலத்தில் தமிழ்நாட்டில் பல தியேட்டர்களில் காட்டப்படுமாம். ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளும், கொத்தமங்கலம் சீனுவும் சிறப்பாக நடித்திருக்கிறார்களாம்.

கூட்டுறவு

(ஆசிரியர்: அ. முத்தையா, எம். ஏ., பொருளாதார உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை. பதிப்பகம்; புத்தறிவுப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 2-0-0.)

ஆசிரியர் முத்தையாவைப் பற்றி வாசகர்களுக்கு அதிகம் எழுதவேண்டிய தேவை இல்லை. கடன் நிவாரணச் சட்டத்தைப் பற்றி அவர் எழுதியிருக்கும் புஸ்தகம் அவ்வளவு பிரபலமானது.

'கூட்டுறவு' என்ற இந்த புஸ்தகமும் சரியான சந்தர்ப்பத்தில் தான் வெளியாகி இருக்கிறது. சென்னை சர்க்கார் நமது மாகாணத்தில் கூட்டுறவு இலாகாவையே சீர்திருத்தி அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். கூட்டுறவு விசாரணைக் கமிட்டி கூட தன் வேலையைச் செய்து முடித்துக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பல அம்சங்களைத் தெளிவாக விவரித்து ஆசிரியர் எழுதியிருக்கும் புஸ்தகம் மிகவும் உபயோகமானது. அதுவும் தமிழில் இப்பேர்ப்பட்ட புஸ்தகம் இவ்வளவு அழகான பதிப்பாக வெளிவருவது மிகவும் விசேஷமாகும்.

கூட்டுறவு முறையே பண்டசாலைகள், பாங்குகள், விவசாய சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், என்ற முக்கியமான அம்சங்களில்தான் அதிகமாக விருத்தியடையும். கூட்டுறவு பொது மக்களின் மனப்பான்மையில் பிறப்பது; அவர்களுடைய ஊக்கத்தில்தான் முக்கியமாக அது தழைக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் ஓரளவு தலையிட்டு அதன் அபிவிருத்திக்குப் பாதுகாப்பும் உதவியும் அளிக்க வேண்டும். இந்தவிதமாக கூட்டுறவு இயக்கத்தின் பிறப்பு, வளர்ப்பு, தற்கால நிலை, செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் முதலிய விஷயங்களில் சர்க்கார் பொது மக்கள் இருவரும் பங்கெடுத்துக் கொள்ளும் வகையை ஆசிரியர் வெகு விரிவாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிறார்.

அவர் எழுதியிருக்கும் நடை எளியதாயும் தெளிவாகவும் இருக்கிறது. ஆனால் சில ஆங்கிலப் பதங்களின் மொழிபெயர்ப்பு மட்டும் கரடு முரடாக இருக்கிறது. Consumers' Co-operative movements என்பதை பொருள் நுகர்வோரின் கூட்டுறவு இயக்கம் என்று மொழி பெயர்த்திருக்கிறார். பொருள் போகம் என்று பெயர்த்தால் நலம் என்று தோன்றுகிறது.

உயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது புத்தகம். 312 பக்கங்களுக்கு ரூ. 2-0-0 விலை அதிகமே இல்லை.

"ரயத்து பிட்டா"

"ரஞ்சனன்"

1869)

"சினிமாவைப் பிரசாரத்திற்கு உதவியாக வைத்துக்கொள்ள முடியுமா?" என்ற கேள்வியை ஸ்ரீராமபிரம்மம் கேட்டுவிட்டு, அவரே அன்று அதற்கு பதிலும் சொன்னார். "முடியும் என்று நினைத்து ஆரம்பித்து ஏதோ என்னால் கூடியவரை முயற்சி செய்திருக்கிறேன்" என்றார். சொல்லியதோடு நிற்காமல் உண்மையாகவே முயன்றும் இருக்கிறார்.

இது நவயுகப் புரட்சியின் காரணமாக விழிப்படைந்த ஜமீன் ரயத்துக்களுக்கும், ஜமீன்தாருக்கும் உள்ள போராட்டத்தைச் சித்திரிக்கும் படம். போராட்டத்தின் காரணத்தைப் பின்னணியில் நிறுத்திவிட்டு போராட்டத்தையே நாம் காணும்படி டைரக்டர் செய்திருக்கிறார். ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் "கொள்கைச் சண்டை!" ஜமீன்தாருக்குத் தோல்வி; குடிகளுக்கு வெற்றி. இதுதான் கதை.

கதைக்குப் பொறுப்பாளி ஸ்ரீராமபிரம்மம் தான். இந்தக் கதையில் கூட அவர் மனித உணர்ச்சிகளின் உன்னத சிகரங்களை சில சமயங்களில் எட்டிவிடுகிறார். "மானத்தைப் பெரிதாக மதிப்பவனாக இருந்தால் வாங்கின பணத்தைக் கீழே வை!" என்று கேட்டவனுக்குப் பதிலாக, மனைவி அனுப்பிய நகைகளைக் கொடுத்துவிட்டு, உள்ளே வந்த குடியானவன், மனைவியைப் பார்த்து, "லக்ஷ்மி! உன் நகைகளை எல்லாமா கழற்றிக் கொடுத்துவிட்டாய்!" என்று கேட்கிறான். அதற்கு அவள் சொல்லும் பதிலில் என்ன உன்னத சோகம், தைரியம்! "லக்ஷ்மிக்கு செல்வக் குறை கூட உண்டா?" என்று அவள் பதில் சொல்லுகிறாள்.

மற்றொரு இடத்தில், ஜமீன்தார், தன்னுடைய மகனை இழந்துவிட்டு, "அவன் தான் எங்களுடைய உயிர். நீ ஒளித்துவைத்திருந்தால் தயவு செய்து கொடுத்துவிடு" என்று உள்ள முருகிக் குடியானத் தலைவனைக் கேட்கிறார். அவன் அதற்கு "மகாராஜா! புத்திர சோகத்தை நானும் அனுபவித்தவன். புத்திரனை இழப்பதென்றால் என்னவென்பது எனக்கும் தெரியும். உண்மையாய்ச் சொல்லுகிறேன். உங்கள் குழந்தையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஜமீன்

தார்கள் மேல் எங்களுக்குப் பகையே இல்லை. நாங்கள் எதிர்ப்ப தெல்லாம் ஜமீன் தாரிக் கொள்கைகளையே. அதற்கு இது போன்ற சூழ்ச்சிகளே தேவையில்லை. அஹிம்ஸா சக்தி எங்கள் கையிலிருக் கிறது" என்று சொல்லும் பதிலில் என்ன கவிதா உணர்ச்சிகளைக் கொட்டி இருக்கிறார் ஆசிரியர்!

இவைகள் கதையின் சிறந்த பாகங்கள். சிறந்த பாகங்கள் கதையில் இவைகள் தான் என்றுகூடச் சொல்லிவிடலாம். கதையின் முதல் பாகம் ரயில்வண்டி புறப்படுவதைப் போல் மெள்ள ஊர்ந்து போகிறது. நடுவில் பலபாகங்கள் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு நிற்கின்றன. கதைக்கும் அவற்றிற்கும் சம்பந்தமே இல்லாமலிருக் கிறது. கத்தரிக்கோலை பிரயோகம் செய்தவர் கொஞ்சம் அதிகமாகவே செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

எல்லோருமே கூடிய மட்டும் அழகாக நடித்திருக்கின்றனர். முக்கியமாக ஸ்ரீ ராகவாசாரி, சூர்யகுமாரி, ஜமீன்தாராக நடித்தவர் இவர்களைக் குறிப்பிடவேண்டும். வேஷப் பொருத்தம் சரியாக அமைந்திருப்பதனுல் நடிப்பும் நன்ருக சோபிக்கிறது. 'மேக்-அப்' முதல்தரம் என்பதற்கு ஜமீன்தாரின் வேஷம் ஒன்றே போதுமானது.

சங்கீதம் சுமாராக இருக்கிறது. கொஞ்சம் அதிகமாக இருப்ப தால் அது கேட்பவர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. அது நிச்சயமாய் சங்கீதத்தின் தரத்தினுலல்ல. அதன் அளவினுல்.

சங்கீதத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒலிப்பதிவைப்பற்றித் தான் ஞாபகம் வரும். ஒலிப்பதிவு மிகவும் நன்ருக இருக்கிறது. அதை மறக்கவே இடமில்லாமல் ஸ்ரீ விசுவநாதன் செய்திருக்கிருர். படத்தின் வெற்றிக்கு அவரும் காரணம் என்றே சொல்லவேண்டும். மொத்தத்தில் இது ஒரு நல்ல படம். தெலுங்குப் படங்களின் மதிப்பை இது ஒருபடி அதிகப்படுத்துகிறதே ஒழிய குறைக்கவில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

நிமிஷக் கதைகள்!

புத்தி மாறிவிட்டது.

வீடு வாங்க வந்தவர் :—தாங்கள் இந்த வீட்டை விற்கப் போவதாகக் கேள்விப்பட்டு வந்திருக்கிறேன். வாஸ்தவந்தானா?

வீடு விற்பவர் :—ஆமாம்... ஆனல் இப்போது விற்கவேண்டாமென்று தீர்மானித்துவிட்டேன். இதை விற்பதற்காக நான் ஏற்படுத்தியிருந்த தரகன் இந்த வீட்டைப்பற்றி வர்ணிக்க ஆரம்பித்ததும் இவ்வளவு அழகான வீட்டை விற்கிறேமே என்று தோன்றிவிட்டது.

* * *

பரவாயில்லை.

"இந்த ஓட்டலில் பெரிய மனுஷர்கள் வந்து தங்குவதுண்டோ?"

"உண்டு. அதனல் பாதகமில்லை. நீங்கள் வேண்டுமானலும் தங்கலாம்."

* * *

சொன்னல் கேட்பதில்லை.

"என்னைத் தயவு செய்து கடன் கேட்கவேண்டாம். கடன் கொடுத்தால் அது நல்ல சிநேகிதத்தைக் கெடுத்துவிடுகிறது."

"பாதகமில்லை. ஒரு ஐந்து ரூபாய் கொடுங்கள். நாம் ஒன்றும் அப்படி நல்ல சிநேகிதர்கள் இல்லையே."

தொலைந்தால் போதும்!

மாப்பிள்ளை மாமனர் வீட்டில் வெகு நாள் தங்கிவிட்டார். ஒரு நாள் மாப்பிள்ளைக்கும் மாமனருக்கும் பெரிய சண்டை வந்துவிட்டது. மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு, "உமது வீட்டில் இனி காலடி எடுத்து வைப்பதில்லை" என்று பேசிக்கொண்டே தெருவில் போய் அங்கு நின்றுகொண்டிருந்த வண்டியில் ஏறப்போனர். வண்டிக்காரனைப் பார்த்து, "ஸ்டேஷனுக்குப் போக என்ன சத்தம்?" என்று கேட்டார்.

வண்டிக்காரன் :— நீங்க ஒண்ணும் சத்தம் கொடுக்கவேண்டியதில்லைங்க. இந்த வீட்டு எஜமான் என்கிட்டே காலையிலேயே சத்தத்தைக் கொடுத்து உங்களை கொண்டு ஸ்டேஷன்லே விட்டுடச் சொன்னங்க.

* * *

புறப்பட நேரமாகும்.

புருஷன் மனைவியை சினிமாவுக்குக் கிளம்பச் சொன்னன்.

மனைவி :—ஒரு நிமிஷம்! அதோ அந்தப் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருங்கள். இதோ வந்துவிடுகிறேன்.

புருஷன் :—இந்தப் புஸ்தகம் மட்டும் போதாது, இதில் 500 பக்கங்கள்தான் இருக்கின்றன.

இன்னும் இரண்டு புஸ்தகங்கள் கொடு.

எப்படி முடியும்?

பையன் :—அப்பா! உங்களைக் காலையில் எழுப்பவேண்டுமா?

தகப்பனார் :— வேண்டாம்; எழுப்பவேண்டுமானால் அப்போது கூப்பிடுகிறேன்.

* * *

உயிர் போகுமா?

மனைவி :— நீங்கள் சொன்ன ஹாஸ்யக் கதைகளையெல்லாம் என் அம்மாவிற்குச் சொன்னேன். அவள் அதைக் கேட்டுச் சிரித்துச் சிரித்து உயிரையே விட்டுவிடுவாள் போலிருந்தது.

புருஷன் :— அப்படியா? அவளை இங்கே வரச் சொல்; இன்னும் ஹாஸ்யக் கதைகள் சொல்கிறேன்.

* * *

ஒரு போடு!

ஒரு ஸ்திரீ தன்னுடைய வயதைக் குறைத்துக் குறைத்துச் சொல்லிக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அவள் சிநேகிதையிடம், "எனக்கு முப்பது வயது மதிப்பிடுவார்களா?" என்று கேட்டாள்.

சிநேகிதை :—அதெப்படி முடியும்? பத்துப் பதினைந்து வருஷத்துக்கு முந்திச் சொல்லலாம்.

* * *

குருட்டு வைத்தியர்.

வைத்தியர் :— (நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு) ஐயோ, உன் நாடி கைக் கடிகாரம் மாதிரியல்லவா அடித்துக்கொள்கிறது.

நோயாளி :—ஸ்வாமி! சரியாய்ப் பாரும். நீர் எனது கைக் கடிகாரத்தையல்லவா பிடித்துக் கொண்டிருக்கிறீர்?

* * *

அட்வான்ஸ்.

நண்பன் :—இந்தா நீ கடனாகக் கொடுத்த பத்து ரூபாய். இதைத் திருப்பி வாங்கிக்கொள்.

கடன் கொடுத்தவர் :—வேண்டாம். அதை நீயே வைத்துக் கொள்! இன்னொருதரம் என்னிடம் பத்து ரூபாய்க்கு வருவாயல்லவா? இப்போதே இருக்கட்டும்.

* * *

அட பகாசுரா!

"டாக்டர் உன்னை என்ன ஆகாரம் சாப்பிடச் சொன்னார்?"

அவர் சொன்னபடி கஞ்சி குடித்தாகிவிட்டது. இப்போது இதோ சாப்பிடப் போகிறேன்.